32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

CENTRE
REGISTERED FRENCH CENTRE
FRENCH CLASSES
ஆரம்பம்: 19.04.2014 Sat. 10.30 a.m. No. 40, Palay Road, Jaffna
ஆரம்பம்: 22.04.2014 Tue. 11 am No. 181, 1st Floor, Main Street, Nelliady
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 466

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 141 வள்ளுவர் ஆண்டு: 2045
சித்திரை 03 , புதன் 16.04.2014

# தென்னாபிரிக்க அனுசரணைக்கு ஒத்துழைப்பதற்கு நாம் தயார்



## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு
## அரசின் நிலைப்பாடு குறித்தும் கேள்வி

கொழும்பு, ஏப்ரல்16
"கடந்த மூன்று தசாப்த காலமாகப் போர் நடைபெற்ற இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். அதற்கு இங்கு நடந்தேறிய கறைபடிந்த சம்பவங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூறியே ஆகவேண்டும். அதனைத் தென்னாபிரிக்கப் பயணத்தின்போது அந்த நாட்டு முக்கியஸ்தர்களிடம் நாம் விரிவாக எடுத் துக் கூறியுள்ளோம்" - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை தென்னாபிரிக்கா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கொண்ட கூட்டமைப்பின் உயர் மட்டக் குழு கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பியது. அந்தப் பயணம் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும் போது ; "தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். அதற்கு எமது ஆதரவைத் தெரிவித்துள்ளோம். ஆனால் இலங்கை அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்குமா என்பதில் எமக்குச் சந்தேகம் உள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## சரவணபவன் எம்.பிக்கு நேற்று கொலை மிரட்டல்

யாழ்ப்பாணம், ஏப்.16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு தொலைபேசியூடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சமயமே குறித்த கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## கோபியின் தொலைபேசி அழைப்புகள் ஆராய்வு

### பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஏப்.16
விடுதலைப் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் அளிக்க முயன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, கடந்த வாரம் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் போராளி கோபி மேற்கொண்ட தொலைபேசி அழைப்புகள் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரி

21ஆம் பக்கம் பார்க்க

## மிரட்டப்படுகின்றார் பஸ் உரிமையாளர்

### இராணுவச் சிப்பாய்க்கு எதிரான முறைப்பாட்டை மீளப் பெறுமாறு

யாழ்ப்பாணம்,ஏப்.16
பண்ணை தனியார் பஸ் நிலையத்தில் இராணுவச் சிப்பாயால் தாக்கப்பட்ட பஸ் உரிமையாளரைத் தொலைபேசியூடாகத் தொடர்புகொள்ளும் இனந்தெரியாதோர் அந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டைத் திரும்பப் பெறுமாறு மிரட்டுகின்றனர் என்று கூறப்படுகின்றது.
புத்தாண்டுக்கு முதல் நாள், பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்தில் வைத்து, இராணுவச் சிப்பாய் ஒருவர் பஸ் உரிமையாளரைத் தாக்கியிருந்தார்.

21ஆம் பக்கம் பார்க்க

எம்மைப் பின்தொடருங்கள்...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## காணாமற்போனோர் குறித்து போதிய ஆதாரங்கள் இல்லை

### தம்மால் முடிந்தவற்றை செய்கிறோம் என்கிறது ஜனாதிபதி ஆணைக்குழு

யாழ்ப்பாணம்.ஏப்.16
போர்க் காலத்தில் காணாமற்போனவர்கள் என்று ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக பதிவு செய்யப்பட்ட சில சாட்சியங்களுக்கு எதுவித ஆதாரங்களும் இல்லை என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் குணதாச. ஒரு சில குடும்பங்களில் 9 அல்லது 10 பேர் வரையில் காணாமற்போயிருப்பதால் அந்த உறவினர்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்த சிலரது சாட்சியங்களை விசாரணை செய்யும் போது, காணாமற்போனவர் எப்படிக் காணாமற்போனார்? அல்லது எங்கே காணாமற் போனார்? போன்ற எந்தவொரு தகவல்களும் இல்லை. அதனால் மேற்படி முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் மிகப்பெரிய இடர்பாடுகளை எதிர்கொண்டுள்

21ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய அமைப்புக்கு இலங்கையால் வந்த ஆபத்து

### நிதியுதவியை நிறுத்தியது கனடா

கொழும்பு, ஏப்.16
பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுள்ள நிலையில், இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் நிலைமையைக் காரணம் காட்டி பொதுநலவாய அமைப்புக்கான 20 மில்லியன் டொலர் நிதியை கனடா இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது.
இது தொடர்பாக, கருத்து வெளியிட்டுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்,
"இலங்கையில் இடம்பெற்ற மோசமான சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு,

21ஆம் பக்கம் பார்க்க

## கைதான நான்கு பேர் விடுதலை

யாழ்ப்பாணம்,ஏப்.16
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மேலும் 4 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் 22 பேர் வரையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
கடந்த ஒரு மாத காலமாக

21ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப் போரில் இந்தியப் படைகள்; சட்டநடவடிக்கை கோரி நீதிமன்றில் மனு

லண்டன்.ஏப்.16
இந்திய நாடாளுமன்றத்தினதோ, குடியரசுத் தலைவரினதோ ஒப்புதலின்றி இந்தியப் படையினர் இலங்கையின் இறுதிப் போரில் பங்கெடுக்க அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறித்து சிறப்பு விசாரணை நடத்தி சம்பந்தப்பட் டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரும் மனு ஒன்று இந்திய உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
புதுடில்லியைச் சேர்ந்த, டில்லி தமிழ் சட்டவாளர் சங்கத்தின் செயலாளரான ராம்சங்கர் என்ற சட்டவாளரே இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனு மீதான விசாரணை இன்று நடத்தப்படவுள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் இந்திய இராணுவத்துக்கு சீக்கிய அதிகாரி ஒருவரே தலைமை தாங்கியதாகவும், இந்தியப் படையினர் சிலர் போரில் காயமடைந்

21ஆம் பக்கம் பார்க்க

## பலமான பொருளாதாரம் மூலம் அனைத்தையும் வெற்றி கொள்ளலாம்

### "மாற்றத்துக்கான சாதனையாளன்" பேராசிரியர் சிவா சிவானந்தன் கூறுகின்றார்

மிக முக்கியமானது பொருளாதாரம். அது பலமாக இருந்தால் ஏனைய பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். தென்கொரியாவைப் பாருங்கள். அங்கு பொருளாதாரம் பலமாக இருக்கின்றது. நாமும் அந்த நிலையை அடையவேண்டும். எனது பலத்தை வைத்து என்ன செய்யலாம் என்று யோசிக்க வேண்டும். சோலர் சக்தி குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நாமே சோலரை கையாளும் திறனுக்கு வரவேண்டும். யாழ். மண்ணில் பாவனைக் காலம் என்பது தரமானதாக உள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் "மாற்றத்துக்கான சாதனையாளர்" விருது பெற்ற பேராசிரியர் சிவானந்தன்.
'உதயன்' பத்திரிகையின் ஆதரவுடன் யாழ்.றோட்டறிக் கழகம் நடத்திய சாதனையாளர் சிறப்புரை நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே பேராசிரியர் சிவானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

21ஆம் பக்கம் பார்க்க



உதயன் பத்திரிகை அலுவலகத்தில்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்

மேலதிக புகைப்படங்களுக்கு www.facebook.com/uthayan.print

# இலங்கை - இந்திய மீனவர் பேச்சுக்கள் மே மாதத்தில்

## அறிவித்தது தமிழக அரசு

இராமநாதபுரம்.ஏப்.16

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சு எதிர்வரும் மே மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் என்று தமிழக அரசு நேற்றுமுன்தினம் இரவு அறிவித்துள்ளது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையில் சுமுகமான உறவை ஏற்படுத்தி மீனவர்களது பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இரு நாட்டு மீனவர்கள் இடையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாம் கட்ட பேச்சு கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டாம் கட்ட பேச்சு கொழும்பில் நடத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி பேச்சு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் விடுவித்தால் மட்டுமே மீனவர்கள் பேச்சில் பங்கு பற்றுவர் என்று தமிழக அரசு திடீர் அறிவிப்பு செய்திருந்தது. அதனால் மார்ச் மாதம் நடைபெறவிருந்த மீனவர்களது பேச்சு இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து நட்புறவில் கைது செய்யப்பட்ட மீனவர்களும் படகுகளும் விடுவிப்பு செய்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் தமிழக அரசு இந்திய மத்திய வெளியுறவுத்துறை இணைச் செயலாளருக்கு மீனவர்களது பேச்சுக்கு ஒப்புதல் வழங்கி கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அதையடுத்து எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் மீனவர்களது பேச்சு கொழும்பில் நடைபெறும் என்றும் அதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது. (ற-14)

# பொதுபல சேனா அமைப்பு பயங்கரவாதப் பட்டியலில்

## இணைத்தது ரி.ஆர்.ஏ.சி

கொழும்பு, ஏப்.16

இலங்கையில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காகக் குரல் கொடுத்து வருவதாகக் கூறும் பொது பல சேனா ஒரு பயங்கரவாத அமைப்பு என்று பட்டியலிட்டுள்ளது பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு (ரி.ஆர்.ஏ.சி) எனும் அமைப்பு.

பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு உலக நாடுகளில் அரசியல் வன்முறை தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு செய்யும் சர்வதேச நிபுணர்களை கொண்ட ஒரு ஆய்வு மையமாகும்.

பொது பல சேனாவை பயங்கரவாத அமைப்பாகப் பெயரிட்டமை தொடர்பாக விளக்கமளித்துள்ள அந்த அமைப்பு, "அவர்களின் நடவடிக்கைகள் மென்மையான இலக்குகள் மீது பயங்கரவாதச் செயல்களை ஒத்ததாக இருக்கின்றது" - என்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, பயங்கரவாத அமைப்பு பட்டியலில் பொதுபல சேனா அமைப்பின் பெயர் இணைக்கப்பட்டுள்ளமை நகைப்புக்குரியது என்று தெரிவித்துள்ளார் அந்த அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி டிலந்த வித்தானகே.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"எமது அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக பெயரிடுவதற்கு முன்னர் எங்களிடம் கலந்தாலோசித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாததால் ஜனநாயகப் பிரச்சினை ஏற்படுகின்றது.

மியன்மாரின் விரத்து தேரருடன் பொதுபல சேனா தேரர் சந்தித்து படம் எடுத்துக் கொண்டதால் எம்மை பயங்கரவாத அமைப்பு என்று கூற முடியாது. அப்படியாயின் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த நோர்வே பயங்கரவாதப் பட்டியலில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுபல சேனா பயங்கரவாத அமைப்பு இல்லை அது மிகவும் பகிரங்கமாக செயற்படும் அமைப்பு. சிங்கள பௌத்த மக்களுக்கு உலகில் விடுக்கப்படும் அழுத்தம் இதன்மூலம் வெளிப்படுகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நிஷா தேசாய் - சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு



வொஷிங்டன், ஏப்.16

இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் நோர்வேயின் முன்னாள் அமைச்சரும் - இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சின் போது ஏற்பாட்டாளராகப் பணியாற்றியவருமான எரிக் சொல்ஹெய்ம்.

கடந்த வெள்ளிக்கிழமை வொஷிங்டனில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட எரிக் சொல்ஹெய்ம்,

"இலங்கையில் அனைத்து சமூகங்களுக்குமான உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது." - என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்புக் குறித்து திருப்தி வெளியிட்டுள்ள நிஷா தேசாய் பிஸ்வால், அவரது அறிவைவிட எல்லா இலங்கையர்களினதும் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீது கொண்டுள்ள கரிசனை தம்மை ஈர்த்தது என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)



இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தினக்குரல் பத்திரிகையின் கரவெட்டிப் பிரதேச செய்தியாளர் எஸ்.செல்வதீபனை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மருத்துவமனைக்குச் சென்று நலன்விசாரித்தார்.

# இலங்கை மீதான விசாரணை விரைவில் ஆரம்பிக்கப்படும்

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், ஏப்.16

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை தொடங்கப்பட்டு, ஆதாரங்களைத் திரட்டும் செயல்முறைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம்ஹேக்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"துறைசார்ந்த நிபுணர்களால் இந்த விசாரணைகள் நடத்தப்படுவதுடன், பரந்தளவிலான தகவல்கள் மற்றும் சான்றுகள் ஆய்வு செய்யப்படும். ஐ.நா மனித உரிமைகள் சபை மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகளுக்கு பிரிட்டன் அரசும் முழுமையான ஆதரவை வழங்கும்.

தீர்மானத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை அரசை ஊக்குவிப்பதற்கு, நாம் அவர்களுடனும், அனைத்துலகப் பங்காளர்களுடனும் தொடர்ந்து பணியாற்றுவோம்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# புதிய வாக்காளர் பெயர் பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஏப்.16

இந்த ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நட்வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மே மாத நடுப் பகுதியில் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்புக்குரிய விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன்.

ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினமாக தேர்தல்கள் திணைக் களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் சகல வாக்காளர்களையும் பதிவு செய்வதற்குரிய தினமாகக் கொள்ளப்படுகின்றது. இதற்குரிய வகையில் வாக்காளர் பதிவுக்குரிய ஏற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும் கிராம சேவையாளர்களுக்கான விளக்க கருத்துரைகள் இடம்பெற்று வருகின்றது. கிராம சேவையாளர்கள் ஊடாகவே பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், அவர்களுக்குரிய செயலமர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"எதிர்வரும் மே மாத நடுப் பகுதியிலிருந்து கிராம சேவையாளர்கள் வீடு வீடாக பி.சி. படிவத்தை விநியோகிக்க வேண்டும். ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் சகல வீடுகளுக்கும் விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குரிய வகையில் அடுத்த மாத நடுப்பகுதியிலிருந்து வேலைகளை எவ்வாறு திட்டமிட்டு முன்னெடுப்பது என்பது தொடர்பான செயலமர்வுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன."- என்று தெரிவித்தார். (ற-5)

# "ஊடகவியலாளர் மீதான தாக்குதலின் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன்னால் உடன் நிறுத்தப்பட வேண்டும்"

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த தினக் குரல் ஊடகவியலாளரான சிவஞானம் செல்வதீபன் இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த சம்பவம் தொடர்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ள இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இச் சம்பவம் குறித்து பொலிஸார் உரிய விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர் செல்வதீபன் யாழ்ப்பாணம் புறாப் பொறுக்கியில் வைத்து இனம் தெரியாத இருவரால் வழி மறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் கே.ஜெயேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும், அச்சுறுத்தல் விடுக்கப்படுவதும் வழமையான சம்பவங்களாகிவிட்ட நிலையே இன்று காணப்படுகிறது. இவ்வாறான சம்பவங்களானது ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக அமைவதால் இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த அரசு உரியநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதுவருட தினமான திங்கட்கிழமை இரவு எட்டு மணியளவில் ஊடகவியலாளரான செல்வதீபன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது வழிமறித்துத் தாக்கப்பட்டுள்ளார்.

'ஹெட் லைட்' இல்லாமல் மோட்டார் சைக்கிள்களில் செல்வதீபனின் மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்து வந்த சிலரே அவரை வழிமறித்துத் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இரும்புக்கம்பிகளால் தாக்கப்பட்ட போதிலும், தலைக்கவசம் அணிந்திருந்தமையால் தலையில் அதிர்ஷ்டவசமாக காயம் ஏற்பட வில்லை. இருந்த போதிலும் தோளி லும், கால்களிலும் காயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புள்ளவர்களை கைது செய்து சட்டத் தின் முன்பாக நிறுத்துவதற்கு அதற்குப் பொறுப்பானவர்கள் தவறிவிடுகின்றார்கள்.

இதனால் அச்சத்துடன் தமது பணிகளை முன்னெடுக்கவேண்டியவர்களாகவே ஊடகவியலாளர்கள் உள்ளனர்.

எனவே, இத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று அடையாளம் காணப்பட வேண்டும்.

அவர்களைச் சட்டத்தின் முன்பாக நிறுத்து வதற்கும் வடக்கிலுள்ள ஊடக வியலாளர்கள் சுதந்திரமாக தமது பணிகளை முன்னெடுக்கவும் உரிய நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

உதயன்
16.04.2014



## காட்சிப் பொருளாகவே தொலைக்காட்சிப் பெட்டி

### சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஏப். 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அனைத்துப் பிரிவுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் அவை இயங்காத நிலையில் காணப்படுவதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, விடுதிகள் ஆகியவற்றுக்குப் பொதுமக்களால் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அவற்றுக்கான கேபிள் அன்ரனாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கேபிள் அன்ரனாவுக்கான வருடாந்த கொடுப்பனவு செலுத்தாததால் கடந்த ஒரு வருட காலமாகத் தொலைக்காட்சிப் பெட்டிகள் செயற்படவில்லை. அவற்றை இயங்க வைக்க நோயாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டவேளையில் மாகாண சுகாதார அமைச்சின் கல்விப்பிரிவால் மலேரியா உட்பட பல்வேறு நோய்களின் தடுப்பு முறைகள் பற்றிய இறுவட்டும் பிளேயரும் கையளிக்கப்பட்டு அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே நேரத்தில் இயங்கக் கூடிய வகையில் இணைப்பு வழங்கி நோயாளர்கள் பொதுமக்கள் ஆகியோருக்கு நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனினும் அவை வழங்கி ஒன்பது மாதங்களுக்கு மேலாகியும் இணைப்பு வசதிகள் இன்னமும் வழங்கப்படாததால் தொலைக்காட்சிப் பெட்டிகள் நோயாளர்களுக்கு பயன்படாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இணைப்பு வசதியை ஏற்படுத்த மருத்துவமனை நலன் புரிசங்கத்தினர் முன்வந்து பொறுப்பெடுத்த போதிலும் இதுவரை அதனைப் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றும் தெரிய வருகிறது.

இதேவேளை மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குருந்தம் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விடுதிகளுக்குத் தொலைக்காட்சிகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் ஏனைய விடுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் இயங்காமல் உள்ள நிலையில் புதிய தொலைக்காட்சிப் பெட்டிகளை அன்பளிப்பாக வழங்குவதற்கு நலன்விரும்பிகள் பின்னடிப்பதாகவும் தெரிய வருகிறது. (வ-9)

# குடாநாட்டு மீனவர்களின் அத்துமீறலை தடை செய்க

### பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் முறையீடு

**பாஷையூர், குருநகர், சாவல்கட்டு, நாவாந்துறை மீனவர்கள் இங்கு வந்து தடை செய்யப்பட்டுள்ள தொழிலில் ஈடுபடுவதால் கடல் வளம் அழிவடைவதுடன் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.**

பளை, ஏப்.16

குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எமது கடற் பிரதேசத்துக்குள் அத்துமீறி வந்து தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு வருவதால் கடல் வளம் அழிவடைவதுடன் இந்தத் தொழிலையே நம்பி வாழ்ந்து வரும் மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

எனவே, இவர்களின் நலன் கருதி சட்ட விரோதமாக இடம்பெற்றுவரும் இந்த மீன்பிடியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடுத்து நிறுத்துமாறு பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாசம் , கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளைக் கோரியுள்ளது.

இதற்கான தீர்மானம் மேற்படி சமாசத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்திலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சமாசத் தலைவர் கே.தில்லைகுமார் தலைமையில் பச்சிலைப்பள்ளிக்கடற்றொழிலாளர் கூ.சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் சமாசப் பிரதேசத்தில் கேரதீவு பாலத்துக்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள கிளாலி, பளை, ஆனையிறவு ஆகிய பகுதிகளையும் பூநகரி, கறுக்காய் தீவு, பரந்தன் ஆகிய பகுதிகளையும் இணைத்திருக்கும் கடல் நீரேரியானது 500 மீற்றர் நீளமானதாகும். இந்தக் கடற்பரப்பில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் வந்து தொழில் செய்வதனால் எமது மீனவர்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திறந்திருந்த ஆனையிறவுப் பாலம் கடந்த சில வருடங்களுக்கு முன் மூடப்பட்டதனால் வெளியிடத்து மீன்கள் இக்கடற் பகுதிக்கு வருவதில்லை.

இங்கு உற்பத்தியாகும் இறால் மட்டும் தான் எமது பிரதான வாழ்வாதாரமாகும். இந்தத் தொழில் மூன்று மாதங்கள் மட்டும் தான் நீடித்திருக்கும். இந்த நிலையில் குடாநாட்டைச் சேர்ந்த பாஷையூர், குருநகர், சாவல்கட்டு, நாவாந்துறை மீனவர்கள் இங்கு வந்து தடை செய்யப்பட்டுள்ள தொழிலில் ஈடுபடுவதால் கடல் வளம் அழிவுடன் எமது வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.


இந்தக் கடலேரியை நம்பி வாழ்ந்து வரும் 800 குடும்பங்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு மேற்படி தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடலேரியில் தொழில் செய்பவர்கள் 5 1/2 முழத்துக்கு மேற்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதென்றும் ஆற்றை மறித்து வலை பாய்த்து தொழில் செய்வது நிறுத்தப்படவேண்டும் என்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-115)

# காரைநகர் துறைமுகப் பிள்ளையார் ஆலய மூலஸ்தான விக்கிரகம் திருட்டு



அபகரிக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் இதுதான். (முன்னர் எடுக்கப்பட்ட ஒளிப்படம்.)



ஆலய புனரமைப்புப் பணிகள் நடந்து வருகின்றன.

காரைநகர், ஏப். 16

காரைநகர் துறைமுகம் சித்திர கூட சித்தி விநாயகர் ஆலய மூலஸ்தான விக்கிரகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுப்போயுள்ளது.

புது வருடப்பிறப்பான நேற்று முன்தினம் அதிகாலை ஆலயத்துக்கு வழிபடச் சென்ற அடியவர்கள் மூலஸ்தான விநாயகர் விக்கிரகத்தைக் காணாது அதிர்ச்சியடைந்ததுடன் ஆலய நிர்வாகத்தினருக்கும் தெரியப்படுத்தினர்.

1986இல் துறைமுகப் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் கடந்த கால போர் இடர்களால் முற்றாக அழிவடைந்திருந்த இந்த விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தான விநாயகர் விக்கிரகம் எதுவித சேதமுமின்றி இருந்தது. கடந்த ஒருசில வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதிக்கு மக்கள் சென்றுவரக் கடற்படையினர் அனுமதி வழங்கியதை அடுத்து இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுக் கட்டுமானப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வந்த நிலையில் ஆலய மூலஸ்தான விக்கிரகம் திருட்டுப்போயுள்ளது.

ஆலய விக்கிரகம் திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினரால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குள் காணப்பட்ட ஏனைய விக்கிரகங்கள், பெறுமதியான பித்தளைக் குத்து விளக்குகள், உண்டியல் உள்ளிட்ட பொருள்கள் அப்படியே இருக்க மூலஸ்தான விநாயகர் விக்கிரகமே திருட்டுப் போயுள்ளமை மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது.

ஆலயத்தில் தற்போது தென்னிந்தியாவில் இருந்து சிற்பிகளை வரவழைத்து கருங்கல்லினால் மூலஸ்தானமும் அதன் மேல் விமானமும் (ஸ்தூபி பண்டிகை) தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ளது போன்ற அமைப்பில் முற்று முழுதாகக் கருங்கல்லினாலும் ஏனைய மண்டபங்கள் என்பனவும் பலகோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 60அடி உயரம் கொண்ட இரண்டு இராஜகோபுரங்களும் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகளும் நடைபெற்று வரும் வேளையில் ஆலய மூலஸ்தான விக்கிரகம் திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-250-86)

## சாவகச்சேரி வங்கிகளில் புதுவருட கொடுக்கல் வாங்கல்

தென்மராட்சி, ஏப்.16

சித்திரைப் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக நேற்று சாவகச்சேரி மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை திறக்கப்பட்டிருந்தன. அதனால் பெருமளவு வாடிக்கையாளர்கள் வங்கியுடனான புதுவருட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதைக் காண முடிந்தது.

வங்கிகளில் சேமிப்புச் சான்றிதழ்களைப் நேற்றுப் பெற்றுக் கொள்வோருக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் பரிசுப் பொருள்கள் பெறுவதற்காக சேமிப்புச் சான்றிதழ் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டியதையும் அவதானிக்க முடிந்தது. (வ-9)




யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இரத்ததான நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் குருதிக் கொடையாளர்களிடமிருந்து இரத்தத்தைச் சேகரித்தனர். யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழக அங்கத்தவர்கள், சகோதரக் கழகங்களின் அங்கத்தவர்கள், பொது மக்கள் எனப் பலரும் இரத்ததானம் வழங்கினர். (ஒ-135)

# மாமியின் இறப்பை தாங்க முடியாத மருமகள் அவரின் காலடியில் சாவு

தென்மராட்சி, ஏப்.16

வயது முதிர்ந்த மாமி இயற்கை எய்திவிட்டார். சாவுச் செய்தி எட்டியதும் வவுனியாவில் இருந்து ஓடோடி வந்தார் மருமகள். உறவினர்கள் கதறியழ, மருமகளும் அழுது குளறினார். திடீரென மருமகளும் துவண்டு சரிந்தார். மாமியின் காலடியில் அடுத்த கணம் மருமகளின் உயிரும் பிரிந்துவிட்டது.

இந்தச் சோகச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை அல்லாரை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்றைய இந்தச் சம்பவம் குறித்து உறவினர்கள் தெரிவித்ததாவது:-

மருமகளுக்கு வயது-57. சிவராசா இராசம்மா என்ற இவர் கணவனை இழந்தவர். கடந்த 2000 ஆம் ஆண்டு இடப் பெயர்வின் போது ஷெல் வீச்சில் சிக்கி அவரின் கணவர் - மாமியின் மகன் - உயிரிழந்து விட்டார். அதன் பின்னர் மாமியுடனேயே வாழ்நாளைக் கழித்து வந்தார். பாதுகாப்பு, பக்கத்துணை எல்லாம் மாமி தான்.

ஆனால் சில காலமாக அவர் வவுனியா பண்டாரிக்குளத்தில் வசித்து வந்தார்.

நேற்றுமுன்தினம் வருடப் பிறப்பன்று காலைதான் மாமியான முருகன் அன்னலட்சுமி (வயது-80) இயற்கை எய்தினார்.

அவரின் இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகள் நடத்த சமயத்தில் மருமகளின் திடீர் சாவும் நடந்துவிட்டது.

இந்த நிலையில் மாமியின் இறுதிச் சடங்குகள் நேற்று நடந்து முடிந்தன. மருமகளின் உடலை வவுனியாவுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது மருமகள் சகோதரர் ஒருவருடன் வவுனியாவிலே வாழ்ந்து வந்தார். அவரது பிள்ளைகள் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு உறவினர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை திடீர்ச் சாவடைந்த மருமகளான இராசம்மாவின் மரண விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனை முடிவுற்ற நிலையில் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் எஸ்.கணபதிப்பிள்ளை பணித்துள்ளார்.

(ஒ-9)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

கொழும்பு. ஏப்.16

கர்நாடக கடல் எல்லைக்கு திசை மாறிச் சென்ற இலங்கை மீனவர்கள் 16 பேர் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புக்கடல் பகுதியில் இருந்து மாறயன் எனும் படகில் சென்ற 16 மீனவர்கள் சட்ட விரோதமாக கடல் அட்டை பிடித்தனர் என்றும், அப்போது அவர்கள் திசைமாறி கர்நாடக கடல் எல்லையை அண்மித்த போது இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் கடற்றொழில் அமைச்சுக்கு அறி விக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தொடர்ச்சியாக சட்ட விரோதமாக கடல் அட்டை பிடிப்பவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு படகில் கோடிக்கணக்கான கடல் அட்டைகளை இலங்கைக் கடற்பரப்பில் வைத்து அவர்கள் பிடித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சு, "மீனவர்கள் தொடர்பான மேலதிக விவரங்கள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை . கடல் அட்டைகளுடன் மீனவர்கள் படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவல் மட்டும் கிடைக்கப்பெற்றுள்ளது" - என்று தெரிவித்துள்ளது. (ந-5)

# வடக்கு மக்களின் அவலநிலை மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது

## *ஊடகவியலாளர் தாக்குதல் குறித்து வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன்*

யாழ்ப்பாணம்.ஏப்.16

வடக்கில் தமிழ் மக்கள் எவ்வாறான அவல வாழ்க்கைக்குள் சிக்குண்டிருக்கின்றார்கள் என்பதை ஊடகவியலாளர் மீதான தாக்குதல் மீண்டும் நிரூபித்திருக்கின்றது. வடக்கில் இயல்புநிலை திரும்பிவிட்டது என்று சொல்லுவோரின் பொய் முகம் இந்தச் சம்பவத்தினூடக தோலுரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் பா.கஜதீபன்.

யாழ்.தினக்குரல் செய்தியாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த பின், தமிழருக்கு வட- கிழக்கில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. வடக்கில் வசந்தம் வீசுகிறது என்று அரசு உலகை ஏமாற்றி பொய்யுரைத்து வருகிறது. ஆனால் ஒழுங்கற்ற மீள்குடியேற்றமும், உதவிகள் வழங்கப்படாமை, துரித சிங்களமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் என்பனவே இடம் பெறுவதுடன், மக்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

செல்வதீபன் போன்ற ஊடக நண்பர்களின் மீதான இவ் வன்முறைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன், தாக்குதலாளிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது. இந்தக் கேள்விக்கான பதில் பொலிஸாராலேயே வழங்கப்படவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# சுற்றுலா விஸாவில் வியாபாரம்: சீனர்கள் இருவர் பூநகரியில் கைது

யாழ்ப்பாணம். ஏப்.15

சுற்றுலா விஸாவில் இலங்கை வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட சீனப் பிரஜைகள் இருவர் பூநகரிப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அவர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் தங்க நகை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும், அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில், சுற்றுலா விஸாவில் வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

**கிளி நொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் தங்க நகை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததன் போதே குறித்த சீன வியாபாரி கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அதனையடுத்து இரண்டு சீனப் பிரஜைகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தற்போது இவர்கள் வவுனியா நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ந-5)

# செய்தித்துறை இல்லாத இலங்கையை வைத்திருக்கவே அரசு விரும்புகிறது

## *மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் கண்டனம்*

செய்தித்துறை இல்லாத இலங்கையாக நாட்டை வைத்திருக்கவே மஹிந்த அரசு விரும்புகின்றது என்று வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

'தினக்குரல்' பத்திரிகையின் வடமராட்சி பிரதேச ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் மீதான கொலை முயற்சித் தாக்குதலை வன்மையாகக் கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது கண்டன அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:-

ஊடகத்துறையை உலகத்தின் மூன்றாவது கண் என்றும், ஊடகவியலாளர்களை ஜனநாயகத்தின் காவலர்கள் என்றும் உலக கனவான்கள் விளிக்கின்றனர். ஜனநாயக மறுப்பு சம்பவங்களின் போதும், ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்களின் போதும், அதை எதிர்த்து நாட்டில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தும், ஜனநாயகத்தை பாதுகாக்கும்பணியின் சிறப்புக் கருதி இத்தகைய கௌரவத்தை வழங்கி உலகம் ஊடகவியலாளர்களை சிறப்பிக்கின் றது. இலங்கை போன்ற ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காத ஆபத்தான நாடுகளில் ஊடகவியலாளர்கள் ஆட்சியாளர்களோடும். அதிகாரத்தோடும் போராடிக்கொண்டு மிகவும் நெருக் கடியான சூழலிலும் செய்தியறிக்கைகளைஇடுவதால் தான், ஜனநாயகம் என்ற சொல்லை இன்றும் கூட எம்மால் உச்ச ரிக்க முடிந்திருக்கின்றது.

**அரசும், இந்த அரசுக்குள் இருப்பவர்களும், உண் மையான ஜன நாயக விரும்பிகள் அல்லர் என்பதையே வடமராட்சி பிரதேச ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன்மீதான கொலைமுயற்சி தாக்குதலும் கோடிட்டு காட் டுகின்றது.**

ஆனால் இந்த அரசும், இந்த அரசுக்குள் இருப்பவர்களும், இந்த அரசை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் உண்மையான ஜனநாயக விரும்பிகள் அல்லர் என்பதையே வடமராட்சி பிரதேச ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் மீதான கொலை முயற்சி தாக்குதலும் கோடிட்டு காட்டுகின்றது.

ஜனநாயகத்தை முறையாக கோரும் ஊடகங்கள் மீதும், அந்த ஊடக நிறுவனங்களின் ஊடகப்பணியாளர்கள் மீதும் அரச பயங்கரவாதத்தை ஏவி விடும் கலாசாரம் காலத்துக்கு காலம் ஆட்சி பீடமேறிய அரசுகளால் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்திருக்கின்றது.

ஊடகங்கள் தமது அநாகரிக செயல்களைத் தாறுமாறாக ஆதரிக்கவும், தமது அருவருப்பான நடவடிக்கைகளுக்கு ஒத்தூதவும் வேண்டும் என்று இலங்கை ஆட்சியாளர்கள் அவாப்படுகின்றனர்.

தம்மைத் திருப்திப்படுத்த வும், மகிழ்ச்சிப்படுத்தவும் தயாரில்லாத, தம்மை துதி பாடவும், வழிபடவும் தயாரில் லாத ஊடகங்களின் மூச்சை நிறுத்தி விட வேண்டும் என்று வரிந்து கட்டிக்கொண்டுநிற்கின்றனர்.

அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழும் தமிழினத்தின் உரிமைப்போராட்டத்துக்கு சார்பாகவும், தமிழினத்தின் மீது ஏவி விடப்பட்ட அரச வன்முறை தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நியாயம் கேட்டும் குரல் எழுப்பிய ஊடக நிறுவனங்களின் மீதான அனைத்து தாக்குதல்களும், ஊடகவியலாளர்கள் படுகொலைகளும் இலங்கை அரசால் ஏலவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் தம்மால் சத்துணவூட்டி வளர்க்கப்படும் குண்டர்களையும், காடையர்களையும் ஏவி விட்டே நடத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்த தாக்குதல்களுக்கும் படுகொலைகளுக்கும் இன்று வரை சுயாதீன விசாரணை கள் நடத்தப்பட்டு நீதி வழங் கப்பட்டதாக தெரியவில்லை.

சட்டம் தனது கடமையைச் செய்ய விடாமல் ஆளும் ஆட்சி அதிகாரம் தடுப்பதா கவும்; தம்மை எதிர்ப்பவர் களுக்கு ஒரு நீதி யும், தமது அரசை பிரதிநிதித் துவப்படுத் துபவர்களுக்கு ஒருநீதியும் வழங்கப்படவேண்டும் என்று அதே ஆளும் ஆட்சி அதி காரம் விரும்புவதாக வும் வெளிப்படையாகவே தெரிய வருகின்றது. இத்தகைய சட்ட வாட்சி நடைமுறை பிரயோ கத்தை நாம் பலமாகவே எதிர்க்கின்றோம்.

இலங்கை அரசுக்குள் இருக் கின்ற கருத்தை கருத்தால் எதிர் கொள்ள முடியாத கோழைகளுக்கு எதிராக எதிர்வினையாற்றுவதோடு, ஊடக மாண்பு காக்கப்பட நாம் என்றும் ஊடகவியலாளர்களின்நலன்கள் தொடர்பில் அக்கறை யோடும் கவனிப்போடும் செயற்படுவோம் என்றும் உறுதி கூறுகின்றேன்- என்று அவர் தனது கண்டன அறிக்கையில் கூறியுள்ளார். (வ)

**வீட்டுடன்காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை பிரதான வீதி, கட்டப்பிராயில் சுற்றுமதிலுடன் கிணறும் உள்ள $7^{1/2}$ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 4313448

## மரண அறிவித்தல்



### நடராசா இராசமணி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமணி நேற்று முன்தினம் (14.04.2014) திங்கட்கிழமை காலமானார். அன்னார் நடராசாவின் (Railway Guard) அன்பு மனைவியும் யோகராசா, நவமலர், சந்திரராசா, அருள்ராசா, தேவராசா, நேசராசா, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதராசா வின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014) வியாழக்கிழமை முற்பகல் 11. மணி மணியளவில் சுழிபுரம் பிரதான வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:
ச.சுயந்தன்.
T.P 0770724169

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் உதயகுமார்



சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் உதயகுமார் நேற்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம்-யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் ரிஷிக்கேஷன், தட்சாயினி, திரிசங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும்,சியாமாள (கனடா), பிறேமலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரசாமி (கனடா), கிஸ்ணராஜா(கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிவகுஞ்சரி,அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### செல்லையா பறுபதம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மந்துவிலைப் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பறுபதம் நேற்றுமுன் தினம் (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான சின்னையா செல்லையா வின் (முன்னாள் இ.போ.ச. பரிசோதகர்) அன்பு மனைவியும் கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, சிங்கப் பூர்) தேவநாதன், பாலச்சந்திரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சாரதா தேவி, அரியரத்தினம் (தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்), சித்திராதேவி (முன்னாள் ஆசிரியை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவரான தவக்குமார் மற்றும் உஷா தேவி, கெங்கேஸ்வரி, அற் புதானந்தன், குலரஞ்சிதராணி, மனோகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், றொசாந்தி (சிங்கப்பூர்), தவசுதன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), சாயீசன் (சாவ. இந்துக் கல்லூரி மாணவன்), சுபாஜினி (சுவிஸ் மினரல்), சுரேஸ்காந் (ஆசிரியர், மல்லாவி தேசிய பாடசாலை), நிரூபன் (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல் கலைக்கழகம்), சஞ்சீவன், ஆர்த்திகா (யாழ். பல்கலைக்கழகம்), லக்ஷிகா, தருமிகா (சாவ. இந்துக் கல்லூரி மணவி), கஜீவன் (சாவ. இந்துக் கல்லூரி மாணவன்), கார்த்திகா (ஆஸ்திரேலியா), காயத்திரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின், பாசமிகு பேர்த்தியும், அஸ்வின், அஞ்சனி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் மந்துவில் இலுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம். 0772850861

தகவல்:
குடும்பத்தினர்.

## குடத்தனை பொற்பதி வீதியை புனரமைத்துத் தாருங்கள்


பருத்தித்துறை, ஏப்.16

வடமராட்சி கிழக்கு குடத்தனையிலிருந்து கடற்கரை நோக்கிச் செல்லும் பொற்பதி வீதியைப் புனரமைத்துத் தருமாறு குடத்தனை மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக குறித்த வீதி புனரமைக்கப்படாது காணப்படுவதால் குறித்த வீதியில் பயணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு ள்ளாவதாகவும், கடந்த ஆண்டு வல்லிபுரக் கோயிலின் திருவிழாவின்போது குன்றும் குழியுமாக இருந்த இந்த வீதியால் பயணித்த பஸ்ஸின் சில்லுக் கழன்று ஓடிய போதிலும் பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதுடன் குடத்தனை அ.மி.த.பாடசாலை, குடத்தனை றோ.க.த. பாடசாலைகளும், இரு முன் பள்ளிகளும், இரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும், உப தபால் அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியனவும் அமைந்துள்ளன.

இதனைவிட சுகயீனமுற்று இருப்பவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படுகின்றது. வடமராட்சிப் பகுதிக்கு மீன் வழங்குவதில் முக்கிய இடம் வகிப்பது இதுவாகும். எனவே விரைவாகக் குறித்த வீதியைப் புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)



யாழ்.பேராலயத்தில் நடைபெற்ற குருத்தோலை ஞாயிறு தின வழிபாட்டில் குருத்தோலைகளைத் தாங்கியவர்களாக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை பக்தர்கள் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். இது இயேசுவின் ஜெருசலேம் பயணத்தைக் குறிக்கிறது. (ஒ-135)

## புதுவருடத்துக்கு முதல்நாள் இருவர் தாக்கப்பட்டனர்

தென்மராட்சி, ஏப்.16

சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், புத்தாண்டு தினத்துக்கு முதல் நாளே களை கட்டியதால் இருவேறு சம்பவங்களால் இருவர் தாக்குதலுக்கு இலக்காகினர். இந்தச் சம்பவங்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றன. மட்டுவில் கிழக்கில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான சிவ குரு சிவனேஸ்வரன் (வயது- 54) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கைதடி மத்தி குமரநகரில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் திருஞான சுந்தரம் (வயது-49) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கைதடி -நுணாவில் பகுதியில் தவறுதலாக வீழ்ந்ததாகக் கூறப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வல்லிபுரநாதன் பகீரதன் (வயது-35) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## வரணி வடக்கில் கள்ளுத் தவறணை



அமைக்கப்பட்ட கள்ளுத் தவறணை

வரணி, ஏப்.16

வரணி வடக்கு பிரதேசத்தில் புதிய கள்ளுத் தவறணை ஒன்று கொடிகாமம் பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வரணி மாசேரிப் பகுதியில் இயங்கி வந்த கள்ளுத் தவறணை ஒன்று கடந்த வருடம் இனம்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்து இன்று வரை குறித்த பிரதேசத்தில் கள்ளுத் தவறணைகள் ஏதும் இயங்கவில்லை. மாசேரி வரணி வடக்கு பிரதேச தொழிலாளர்கள் தமது உற்பத்திப் பொருளை இடைக்குறிஞ்சி பிரதேசத்தில் இயங்கிய கள்ளுத் தவறணைக்கே மிகுந்த சிரமத்தின் மத்தியில் வழங்கி வந்த நிலையில் நீண்ட காலத்தின் பின்பு வரணி வடக்கு பிரதேசத்தில் குறித்த கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தவறணை குறித்த பிரதேசத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டதால் இதுவரை தமக்கு நிலவி வந்த போக்குவரத்துச் சிரமம் நீங்கியுள்ளதாக தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இதேவேளை மாசேரிப் பிரதேச தொழிலாளர்களின் வசதிகருதி அந்தப் பகுதியிலும் கள்ளுத்தவறணை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (வ-122)

## வீதிப் புனரமைப்பு திருப்தி இல்லை

### *விசனமடையும் மக்கள்*

பருத்தித்துறை, ஏப்.16

மந்திகையிலிருந்து வல்லிபுரம் கோயிலுக்குச் செல்லும் உபயகதிர்காமம் வீதியின் திருத்த வேலையில் திருப்தி அடையாத மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு வல்லிபுரக் கோயிலின் திருவிழாக் காலத் தில் பக்தர்கள் பயணிப்பதில் சிரமம் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்ததை அடுத்து அந்த வீதி திருத்தம் செய் யப்பட்டது.

ஆனால் அவ்வீதி தற்போது ஒரு வருட காலத்தினுள் மீண்டும் சிதைவடைந்து தற்போதும் கடந்த ஆண் டைப் போலவே சிறு திருத்தம் செய்கின்றனர்.

இதனால் குறித்த வீதியால் பயணம் செய்வோருக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் தேவையற்ற வகையில் புனரமைப்புச் செலவு ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் கவனத்தில் எடுத்து முறையாக வீதியைப் புனரமைப்புக்குமா றும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ-422)

## உயர்தரப் பரீட்சை பெறுபேற்றை அதிகரிக்க விசேட கற்பித்தல்

### *வலிகாமம் கல்வி வலயத்தில்*

வலி. வடக்கு, ஏப் .16


வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்று உயர்வு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் எஸ் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதான செயற்பாட்டுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் விசேட ஆசிரியர்கள் குழாமினால்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் , கலை ,வர்த்தகத் துறைகளின் முக்கிய பாடங்களுக்கு இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

வாரத்தில் இந்த கற்பித்தல் நடவடிக்கைகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் கோட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இந்தச் செயற்றிட்டத்துக்கென தெரிவு செய்யப்பட்ட விசேட ஆசிரிய குழு கோட்ட ரீதியாகச் சென்று வகுப்புக்களை நடத்தி வருவதாகவும், இதனால் மாணவர்களின் உயர்தரப் பரீட்சை அடைவு மட்டம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-86)

## பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்த பிரதான வீதிகள்



வீதி ஒன்றின் சில பகுதி சேதமடைந்த நிலையில்....

கொழும்புத்துறை, ஏப்.16

யாழ்.மின்சாரநிலைய வீதி, மணிக்கூட்டு வீதியின் ஒரு பகுதி விக்ரோறியா வீதி போன்ற பிரதான தெருக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுகின்றன. குறித்த வீதிகளால் பயணிக்கும் வாகன சாரதிகள், பொதுமக்கள் இதனால் தாம் சிரமங்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொள்ள நேரிடுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சார நிலைய வீதி கொங்கிறீற் கலவை கொண்டு குழிகள் தற்காலிகமாக செப்பனிடப்பட்ட போதிலும் அவை மீண்டும் வெளிக்கிளம்பி கற்சிதறல்களாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு வீதிகளும் தேர்தல் காலங்களையொட்டி காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்ட போதிலும் குறித்த வீதிகள் கவனிப் பாரற்று விடப்பட்டுள்ளதாகவும் மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

# 212 லட்சம் ரூபா செலவில் முழுமையாக திருத்தப்படவுள்ளது பயித்தோலை வீதி

### *வலி.கிழக்கு பிரதேச சபை உப தவிசாளர் தெரிவிப்பு*

அச்சுவேலி, ஏப்.16

வலி.கிழக்கில் பயித்தோலை வீதி முழுமையாக, 212 லட்சம் ரூபா செலவில் நெல்சிப் திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

வீதி திருத்த வேலைக்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டு பணிகள் ஆரம்பமாகவுள்ளன என்று வலி.கிழக்கு பிரதேச சபையின் உபதவிசாளர் க.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக உப தவிசாளர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில்:

வலி.கிழக்கில் இந்த வருடம் நெல்சிப் திட்டத்தின் கீழ் ஐந்து வீதிகள் திருத்தி அமைக்கப்படவுள்ளன. அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி, கோப்பாய் இலகடி வீதி, உரும்பிராய் வாகையடி வீதி, அச்செழு வேலியபுரம் குறுக்குவீதி, உரும்பிராய் மயானவீதி ஆகிய ஐந்து வீதிகளே திருத்தி அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு கேள்விப் பத்திரம் கோரப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பமாக உள்ளது. இந்த வேளையில் சிலர் குறுகிய அரசியல் நோக்கோடு வதந்திகளைப் பரப்பி வருவதால் மக்கள் குழப்பத்துக்கு உள்ளாகின்றனர்.

அச்சுவேலி தெற்கில் பயித்தோலை வீதி முழுமையாகத் திருத்தி அமைக்கப்படுவதோடு, மொத்தமாக இரண்டே கால் கிலோ மீற்றர் தூரம் திருத்தி அமைக்கப்படவுள்ளது. இந்த வகையில் பயத்தோலை வீதியோடு இணைந்த முத்து மாரியம்மன் கோயில் ஒழுங்கையும், விக்கினேஸ்வரா ஒழுங்கையும் திருத்தி அமைக்கப்படவுள்ளன. இதற்கு 212 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் குழப்பத்துக்கு உள்ளாக வேண்டிய தேவை இல்லை. திருத்தி அமைக்கப்படவுள்ள வீதிகளின் வரைபடத்தை அலுவலக நேரத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திலோ நேரில் பார்வையிட்டு உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளலாம்" - என்றார். (வ-11)

## வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை ஆரம்பம்

### *சாவகச்சேரி மருத்துவமனையில்*

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விடுதியில் பெண்கள் தங்கிச் சிகிச்சை பெறத் தொடங்கியுள்ளனர்.

அவர்களுக்குத் தேவைப்படும் சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் மீதான வன்முறைகள் ஏற்பட்டமைக்கான காரணிகளைக் கண்டறிந்து ஆற்றுகைப்படுத்தும் விழிப்புணர்வு உரைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குடும்பத் தகராறு மற்றும் பாலியல் போன்ற வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கென தனியான விடுதியை சாவகச்சேரி மருத்துவமனை நிர்வாகத்தினர் கடந்த முதலாம் திகதி ஆரம்பித்த நாள் தொடக்கம் அங்கு பல பெண்கள் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)


# 3ஆவது பாலினமாக இனி திருநங்கைகள்

## இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவு

புதுடில்லி.ஏப் 16

ஆண், பெண் என குறிப்பிடப்படும் பாலினங்களைப் போல, திருநங்கைகள் நாட்டின் மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கப்படவேண்டும் எனக் கூறி இந்திய உயர் நீதிமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருநங்கைகளுக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் வழிவகை செய்யக் கோரி இந்திய உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனு மீதான விசாரணையில், நீதிபதி ராதாகிருஷ்ணன் தலைமையிலான அமர்வு இந்தத் தீர்ப்பை நேற்று அளித்துள்ளது.



வெற்றிக் களிப்பில் திருநங்கைகள்

இது தொடர்பில் தேவையான சட்டத்திருத்தங்களை ஏற்படுத்தக் கூறியுள்ள அந்த அமர்வு, மத்திய , மாநில அரசுகள் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது.

பின்னர் அவர்கள் ஆறு மாத காலத்தில், இந்த விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் தங்களது அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் நீதிமன்றம் கோரியுள்ளது.

மேலும் மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கப்படும் திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளிலும் உரிய உரிமையைப் பெறுவதற்குத் தேவையான வழிமுறைகளைப் பின்பற்ற நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

அத்தோடு திருநங்கைகளுக்கான சிறப்பு இடஒதுக்கீடு அளிக்கவும், பொருளாதாரம் மற்றும் சமூகநீதியில் அவர்களைப் பின்தங்கியவர்களாக அங்கீகரிக்கவும் அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

தேசிய சட்ட உதவி மையத்தின் உறுதுணையுடன் தொடரப்பட்ட இந்த வழக்கின் விசாரணையில், நீண்ட காலக் காத்திருப்புக்குப் பிறகு நேற்று தங்களுக்கு நீதி கிடைத்துள்ளதாகத் திருநங்கைகளின் ஆதரவு அமைப்புகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. (த)

## ஜெயலலிதா மீதான வழக்கு; 3 மாதக் கூடுதல் அவகாசம்

சென்னை.ஏப் 16

ஜெயலலிதா மீதான வருமான வரி வழக்கின் விசாரணையை நிறைவு செய்ய வழங்கப்பட்ட நான்கு மாதக் காலக்கெடுவில், மூன்று மாதம் கூடுதல் அவகாசம் வழங்கி இந்திய உயர்நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சென்னை எழும்பூர் பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மற்றும் அவரது தோழி சசிகலா மீது தொடரப்பட்டிருந்த வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்யாதது தொடர்பான வழக்கை நிறைவு செய்ய, இந்திய உயர்நீதிமன்றம் ஏற்கனவே நான்கு மாதக் காலக்கெடு வழங்கி உத்தரவிட்டிருந்தது. இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தரப்பு, நடைபெறும் மக்களவை தேர்தலைச் சுட்டிக்காட்டி கூடுதலாக நான்கு மாதக் கால அவகாசம் கோரினர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று நீதிபதிகள் கே.எஸ். ராதாகிருஷ்ணன் மற்றும் ஏ.கே.சிக்ரி ஆகியோரை உள்ளடக்கிய அமர்வு முன்பு நடைபெற்றது. அப்போது ஜெயலலிதா தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் கிரி, இந்த வழக்கில் உயர் நீதிமன்றதால் வழங்கப்பட்டுள்ள காலக்கெடு மிகவும் குறைவாக இருப்பதாக வாதாடினார். ஆகையால் இந்த வழக்கின் விசாரணையில் கூடுதலாக நான்கு மாத கால அவகாசம் வழங்கக் கோரினார்.

இதனையடுத்து அரசு தரப்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சித்தார்த் லூத்ரா, இந்த வழக்கில் குறைவான சாட்சிகளே உள்ளதால் ஏற்கனவே வழங்கப்பட்ட காலக்கெடுவில் விசாரணையை நடத்திட முடியும் என்றார்.

இரு தரப்பு வாதங்களும் நிறைவடைந்த பிறகு, ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்ட காரணங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், அவர்களது கோரிக்கையான நான்கு மாதகால அவகாசத்துக்குப் பதிலாகக் கூடுதல் மூன்று மாத கால அவகாசம் மட்டும் வழங்கி உத்தரவிட்டனர். மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த வழக்கின் விசாரணையில் தேவையான முழு ஒத்துழைப்பு வழங்க அந்த அமர்வு அறிவுறுத்தியுள்ளது. (த)

## 'சுப்பர் பிரதமர்' மன்மோகன் சிங்

### பிரியங்கா காந்தி புகழாரம்

புதுடில்லி.ஏப் 16

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், இதுவரை பிரதமர் பதவியை வகித்தவர்களில் மன்மோகன் சிங் மட்டுமே 'சுப்பர் பிரதமர்' ஆக இருக்கிறார் என்று பிரியங்கா காந்தி புகழாரம் சூட்டினார்.



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா தனது சகோதரரும், காங்கிரஸ் துணைத் தலைவருமான ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், அவர் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகித்த பிரதமர்களில் 'சுப்பர் பிரதமர்' என்றால் அவர் மன்மோகன் சிங்தான் என்றார்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் முன் னாள் ஊடக ஆலோசகர் சஞ்சய பாரு எழுதிய 'அக்சிடென்டல் பிரைம் மினிஸ்ரர்' நூலில், மன்மோகன் சிங் பிரதமர் பதவியில் இரண்டாம் பட்சமாகவே செயல்பட்டார் என்றும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியே அவரை வழிநடத்தினார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டபோதுதான், பிரதமர் மன்மோகன் சிங்குக்குப் பிரியங்கா காந்தி புகழாரம் சூட்டினார்.

அவர் மேலும் கூறும்போது, இந்தத் தேர்தல் மக்களின் இதயங்களைப் பிளவுபடுத்த நினைப்பவர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைக்க பாடுபடுபவர்களுக்கும் இடையே உள்ள போட்டியாகவே கருதப்படவேண்டும். நாங்கள் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

நாங்கள் அதனைச் செய்வோம் என்பதை மக்களும் நம்புகின்றனர் என்றார் பிரியங்கா காந்தி. (த)



ஜார்கண்ட் மாநிலம், ஹசாரிபாக் தொகுதி பா.ஜ.க வேட்பாளர், ஜெயந்த் சினாகாவை ஆதரித்து நரேந்திர மோடி நேற்றுப் பிரசாரம் செய்தார். (த)

## 400 அடி துளைக் கிணற்றில் விழுந்த சிறுவன் உயிருடன் மீட்பு

சென்னை.ஏப் 16

ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 3 வயது சிறுவன், 6 மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு ரோபோ கருவி உதவியுடன் மீட்கப்பட்டான். இப்பணியில் ஈடுபட்ட மதுரை மீட்புக் குழுவினரை, மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டினர்.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே குத்தாலப் பேரியைச் சேர்ந்தவர் கணேசன் (41); பள்ளி ஆசிரியர். இவரது மகன் ஹர்சன் (3).

கணேசன் தனது வீட்டின் அருகே எலுமிச்சைத் தோட்டம் வைத்துள்ளார். இந்தத் தோட்டத்தில் 4 நாள்களுக்கு முன்பு 400 அடி ஆழத்துக்கு ஆழ்துளைக் கிணறு தோண்டப்பட்டது. அதில் தண்ணீர் வரவில்லை. இதனால், ஆழ்துளைக் கிணற்றின் மேல் பகுதியைச் சாக்குப்பையால் கணேசன் மூடி வைத்திருந்தார்.

திங்கட்கிழமை காலை கணேசன், தனது மகன் ஹர்சனுடன் தோட்டத்துக்குச் சென்றார். அங்கு விளையாடிய ஹர்சன் காலை 9.45 மணியளவில் ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்தான். பதறிப்போன கணேசன் சங்கரன்கோவில் தீயணைப்புப் படையினருக்குத் தகவல் தெரிவித்தார்.

தீயணைப்புப் படையினர் காலை 11 மணிக்கு மீட்புப் பணியில் ஈடுபட்டனர். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், மாவட்ட ஆணையாளர் நரேந்திரன் நாயர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப் பணிகளைக் கண்காணித்தனர். தகவலறிந்த சுற்றுவட்டாரப் பகுதி மக்களும் அங்கு சோகத்துடன் திரண்டனர்.

சிறுவனை மீட்க ஆழ்துளை கிணற்றின் அருகே குழி தோண்டப்பட்டது. 7 அடி வரை தோண்டப்பட்டபின் சுண்ணாம்புக்கல் பாறையாக இருந்ததால்,



உயிருடன் மீட்கப்பட்ட சிறுவன்

தொடர்ந்து தோண்ட முடியவில்லை. இதனிடையே அப்பகுதியில் மிதமான மழை பெய்ததால், மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டது. ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழும் குழந்தைகளை மீட்கும் அமைப்பு மதுரையில் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து, அந்த அமைப்பினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மதுரை மீட்புக் குழு என்ற தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த 4 பேர், தாங்கள் உருவாக்கிய ரோபோ கருவியுடன் பிற்பகல் 2.30 மணிக்கு அங்கு வந்தனர். ஹர்சனை மீட்கும் பணியில் அந்தக் குழுவினர் விரைவாக ஈடுபட்டனர்.

ரோபோவில் பொருத்தப்பட்ட மனிதனின் கை போன்ற இரு ராட்சதக் கைகளை, ஆழ்துளைக் கிணற்றுக்குள் செலுத்தி, ஹர்சனை மீட்க முயற்சிக்கப்பட்டது. 15 அடி ஆழத்தில் சிறுவன் சிக்கியிருந்தமை அந்தக் கருவியில் பொருத்தப்பட்டிருந்த கமரா மூலம், தரைக்கு மேலே இருந்த வீடியோ திரையில் தெரிந்தது. சிறுவனை மீட்கும் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. சிறிது உயரம் தூக்கிய நிலையில் சிறுவன் நழுவி கீழே விழுந்தான். மீண்டும் முயற்சி செய்ததில், கருவியின் ராட்சதக் கைகள் ஹர்சனை கெட்டியாகப் பற்றிக் கொண்டன. தீவிர போராட்டத்துக்கு பின், பிற்பகல் 3.50 மணிக்குச் சிறுவன் பத்திரமாக வெளியே தூக்கிவரப்பட்டான். கைகளைத் தட்டி மக்கள் ஆரவாரம் செய்தனர். சிறுவன் உடல் முழுவதும் சேறும் சகதியுமாக இருந்தது. மிகவும் சோர்வாகக் காணப்பட்ட ஹர்சன் அம்புலன்ஸ் மூலம், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கு முதலுதவிச் சிகிச்சைக்குப் பிறகு தற்போது நலமாக உள்ளான்.

சிறுவன் ஹர்சனைப் பத்திரமாக மீட்ட மதுரை மீட்புக் குழுவினர் எவ்வித பிரதிபயனையும் எதிர்பார்க்காமல், ஆழ்துளைக் கிணறுகளில் தவறி விழும் குழந்தைகளை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இக்குழுவில் எம்.மணிகண்டன், எம்.திருநாவுக்கரசு, எம்.வல்லரசு, பி.ராஜ்குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சங்கரன்கோவிலில் திங்கட்கிழமை நடந்த சம்பவத்தில் சிறுவன் ஹர்சன் உயிருடன் மீட்கப்பட்டிருப்பதையடுத்து மதுரை மீட்புக் குழுவினரை பொதுமக்கள் மிகவும் பாராட்டினர். திங்கட்கிழமை தீதொண்டு நாளாக கடைபிடிக்கப்பட்டது. இந்நாளில் ஹர்சனை மீட்கும் பணியில் துரிதமாக செயல்பட்ட தீயணைப்பு வீரர்களையும் பொதுமக்கள் பாராட்டினர். (த)

## கார்டியன், வாஷிங்ரன் போஸ்ட் ஊடகங்களுக்கு புலிட்சர் விருது

நியூயோர்க்,ஏப். 16
பொதுச் சேவை செய்தியறிக்கையிடலுக்காகக் கார்டியன் மற்றும் வாஷிங்ரன் போஸ்ட் ஊடகங்களுக்குப் புலிட்சர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
அமெரிக்காவின் தொழில்நுட்ப உளவு தொடர்பில் தொடர்ச்சியாகச் செய்தி வெளியிட்டமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
தேசிய பாதுகாப்பு முகவர் நிலையத்தின் முன்னாள் உத்தியோகத்தர் எட்வேட் ஸ்னோடன் கசியவிட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல்கள் வெளியிடப் பட்டிருந்தன.
அமெரிக்க விடயங்கள் தொடர்பில் செய்திகளைத் துரிதமாகவும், பக்கச்சார்பின்றியும் வழங்கியமைக்காகப் பொஸ்ரன் குளோப் ஊடகமும் விருதினை வெற்றிகொண்டுள்ளது.
சர்வதேச விவகாரங்கள் தொடர்பான செய்தியறிக்கையிடலுக்காக ரொய்ட்ர்ஸ் செய்தி நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் இருவர் விருது வழங்கி, கௌரவிக்கப்பட்டுள்ளனர். (த)

# ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு அமெரிக்கா கடும் அழுத்தம்

### உக்ரைன் விவகாரத்தால் சிக்கல் நிலை

வாஷிங்ரன்,ஏப். 16
உக்ரைய்ன் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடீமிர் புடினுக்கு அமெரிக்கா ஜனாதிபதி பரக் ஒபாமா அழுத்தம் கொடுத்துள்ளார்.
செல்வாக்கினைப் பயன்படுத்தி, உக்ரைய்னின் கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.
உக்ரைய்னின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அரச கட்டடங்களை ரஷ்ய ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றியுள்ளமை அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



இதனையடுத்து ரஷ்ய ஜனாதிபதி விளாடீமீர் புடினுடன் தொலைபேசியில் கலந்துரையாடும்போது அமெரிக்கா ஜனாதிபதி பரக் ஒபாமா இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.
உக்ரைய்னின் கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையுடன் தமக்கு தொடர்புள்ளதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ரஷ்ய ஜனாதிபதி இதன்போது நிராகரித்துள்ளார்.
தடைக்கு உட்படுத்தப்பட்ட ரஷ்யர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## பச்சிளம் குழந்தைக்கு இதய சத்திர சிகிச்சை

லண்டன்,ஏப். 16
பிரிட்டனில், பிறந்த சில நிமிடங்களில், குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது. பிரிட்டனின் துர்ஹாம் பகுதியைச் சேர்ந்தவர்கள், பே மற்றும் மைக்கல் மூரிஷ். கடந்த பெப்ரவரியில் இவர் களுக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு, சேனல் மூரிச் என்று பெயர்.
இந்தக் குழந்தை பிறந்ததும், தயாராக இருந்த மருத்துவர்கள், இதய அறுவைச் சிகிச்சை செய்தனர்.
இது குறித்து, குழந்தையின் தந்தை மூரிஷ் கூறியதாவது: மூன்றாவது குழந்தை இது. கர்ப்பப்பையில், 20 வாரக் கருவாக குழந்தை இருந்தபோதே, மிகவும் அரிதான, 'ஹைப்போ பிளாஸ்டிக் லெப்ட் ஹார்ட் சிண்ட்ரோம்' என்ற நோய் இருப்பதை மருத்துவர்கள் கண்டு பிடித்தனர். இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையின் இதயத்தின் ஒரு புறம் மட்டுமே இயங்கும் என்பதால், கருவைக் கலைக்கும்படி கூறினர். ஆனால், எங்களுடைய உறுதியைக் கண்டு, குழந்தை பிறந்ததும், அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்றும், குழந்தை பிழைப்பது 50 சதவீதம் சந்தேகம் என்றும் கூறினர். அதன்படி, குழந்தை பிறந்த உடனே, இதய அறுவைச் சிகிச்சை மூலம் இதயத்தின் உள்ளே, 'ஸ்டன்ட்' பொருத்தப்பட்டது. அடுத்த ஒரு வாரத்தில், மற்றொரு அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது. தற்போது, சேனல் மூரிச் உடல்நிலை தேறி உள்ளாள். இவ்வாறு, குழந்தையின் தந்தை கூறி உள்ளார். (த)

**கர்ப்பப்பையில், 20 வாரக் கருவாக குழந்தை இருந்த போதே, மிகவும் அரிதான, 'ஹைப்போபிளாஸ் டிக் லெப்ட் ஹார்ட் சிண்ட் ரோம்' என்ற நோய் இருப்பதை மருத்துவர்கள் கண்டு பிடித்தனர்.**






மெக்ஸிக்கோ கிழக்குப் பகுதியில் உள்ள டபாஸ்கோ பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர்.சம்பவத்தில் 4 பேர் காயமடைந்தனர்.குறித்த பஸ் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.பஸ் முற்றாக எரிந்து சாம்பரானது. (த)

## உலகின் சிறந்த இடங்களில் முதலிடம் பிடித்தது டுபாய்

லண்டன்.ஏப். 16
உலகில் காண வேண்டிய 25 மிகச் சிறந்த இடங்களின் பட்டியலில் டுபாய் முதலிடம் பிடித்துள்ளது.
சுற்றுலா செல்பவர்களுக்காகப் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் உலகின் மிகப் பெரிய இணையத்தளமான 'ட்ரிப் அட்வைசர்', 2014ஆம் ஆண்டுக்கான பிரயாணிகள் தெரிவு விருதுக்காக, உலகின் மிகச்சிறந்த 25 இடங்களைப் பல்வேறு அளவுகோல்கள் கொண்டு பட்டியலிட்டது. அதில் டுபாய் முதலிடம் பிடித்துள்ளது. மக்கள் கண்டு களிக்க டுபாயில் 646 பொழுது போக்கு அம்சங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.
சுமார் ஒரு வருடமாக உணவு விடுதிகள், தங்கும் விடுதிகளின் எண்ணிக்கைகள், தரம் ஆகியவற்றைப் பற்றிய விமர்சனங்களை அடிப்படையாகக் கொண்டு 25 சிறந்த இடங்கள் பட்டியலிடப்பட்டன.
25 சிறந்த இடங்களில் முதலாவதாக எங்களைத் தேர்வு செய்யப்பட்டிருப்பதன் மூலம் நாங்கள் பெருமைப்படுத்தப் பட்டிருக்கிறோம்-என்றார், டுபாய் சுற்றுலா மற்றும் வணிகக் கழகத்தின் முதன்மைச் செயல் அலுவலர் இஸாம் காஸிம். இந்த வருடம் டுபாயில் மாபெரும் உணவுத் திருவிழா நடைபெற்றது.
உலக அளவிலான இசை, கலாசாரம் மற்றும் விருந்தோம்பல் நிகழ்ச்சிகள் விரைவில் நடைபெற உள்ளன என்றார் இஸாம் காஸிம். (த)



டுபாயில் வானுயர்ந்த கட்டடங்கள்.

## ஆப்கானில் பிரதியமைச்சர் மர்ம நபர்களால் கடத்தல்

காபூல்,ஏப். 16
ஆப்கானிஸ்தானின் பொது வேலைகளுக்கான பிரதி அமைச்சர் அஹ்மட் ஷா வாஹிட் என்பவர் காபூலில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்டுள்ளதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இவர் தனது வேலைக்காக சென்றுகொண்டிருந்தபோது, வாகனமொன்றில் வந்த 04 ஆயுததாரிகள் அமைச்சரின் காரின் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு அவரைக் கடத்திச் சென்றதாகவும் அந்த நாட்டு உள்துறை அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.
இந்தத் தாக்குதலில் அமைச்சரின் சாரதி காயமடைந்துள்ளார். தலிபான் கிளர்ச்சியுடன் தொடர்பானதாக அன்றி இந்தச் சம்பவத்தை வேறு குற்றச் செயலாகக் கருதி ஆராய்வதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஆப்கானிஸ்தானில் அமைச்சர்களுக்கு வழமையாக ஆயுதப் பாதுகாப்பு வழங்கப்படும். இருப்பினும், கடத்தப்பட்ட அமைச்சர் தனது மெய்ப் பாதுகாவலர்களுடன் ஏன் செல்லவில்லை என்பது தொடர்பில் தெளிவாகத் தெரியவரவில்லை எனவும் அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

## நைஜீரிய குண்டுத் தாக்குதல் 71 பேர் சாவு

நைஜீரியாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 71 ஆக அதிகரித்துள்ளது.
சம்பவத்தில் 124 பேர் காயமடைந்துள்ளதாக மருத்துவமனைத் தரப்புச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த குண்டு வெடிப்பில் சுமார் 40 பஸ்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.
இந்தத் தாக்குதலுக்கு இதுவரையில் எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

## பொஸ்ரன் குண்டு வெடிப்பு நினைவு

அமெரிக்காவின் பொஸ்ரன் மரதன் ஓட்டப்போட்டியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் ஓராண்டுநினைவு கூரல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
பொஸ்ரன் மரதன் ஓட்டப் போட்டியில் கடந்த வருடம் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் ஒரு வருடம் ஆகின்றது.
இந்தநிலையில் இதனை நினைவுகூரப் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.
கடந்த வருடம் பொஸ்ரன் மரதன் ஓட்டப் போட்டியின்போது இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததுடன், 264 பேர் காயமடைந்தனர்.
இந்த நிலையில், இந்த வருடத்துக்கான பொஸ்ரன் மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தாக்குதலில் படுகாயமடைந்தவர் மருத்துவமனையில்

அளவெட்டி, ஏப்.16

பெரிய விளான் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை இனம் தெரியாத நபர்கள் கம்பிகள், பொல்லுகள் கொண்டு தாக்கியதில் படுகாயமடைந்தவரான அன்ரன் யோன்ஸ்ரீபன் (வயது-36) என்பவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 12 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றது. (க-36)

**கணினி திருத்தம்**
**நடமாடும் சேவை**

- Virus Solutions
- Software Solutions
- Mother Board Repair
- Laptop, Monitor Repair

(46227)

**Micro Dgitel** 07779 33338 021 3200 999
146, பொன்னாலை வீதி, கட்டுடை, மானிப்பாய்

## இன்று கொடி

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். ஐந்தாம் திருவிழாவான 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீக்குளிப்பும், 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், இரவு சப்பரத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஓ)

सत्यमेव जयते


**இந்திய துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்.**
**ITEC Day**

யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது, இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான நாள் (ITEC Day) ஒன்று கூடல் நிகழ்வை 26 ஏப்ரல் 2014 அன்று தூதரக வளாகத்தில் நடத்தவுள்ளது. இந்த ஒன்று கூடல் நிகழ்விற்கு ITEC பயிற்சித்திட்டன் கீழ் வடமாகாணத்திலிருந்து இந்தியாவில் தமது பயிற்சிநெறிகளை மேற்கொண்டவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். மேலும் வடமாகாணத்திலிருந்து TCS கொழும்பு திட்டத்தின் கீழ் இந்தியாவில் தமது பயிற்சிகளை மேற்கொண்டவர்களும், இந்திய பல்கலைக் கழகங்களில் தமது பட்டப்படிப்பு/பட்ட மேற் படிப்பு/ கலாநிதிப் பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்தவர் களும் மேற்படி பட்டக்கல்வியை புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கற்றவர்களும் இந்த ஒன்றுகூடல் நிகழ்விற்கு அழைக்கப்படுகின்றனர். இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், கற்கைநெறிக்கான விவரம், மற்றும் தங்களுடனான தொடர்புகளுக்கான விவரம் என்பவற்றை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 23 ஏப்ரல் 2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**இந்திய துணைத் தூதரகம்**
இல. 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 0504/ 5
(C/13625)(5.3) இணையத்தள முகவரி: www.cgijaffna.org

## பெரசிட்டமோல் உட்கொண்ட குழந்தை சாவு

தவறுதலாக ஆறு பெரசிட்டமோல் வில்லைகளை விழுங்கிய குழந்தையொன்று உயிரிழந் துள்ளது. கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது. மருந்து வகைகளை சிறுவர்களின் பார்வைக்கு அல்லது கைக்கு எட்டும் தூரத்தில் வைக்க வேண்டாம் என்று சுகாதாரபிரிவு தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மல்லாகம் கோணப்புலம் பகுதியில் 513 ஆவது படையணியினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேரா கலந்து கொண்டார். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திரு. திருமதி. அ.உதயபெரேராவும் வழங்கி கௌரவித்தனர். இந்த நிகழ்வில் படைகளின் உயர் அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர்களும் கலந்து கொண்டனர். (வ-86)

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**
பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (46826) (5.6

**வீடு வாடகைக்குண்டு**
பலாலி வீதியில்,
திருநெல்வேலிச் சந்திக்கு
அருகில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: (46767) (12.3.6)
077 943 5088/077 937 2354

**தவறிவிட்டது**
உடுவில் தெற்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடி மானிப்பாயைச் சேர்ந்த மகேந்திரம் கமலம் (கமலராணி) என்பவரது சுவிஸ் விசா தேசிய அடையாள அட்டை அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் கடந்த 12.04.2014 அன்று ஓமந்தைக்கும் திருகோணமலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 476 6319, 021 225 5840 (46816) (45.6.3)




......இறுதிப்போரில் தப்பித்த தளபதி ராம் தலைமையில் புலிகள் ஒன்றிணைகிறார்கள் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் பின்னர் அவர் கே.பி.யின் துணையோடு படையினரால் பிடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. அதன் பின்னர் மிக அண்மையில் தடுப்பிலிருந்த புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி பதுமன் விடுவிக்கப்பட்டு அவர் தலைமையில் புலிகளை உருவாக்க அரசுபடாதபாடுபட்டது. ஆயினும் இந்தக் கதை வெளிவந்தவுடனேயே பதுமனின் சுயரூபத்தை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதால் ஒருபோதும் அவரை தங்களுடைய தலைவராக தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது அரசுக்கு புரிந்தது. எனவே தெரியாத புதிய முகம் ஒன்றை புலிகளின் புதிய தலைவராக காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த நிலையில்தான் இந்த வருடம் மார்ச் 11 ஆம் திகதி கோபி என்பவர் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் இவர்தான் புலிகளின் புதிய தலைவர் என்று.....
(சி/13626)

**Jaffna College Institute of Technology** JCIT
Established in 1974

பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்

**Foundation in Information Technology** FIT
Certification offered by University of Colombo School of Computing (UCSC), Sri Lanka.
**FIT is a pre-degree programme**
Introduction,Maths for ICT,English for ICT Information and CommunicationTechnology (ICT) Application

**Craft Certificate Courses**(தமிழ்மொழி மூலம்) 6மாதம் (முழுநேரம்)
தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய பயிற்சிநெறி
சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்குமான பாடநெறிகள்.
01.Motor Cycle and light Engine Mechanism--(மோட்டார் வாகனம் திருத்துதல்)
02.Machineshop Practice(லேத் ,வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
03..Aluminum Fitting & Fabrication-(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
04.Electrical and Electronics

**Computer Certificate Courses-4-6 months**

**Computerize Business Accounting**
Accpac, Tally, Quick Book

**Computer Graphic Designer**
Page Maker, Corel Draw, Photoshop

**Computer Application Assistant**
Maintenance files Folder, Perform word processing
Prepare spread sheets,.
Prepare Presentation Maintenance Data bases,
Create electronic files Apply IT for Communication,
Perform General Maintenance

**Auto CAD**

**Microsoft Office**
Ms Word ,Ms Access
Ms Excel , Ms Access

**More Information**
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 321 3139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk Web: www.jcit.lk

Why we are Special
Unlimited computer practical hours are offered.
Payments could be made in 2 installments.
Individual attention by qualified Lecturers .
The computer laboratory is opened for flexible practical hours.
Facilities: Hostel , library & Sports etC.
(F.13618)

# மாணவரின் வரவுக்காகவே சைக்கிள்கள் கையளிப்பு

## திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 16
மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வரவேண்டும் என்பதற்காகவே சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றநிகழ்வொன்றில் வைத்து திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி உ புவனராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் கடந்த 8 ஆம் திகதி பிற்பகலில் இடம்பெற்ற கோணாவில் அ.த.க. பாடசாலை மற்றும் விவேகானந்தா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளின் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-



மாணவர்களுக்கு சைக்கிள்களைக் கையளிக்கும் கிளிநொச்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

எமது மாணவர்கள் நீண்ட தூரங்களிலிருந்து சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைகளுக்கு வருகை தருகின்றனர். தற்போது இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சைக்கிள்களை மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதைப் பெற்றோர்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும் என்றார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாரா கல்விப்பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வேள்ட் விஷன் நிறுவன நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எக்ஸ்.லம்பேட் அஞ்சலிட்றோ, கிளிநொச்சி வலய ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-18)



புனரமைக்கப்படாத வீதி.

## உள்ளக வீதி சேதமடைந்துள்ளதால் சிரமங்களுக்கு ஆளாகும் மக்கள்

மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு முன்பாகவுள்ள உள்ளக வீதி நெடுநாள்களாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மன்னார் நகரப்பகுதியின் உள்ளக வீதிகளில் இதுவும் ஒன்றாகும். நகரப் பகுதியில் உள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட்டுவரும் இந்த வேளையில் குறித்த வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை.

பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கும், வைரவர் ஆலயத்துக்கும் இடைப் பட்ட இந்த உள்ளக வீதியே இவ்வாறு நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக மழைகாலங்களில் குறித்த வீதி மோசமான நிலையில் காணப்படுகின்றமை வழமையாகும். தற்போது இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பல தரப்பட்டவர்களும் குறித்த வீதியில் பயணிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியின் நிலை குறித்து கவனத்தில் எடுத்துக் கொண்ட சமூக பாதுகாப்பு குழு (பனங்கட்டுக்கொட்டு கிழக்கு) இது தொடர்பான கடிதம் ஒன்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் சமூக பாதுகாப்பு குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## புதுவருடத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டானில் போட்டிகள்

முல்லைத்தீவு, ஏப்.16
தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு 64 ஆவது இராணுவ பிரிவினரால் ஒட்டுசுட்டானில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

கடந்த 9 ஆம் திகதி தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டும் தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே உறவைப் பலப்படுத்தும் வகையிலும் விழா வொன்று ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 64 ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் சத்தியசிறி லியனகே, துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன், ஒட்டு சுட்டான் உதவிச் செயலர் ஆர்.குருபரன் உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மாண விகளின் வரவேற்பு நடனத்துடன் விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து காலை நிகழ்வாக மரதன் ஓட்டம், ஆண், பெண் சைக்கிள் ஓட்டம் மற்றும் கிறிஸ்மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, கயிறு இழுத்தல், அழகுராணிப் போட்டி, அழகுராசாப் போட்டி என்பன நடத்தப்பட்டன.

இதில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன. இதனையடுத்து மாலை கலை நிகழ்வுகளும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது. (க-500)

## 'வாழ்வின் எழுச்சி' சந்தையில் பயிர்ச் சிகிச்சை முகாமும்



வாழ்வின் எழுச்சிச் சந்தையில் சூடு பிடித்த வியாபாரம்

வவுனியா மாவட்டத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலான வாழ்வின் எழுச்சி சந்தை வவுனியா வடக்கு புளியங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

புளியங்குளம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்தையில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தியிருந்ததுடன் விவசாய விரிவாக்கல் பிரிவினால் இலவச பயிர்ச் சிகிச்சை முகாமும் இடம் பெற்றது.

புளியங்குளம் சமுர்த்தி வங்கிச் சங்க வளாகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்தையை வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் மற்றும் வவுனியா மாவட்ட சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர் பி.வீரசிங்க ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் அதிகாரிகள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது உள்ளூர் உற்பத்தியாளர்கள் நன்மை பெற்றதுடன் விவசாயிகள் தமது விவசாய பயிர்களுக்கு ஏற்படும் நோய்த் தாக்கங்களுக்கான சிகிச்சை முறைகள் குறித்தும் அறிந்து கொண்டனர். (க-402)

## சோபை இழந்த புத்தாண்டு

மன்னாரில் என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

இந்து மக்கள் மருத்து நீர் தேய்த்து நீராடி புத்தாடை அணிந்து அதிகாலை வேளையிலேயே ஆலயங்களுக்குச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. பெரியவர்களுடன் சின்னஞ் சிறுசுகள் வண்ணவண்ண ஆடைகளில் வலம் வந்தனர்.

ஆயினும் மன்னார் மாவட்டத்தில் பட்டாசு சத்தங்கள் ஏதுமின்றி மிகவும் அமைதியாகப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

அதேவேளை மன்னாரில் உள்ள பௌத்த விகாரைகளிலும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. மன்னாரில் கடமையாற்றும் பொலிஸ், இராணுவம், கடற்படையினரைச் சேர்ந்த அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினரும் பௌத்த விகாரைகளில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மன்னார் வர்த்தக நிலையங்கள் கைவிசேட வியாபாரத்துக்கென திறக்கப்பட்ட போதும் மக்கள் கூட்டங்களைக் காண முடியவில்லை. அதேவேளை நேற்று முன்தினம் பூரணை தினம் என்பதனால் வங்கிகள் மூடப்பட்டிருந்தன. இதனால் வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த படையினரின் தேடுதல் வேட்டை, சுற்றி வளைப்பு, விசாரணைகள் காரணமாக மன்னார் மாவட்ட மக்கள் புத்தாண்டுதினத்தன்று வீடுகளில் முடங்கியிருந்ததோடு அவர்களின் நடமாட்டங்களும் குறைவடைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (க-56)

## வீதிகளில் சிந்தும் கழிவுகளால் இடர்களுக்கு உள்ளாகும் மன்னார்வாசிகள்

மன்னார், ஏப்.16
மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு நகரசபையினால் மேற் கொள்ளப்பட்டு வரும் சுத்திகரிப்புச் சேவை உரிய முறையில் செயற்படுத்தப்படுவதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரசபையினால் சேகரிக்கப்படும் கழிவுகளை ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக இடத்தில் கொண்டு சென்று போடுவதற்கென வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படும் போது கழிவுகள் வீதி எங்கும் சிதறி வீழ்ந்து சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கழிவுகள் டிராக்டர் வண்டியில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும்போது வீதிகளில் சிதறி விழுகின்றன. இதனால் குறித்த வீதிகள் ஊடாக பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு வீதிகளில் சிதற விடப்படும் கழிவுகளினால் விபத்து உட்பட சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள்காணப்படுகின்றன. இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சில தினங்களுக்குமுன்பு தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பொது சேமக்காலைக்கு முன்பாக உள்ள வீதியில் கணிசமான தூரம்வரை இவ்வாறான கழிவுகள் சிதற விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு குறித்த கழிவுப் பொருள்கள் வீதிகளில் சிதறி விழாமல் உரிய இடத்திற்கு எடுத்து செல்வதற்கு உரிய நடவடிக்கைகளை மன்னார் நகர சபை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (க)



வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட கழிவுகள் வீதியில் வீழ்ந்து போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுகின்றன.



பெரியநீலாவணை, சவக்காலைக்கு அருகில் மீட்கப்பட்ட சடலம்

# முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட வன்முறைகள்

## போர் நிறைவடைந்த பின்னரும் தொடர்கின்றன என்கிறார் அமைச்சர் பஷீர் சேகுதாவூத்

மட்டக்களப்பு.ஏப்.16

முஸ்லிம்களுக்கு எதிராக மத ரீதியிலான அச்சுறுத்தல்கள் முதல் அவர்களது மீள்குடியேற்றம், காணி சம்பந்தமான பிரச்சினைகள் என முஸ்லிம்கள் மீதான திட்டமிட்ட வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நடைபெற்ற அஸ்ஸஹ்றா பாடசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். முஸ்லிம்களுக்கு எதிராகக் கூச் சலிடும் பேரினவாத அமைப்புக்கு இந்த நாட்டின் எழுச்சிக்காக முஸ்லிம்கள் செய்த தியாகங்கள் பற்றித் தெரியாது. முதலில் அவர்கள் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறினார். போர் நிறைவடைந்தபின்னர் இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



பஷீர் சேகுதாவூத்

# மீட்கப்பட்டது சடலம்

அம்பாறை.ஏப்.16

பெரியநீலாவணை, சவக்காலை அருகில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. வீரமுனையை வசிப்பிடமாகக் கொண்ட எஸ். ராமச்சந்திரன் (வயது-50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி அன்ரனி ஜூட்ஸன் சடலத்தை பார்வையிட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கல்முனை ஆதார வைத்தி சாலைக்கு அனுப்புமாறு பணித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு. எம். கப்பார் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வலயக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்

## மாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர் வேண்டுகோள்

திருகோணமலை.ஏப்.16

மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு மாகாணசபை எதிர்க் கட்சி தலைவர் சீ .தண்டாயுதபாணி மனு ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் விஜயானந்தமூர்த்தி கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக நான் அறிந்தேன். அவர் மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்த மூதூர் வலயத்தைப் படிப்படியாக முன்னேற்றிக் கொண்டு வந்துள்ளார்.

கல்வி நிர்வாகம், பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி, வளங்கள் பயன்பாடு, மற்றும் தொடர்பாடல் முதலிய சகல விடயங்களிலும் நேர்த்தியான ஒரு வளர்ச்சியை விஜயானந்த மூர்த்தி ஏற்படுத்தி இருந்தார்.

அவருடைய தலைமைத்துவத்தால் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். எந்த விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாக தனது வலயத்தின் கல்வி நிலைமையை முன்னேற்றிக்கொண்டிருந்த ஒரு நல்ல கல்வி நிர்வாகியை திடீரென அங்கிருந்து இடமாற்றம் செய்தமை பொருத்தமற்ற செயல்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில் நகரத்தைச் சார்ந்த ஒருசில வலயங்களே முன்னேற்ற நிலையில் உள்ளன.

பெரும்பாலான வலயங்கள் கிராமிய பாடசாலைகளைக் கொண்டனவாகும். இத்தகைய வலயங்களை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் மாகாணக் கல்வி நிர்வாகம் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

கிராமிய பாடசாலைகளையே முழுமையாகக்கொண்ட மூதூர் வலயத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக முழு நேரமாக அக்கறையுடன் உழைத்து வந்த நல்ல கல்வி நிர்வாகியை இடமாற்றம் செய்தமை இந்த மாவட்டத்தின் கல்விநலனில் அக்கறை செலுத்துவோரை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. எனவே இந்த இடமாற்றத்தை மீளாய்வு செய்து அவரை மூதூர் வலயத்திலேயே கடமையாற்ற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


சமூக சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகம் -2014/15

1. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினை கொண்டிருத்தல் வேண்டும்
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் **“Application for Bid Documents”** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக **ரூபா. 1,000** காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **17.04.2014** தொடக்கம் **08.05.2014** வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் **30.04.2014** முற்பகல் **10.00** மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
7. **“Diet Supply -2014/15, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/03/2014 - 15”** என்ற விவரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்விகள் **09.05.2014 ஆம்** திகதி **13.30** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் **09.05.2014**ஆந் திகதி **14.00** மணிக்கு திறக்கப்படும்
9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**ந. இன்பராஜ்,**

(C/13613)(2.6.3)

தலைவர்,திணைக்கள பெறுகைகள் குழு,
சமூக சேவைகள் திணைக்களம் வ.மா. கண்டி வீதி, கைதடி.

தொலைபேசி: 0213202464 தொலைநகல்: 0217539145
மின்னஞ்சல்: socialnp@sltnet.lk


# நுழைவாயிலுடன் மோதியது வாகனம்



விபத்தில் சிக்கிய வாகனம்

மட்டக்களப்பு,ஏப்.16

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் ஒன்று வாழைச் சேனை மீன் பிடித்துறைமுக நுழைவாயிலை உடைத்துக் கொண்டு சென்று கடையில் இருந்த ஒருவர் மீது மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பாசிக்குடா நோக்கி வந்த பஜ்ரோ ரக வாகனம் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மீன் பிடித்துறைமுக நுழைவாயிலை உடைத்துக் கொண்டு உட் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் இடம் பெறும்போது வாகனத்தில் இருவர் இருந்துள்ளனர். எனினும் அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. மீன்பிடித் துறை முகத்தில் இரவுக் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வரு கின்றன என்று பொலிஸார் கூறினர். (ச)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
20.02.1939

மறைவு
17.03.2014

அமரர்
**வைத்திலிங்கம் சுந்தரலிங்கம்**

அன்புக் கணவராய் ஆட்கொண்டீர்கள்
பாசமுள்ள அப்பாவாக அன்பு காட்டினீர்கள்
இல்லத்தின் தலைவனாக எம்மை வழி நடத்தினீர்கள்
உறவுக்காரனாய் உரிமையை நிலைநாட்டினீர்கள்
சமூகத்தலைவனாய் பல தொண்டுகளை ஆற்றினீர்கள்
உங்கள் இழப்பை ஈடுசெய்யமுடியாது தவிக்கின்றோம்

கடந்த 17.03.2014 சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிரியைகள் இன்று (16.04.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

42. விபுலானந்தர் வீதி.
யாழ்ப்பாணம்.

(46814)(2.6.3)

குடும்பத்தினர்.

# கல்வி முறைமை முற்றாக மாற்றம்

## அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு என்கிறார் பந்துல குணவர்த்தன

கொழும்பு.ஏப்.16
அடுத்த வருடம் முதல் இலங்கையில் கல்வி முறையில் முற்றாக மாற்றம் செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் என்பன மாற்றி அமைக்கப் படவுள்ளன.
பாடப் புத்தகங்கள் மற்றும் பாடத் திட்டங்களும் மாற்றி அமைக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.
1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசு, இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய துடன், அது சார்ந்த கல்வி முறையையும் நடைமுறைப் படுத்தியிருந்தது என்று அவர் தெரிவித்தார்.
பிரிட்டன் கல்வி முறையின் அடிப்படையில் இலங்கையின் கல்வி முறை அமைந்த போதிலும் அதனால் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியவில்லை.


பந்துல குணவர்தன

இதன் காரணமாகவே கடந்த காலங்களில் இளைஞர்கள் ஆயுதங்கள் ஏந்திப் போரிட்டனர். இந்த நிலையில் தற்போது இந்த கல்வி முறைமையை முற்றாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஆயுதத்தால் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

### கிராண்ட்பாஸ் பகுதியில் சம்பவம்

கொழும்பு.ஏப்.16
கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு, ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.
சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார் என்று தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங்க கூறினார்.
காயமடைந்த மற்றையவர் தேசியவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்று அவர் தெரிவித்தார்.

> மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபர் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது

இதேவேளை, சப்புகஸ்கந்த பகுதியில் இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, கொலை செய்தமை தொடர்பில், மேல்மாகாண வடக்கு பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவினரால் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபரொருவர் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் துப்பாக் கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நான்கு நாள்களில் 352 விபத்துக்கள் 30 பேர் உயிரிழப்பு

கொழும்பு.ஏப்.16
கடந்த 10 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரையில் நாட்டின் பல பகுதிகளிலும் மொத்தமாக 352 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.
புதுவருட பிறப்புக்கு முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் இடம் பெற்ற 63 விபத்துகளில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று இந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
புத்தாண்டு காலப்பகுதியில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட செயற்றிட்டம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
இந்த செயற்றிட்டத்தின் ஊடாக நேற்றுமுன்தினம் வரை 780 வாகனச் சாரதிகளை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள் ளது. (ச)

## வட மேல் மாகாணத்துக்கு ஆறு அதி சொகுசு பஸ்கள்


வழங்கப்பட்ட அதிசொகுசு பஸ்கள்

கொழும்பு,ஏப்.16
தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தோடு இணைந்ததாக நாட்டின் பொதுப் போக்குவரத்துச் சேவையை விருத்தி செய்யும் வகையில் சுமார் 9 கோடி ரூபா பெறுமதியான ஆறு அதி சொகுசு பிரயாணிகள் பஸ்கள் இலங்கை போக்குவரத்து சபையின் வட மேல் மாகாண டிப்போக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்காக கொண்டுவரப்பட்ட சொகுசு பஸ்களில் ஆறு பஸ்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.
வடமேல் மாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ள பஸ்களுள் இரண்டு பஸ்கள் சிலாபம் டிப்போவுக்கும், மேலும் இரண்டு பஸ்கள் குளியாப் பிட்டி டிப்போவுக்கும் வழங்கப் பட்டுள்ளதோடு மிகுதி இரண்டு பஸ்களும் குருநாகல் வடக்கு மற்றும் தெற்கு டிப் போக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.
குருநாகல் வடக்கு மற்றும் தெற்கு டிப்போக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொகுசு பஸ்கள் குருநாகல் பஸ் தரிப்பிடத்தில் வைத்து வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால் போக்குவரத்துச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டன.
வடமேல் மாகாணத்தில் போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்கும் வகையில் எதிர்காலத்தில் மேலும் பல பஸ்கள் டிப்போக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் குருநாகல் நகர சபைத் தலைவர் காமினி பெரமுனகே மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச)

சமூக சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

**பெறுகைகளுக்கான அழைப்பு**

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளல் -2014/15**

1. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. **1,000** காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **17.04.2014** தொடக்கம் **05.05.2014**வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
7. **"Cleaning Service -2014/15, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/02/2014 -15"** என்ற விபரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
8. **விலைக்கேள்விகள் 06.05.2014ஆந் திகதி 13.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 06.05.2014ஆந் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்**
9. **எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.**
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**ந. இன்பராஜ்,**
தலைவர்,திணைக்கள பெறுகைகள் குழு,
சமூக சேவைகள் திணைக்களம் வ.மா. கண்டி வீதி, கைதடி.

தொலைபேசி: 0213202464 தொலைநகல்: 0217539145
மின்னஞ்சல்: socialnp@sltnet.lk

(C/13612)(2.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**


இரகுச்செல்வன் நிரோஜன்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில்
05.04.2014 சவிக்ரேமா நடைபெற்ற
18 ஆவது பட்டமளிப்புவிழாவில்
கலைமாணிப்பட்டம் (BA) பெற்ற
மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த
**சிவானந்தம் நிரோஜன்**
அவர்களையும், நுண்கலை மாணிப்பட்டம்
(BFA) பெற்ற கல்வயல் சாவகச்சேரியைச்
சேர்ந்த **கனகர் இரகுச்செல்வன்**
அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன்,
மேன்மேலும் பல பட்டங்கள்
பெற்று சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

(43614)(46.6.3)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## பயங்கரவாதச் சட்டத்தின் பயங்கரத்தை உணர்வோம்

கோபி, அப்பன், தேவிகன் எனப்படும் மூவரைத் தேடி நடத்தப்பட்ட வேட்டையில் 65 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் சாதாரண பொலிஸாரால் அன்றி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாராலேயே கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் 27 பேர் தற்போது குற்றச்சாட்டுக்கள் எவையும் இன்றி விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் எவரும் சாதாரண சட்டங்களின் கீழே கையாளப்படவில்லை. கைது செய்யப்பட்ட 48 மணி நேரங்களுக்குள் அவர்கள் நீதிமன்றங்களின் முன்பாக நிறுத்தப்படவுமில்லை. எனவே அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஒரு சொல் "சட்ட விரோத நடவடிக்கை"க்காக எவரையும் 18 மாதங்கள் வரையில் தடுத்து வைக்க முடியும் என்று சொல்கிறது. ஆனால் 'சட்ட விரோத நடவடிக்கை' என்றால் என்ன என்பதை அந்தச் சட்டம் தெளிவாக வரையறுக்கவில்லை. எனவே, எதை வேண்டுமானாலும் 'சட்ட விரோத நடவடிக்கை' என்று கூறி அதில் ஈடுபடுபவர்களைப் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடிய அளப்பரிய அதிகாரம் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக் கைது செய்பவர்களைச் சட்டத்தரணிகளேகூட அணுகி சட்ட உதவிகளை வழங்குவது மிக மிகச் சிரமமானது. கைது செய்யப்பட்ட 65 பேரும் இவ்வாறுதான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 27 பேர் விடுவிக்கப்பட்டிருப்பதில் இருந்து அவர்களுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் தொடர்புகள் எவையும் இல்லை என்பது தெளிவாகியிருக்கிறது. அவர்கள் சாதாரண சட்டங்களின் கீழேயே கையாளப்பட்டிருக்க வேண்டியவர்கள். ஆனால் அப்படி நடக்கவில்லை.

அவசரகாலச் சட்டம் கைவிடப்பட்டு, அதிலுள்ள பல அம்சங்களைச் சேர்த்துக்கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கையின் சாதாரண சட்டங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதே, இப்படி நடக்கும் என்று மனித உரிமைகள் அமைப்புகள் கடுமையாக எச்சரித்திருந்தன; கண்டித்திருந்தன. ஆனால், அப்படி நடக்காது என்று அரசு அன்று கூறியிருந்தது.

இன்றோ, தமிழர்களுக்கு எதிராகத் தான்தோன்றித்தனமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அளவுக்கதிகமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஒரு வருட காலத்திற்குள் மட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமார் 150 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒன்றில் அவர்கள் நீதி விசாரணைகள் ஏதுமின்றி நீண்ட காலத்துக்குத் தடுத்து வைக்கப்படுகிறார்கள். அல்லது அப்படித் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டு, அதனால் குற்றத்தை ஒப்புக்கொண்டு சில வருட புனர் வாழ்வுக்கு உட்படுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

நீண்ட காலம் விசாரணைகள் இன்றி சிறையில் வாடுவதைவிட, சுமத்தப்பட்ட குற்றத்தை (செய்திருந்தாலும் சரி, செய்யாமல் விட்டாலும் சரி) ஒப்புக்கொண்டு புனர் வாழ்வுக்குச் சென்றுவிடுகிறார்கள். ஒரு வகையில் இந்தக் குற்ற ஒப்புதலும் பலவந்தப்படுத்தி அல்லது சித்திரவதைப் படுத்திப் பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்திற்கு ஒப்பானதுதான். என்றாலும் வேறு வழி இன்றி பலரும் இந்தக் குற்ற ஒப்புதலை நீதிமன்றங்களில் செய்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டமே இவை அனைத்துக்குமான அதிகாரத்தை ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்குகின்றது. இன்று வன்முறையைத் தூண்ட முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் பட்டை தீட்டப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம், நாளை தமிழர்களின் உரிமைகள், மனித உரிமைகள் போன்றவற்றுக்காகக் குரல் கொடுப்பவர்களுக்கு எதிராகவும் எந்தவொரு போராட்டக்காரர்களுக்கு எதிராகவும் பாய்வதற்குத் தயங்காது. விரைவில் அந்த நிலைமை குறைந்தது வடக்கிலாவது தோன்றிவிடும்.

அதனைத் தடுத்து நிறுத்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக அகற்றுவதற்கான போராட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் குழுக்கள், ஆர்வலர்கள், எதிர்க்கட்சிகள், தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் அனைத்தையும் ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகளையும் ஒருங்கிணைந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றும் வரை அது ஓயக்கூடாது.

கட்டுரை

## இலங்கை அரசுக்கு எதிராக
# பொதுநலவாயம் செயற்படுமா?

**இலங்கை அரசானது அனைத்துலக விசாரணைக்கு முகங்கொடுக்க மாட்டேன் எனக் கூறுவதற்கு எதிராக பொது நலவாய அமைப்பு ஏதாவது நடவடிக்கை ஏதும் எடுக்குமா? உண்மையில் இவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது. இவ்வாறு முன்னாள் கரீபியன் நாடுகளுக்கான இராஜதந்திரி சேர் றொனால்ட் சான்டேர்ஸ் தாம் எழுதியுள்ள கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார். HuntingtonNews.net என்னும் இணையத் தளத்தில் வெளிவந்த அக்கட்டுரையை புதினப் பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் நித்திய பாரதி.**

இலங்கையில் தொடரப்பட்ட போரின் போது அதில் பங்கு கொண்ட இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு முழுமையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைக் கோருகின்ற தீர்மானம் ஒன்று மார்ச் 21 அன்று ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்பினரும் பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். எது எவ்வாறிருப்பினும், ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தான் ஏற்க மாட்டேன் எனவும், ஆணையாளரால் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைக்குத் தான் ஒத்துழைப்பு வழங்கமாட்டேன் எனவும் இலங்கை அரசு. உறுதியாக அறிவித்துள்ளது.

இலங்கை அரசு ஐ.நாவால் ஆணை வழங்கப்பட்டுள்ள விசாரணையை ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பு வழங்கினாலென்ன, வழங்கா விட்டாலென்ன இந்த விசாரணை எப்படியும் இலங்கை மீது மேற்கொள்ளப்படும் என்பது உறுதியானதாகும். ஆகவே, இலங்கை அரசு இதற்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால், இதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் விசாரணையாளர்களிடம் தெரியப்படுத்தப்பட மாட்டாது. ஆனால், இந்த விசாரணை மூலம் தன்னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக புதிய தகவல்கள் எதுவும் வெளியிடப் படுமா என்பதை அறிவதில் இலங்கை அரசு அக்கறையாக உள்ளது போல் தென்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விவாதத்தின் போது, ஐ.நாவால் மேற்கொள்ளப்படும் விசாரணை எக்காலப்பகுதியை உள்ளடக்கியது என்பதை தீர்மானம் குறிப்பிடத் தவறியுள்ளதாகவும், இக்காலப் பகுதியானது 2002-2009 வரையானதாகவோ அல்லது 2002க்கு முற்பட்ட காலப்பகுதியாகவோ கருதப்படலாம் எனவும் இலங்கைப் பிரதிநிதி சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளையில், இலங்கை இராணுவ அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணையின் போது தமது வாக்கு மூலங்களைப் பதிவுசெய்வர். இந்த விசாரணைக்கு இலங்கை அரசு தனது ஒத்துழைப்பை வழங்காவிட்டால் இது இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும்.

உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை சாட்சிப்படுத்தும் காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களும் இந்த விசாரணையின் போது இணைக்கப்படும். இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்களில் 40,000 வரையான இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை உறுதியானதாகும்.

இலங்கை அரசின் இராணுவமே அதிகளவான மீறல்களைப் புரிந்துள்ளது என்பதையும் அரசாங்கத்தின் மூத்த பிரதிநிதிகள் இவற்றுக்குப் பொறுப்பாக உள்ளனர் என்பதையும் அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு மற்றும் பிரித்தானியாவின் சனல் - 4 செய்திச் சேவை போன்றவை உள்ளடங்கலாக பல அமைப்புக்கள் சாட்சியங்களை முன்வைத்துள்ளன.

எதுஎவ்வாறிருப்பினும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானமானது இலங்கை அரசை மட்டும் விசாரணைக்கென அழைக்கவில்லை. போரில் பங்கு கொண்ட இரண்டு தரப்பினராலும் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளப்படும் எனத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, தமிழ்ப் புலிகள் போர்க் காலத்தின் போது பல மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமிழ் பொதுமக்களுக்கு எதிராகவும் மீறல்களைப் புரிந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைவராக இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ உள்ள போதிலும், இவரது அரசாங்கமானது ஐ.நாவால் ஆணை வழங்கப்பட்ட விசாரணையை ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பு வழங்க மறுத்துவருகின்றது. பொதுநலவாய அமைப்பின் அடிப்படை விழுமியங்களின் பிரகாரம், இலங்கையானது அனைத்துலக விசாரணையை ஏற்கமறுப்பதானது ஒரு மீறல் சம்பவமாகும். அனைத்து லகச் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண் டும் என பொதுநலவாயத்தின் கோட்பாடு சுட்டிநிற்கிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிறுபான்மை மத அமைப்புக்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் தேவாலயங்கள், ஆலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் போன்றவை தொடர்பாக இலங்கை அரசு விசாரணை செய்து நீதி வழங்கத் தவறியுள்ளதாக பொதுநலவாய அமைப்பு இலங்கை மீது ஏற்கெனவே பழிசுமத்தியிருந்தது.

இலங்கை அரசு மீது இவ்வாறான பல மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் 2013ல் இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாடு இடம்பெற்ற போது அதனை கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்பர் புறக்கணித்திருந்தார். இந்த உச்சி மாநாட்டிற்கு பொதுநலவாய அமைப் பின் 53 உறுப்பு நாடுகளில் 26 நாட்டுத் தலைவர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

இந்நிலையில் தற்போது இலங்கை அரசு அனைத்துலக விசாரணைக்கு முகங்கொடுக்க மாட்டேன் எனக் கூறுவதற்கு எதிராக பொதுநலவாய அமைப்பு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? உண்மையில் இவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது. பொதுநலவாய அமைப்பின் ஒன்பது உறுப்பு நாடுகள் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கின்றன. இந்த ஒன்பது நாடுகளில் சியாராலியோன், பிரித்தானியா மற்றும் பொற்ஸ்வானா ஆகிய மூன்று நாடுகள் மாத்திரமே இலங்கை தொடர்பில் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

இதேபோன்று பொதுநலவாயத்தின் உறுப்பு நாடுகளாகவும் ஐ.நா.மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளாகவும் உள்ள பாகிஸ் தான், கென்யா மற்றும் மாலைதீவு ஆகிய மூன்றும் இத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தன. இதேபோன்று இந்தியா, நமிபியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய மூன்றும் இவ்வாக் கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே இலங்கை மீது அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்படுவது தொடர்பில் பொதுநலவாயத்தின் உறுப்பு நாடுகள் மூன்றாகப் பிளவுபட்டுள்ளன. ஆகவே பொதுநலவாயமானது இலங்கை தொடர்பில் நீதியான தீர்வொன்றை எட்ட வேண்டும். பொதுநலவாயத்தின் அடிப்படை விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளைப் பாதுகாக்கின்ற ஒன்பது அமைச்சர்களைக் கொண்ட இதன் அமைச்சரவை செயற்பாட்டுக் குழுவானது இலங்கை மீதான அனைத்துலக விசாரணை தொடர்பாக விவாதித்து தீர்வை எட்டமுடியும். ஆனால் இதுவரையில் இந்தக் குழு, இலங்கை தொடர்பில் எவ்வித விவாதத் தையும் முன்வைக்கவில்லை. அதாவது இலங்கையால் பொதுநலவாயத்தின் அடிப்படை விழுமியங்களுக்கு ஏற்ப மிக மோசமான மீறல்கள் எவையும் இடம்பெறவில்லை என்பதன் அடிப்படையில் பொதுநலவாயத்தின் அமைச்சரவை செயற்பாட்டுக் குழு, இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையையும் முன் னெடுக்கவில்லை.

ஒன்பது அமைச்சர்களைக் கொண்ட பொதுநலவாயத்தின் அமைச்சரவை செயற்பாட்டுக் குழுவில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் ஒருவராவார். ஏற்கெனவே பீரிசால் மிகவும் உறுதியாக மறுக்கப்பட்ட மனித உரிமைகள் சபையின் தீர்மானம் தொடர்பாக இந்த அமைச்சரவைக் குழுவில் கலந்துரை யாடுவதற்கு பீரிஸ் ஒப்புக் கொள்ளமாட்டார். பாகிஸ்தான் உட்பட அமைச்சரவைக் குழுவில் பங்குபற்றும் சில நாடுகள், சபையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. இதில் இந்தியா வாக்கெடுப்பைப் புறக்கணித்திருந்தது. அமைச்சரவைக் குழுவில் பங்குபற்றும் சியாராலி யோன் மட்டுமே சபையின் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தது.

ஆனால் பொதுநலவாயத்தின் அமைச்சரவை செயற்பாட்டுக் குழு, இலங்கை அரசு, ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும். அத்துடன், இலங்கையில் போர் ஆரம்பித்த காலத்திலிருந்து போரில் பங்குபற்றிய இரண்டு தரப்புக் களாலும் இழைக்கப்பட்ட மீறல்கள் விசாரணை செய்யப்படுவதை ஐ.நா. மனித உரிமைகள் சபை உறுதிப்படுத்த வேண்டும் எனப் பொது நலவாயத்தின் அமைச்சரவை செயற்பாட்டுக் குழு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# ஆளுமையில் சுயதிறனின் பங்கு

சொ.தர்மலிங்கம்



"மனிதனுடைய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்த உலகம் போற்றும் உளவியலாளர் ஆபிரகாம் மாஸ்லோ, மனிதனின் வளர்ச்சி யில் நாட்டம் கொண்டு அதற்காகப் பல கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளார். மாஸ்லோ வின் அடிப்படையில் பார்த்தால் சுய திறன் அடைதல் என்பது மனிதனானவன் தன்னிடமுள்ள ஆற்றல்களையும் திறமைகளையும் முற்று முழுதாகப் பயன்படுத்துவதையே குறிப்பதாகும். எனவே ஒருவன் தனது ஆற்றல், திறமைகளைச் சரிவரப் பயன்படுத்த முற்படுவானாயின் அவன் சுயதிறன் எய்தியவனாகக் கருதப்படுவான்.

தலைமைத் தகுதியுடையவர்களில் அநேகம் பேர், சுயதிறன் உடையவர்கள். இவர்கள் எந்த வேலையையும் தங்களால் சரி வரச் செய்ய, செய்விக்க முடியும் என்ற நம்பிக்கையுடையவர்கள். தன்னை நன்றாகப் புரிந்து கொண்டும் தன்னுடன் வேலை செய்வோரைப் புரிந்து கொண்டும் செயலாற்றுவர். சுயதிறன் எய்தியவர்கள், ஏனையோரைச் செயலில் ஊக்குவிக்கக் கூடியவர்கள் எந்த வேலையாயினும் தமது சுய கட்டுப்பாட்டுடன் செய்து முடிக்க முனைவர். சுயதிறன் உடையவர்கள், நேரம் பாராது உழைப்பர். ஏனெனில் அவர்களுக்கு தங்கள் திறனில் நம்பிக்கையுண்டு. இவர்கள் உடல், உள ரீதியாக தகைமை பெற்றவர்களாக, சொந்தப் பிரச்சினைகளுக்கு கட்டுப்படாதவர்களாக இருப்பர். இவர்கள் ஆற்றல் மிக்கவர்களாகத் திறமையுடையவர்களாகக் காணப்படுவர். தன்னையும் பிறரையும் ஏற்று நடக்க முனைவர். தாமே ஊக்குவிப்பவர்களாக இருப்பர். செயல்களைச் செய்யக்கூடிய, செயற்படுத்தக் கூடிய திறமைசாலிகளாக இருப்பர். சுயதிறன் உடையவர்கள் தெரிந்தெடுத்த இலக்கை நோக்கி அதனை அடைய அக்கறையுடன், அர்ப்பணிப்புடன், ஆர்வத்துடன் செயற்படுவார்கள். தனது திறமைகள் எதனையும் அவன் வீண்விரயம் செய்ய முற்படமாட்டான். எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுத்து செயலாற்றுவான்.

மனிதனுடைய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்த உலகம் போற்றும் உளவியலாளர் ஆபிரகாம் மாஸ்லோ, மனிதனின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டு அதற்காகப் பல கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளார். மாஸ்லோவின் அடிப்படையில் பார்த்தால், சுய திறன் அடைதல் என்பது, மனிதனானவன் தன்னிடமுள்ள ஆற்றல்களையும் திறமைகளையும் முற்று முழுதாகப் பயன்படுத்துவதையே குறிப்பதாகும், எனவே ஒருவன் தனது ஆற்றல், திறமைகளைச் சரிவரப் பயன்படுத்த முற்படுவானாயின், அவன் சுயதிறன் எய்தியவனாகக் கருதப்படுவான்.

முதலாவதாக, மனிதன் அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்துகிறான். உணவு, உடை, உறையுள் என்பன உயிர் வாழ்வதற்குத் தேவைகளான அடிப்படைகள். இரண்டாவதாக, மனிதன் பாதுகாப்பை நாடுகிறான். மிருகங்களிடமிருந்து, எதிரிகளிடமிருந்து .இடி, மின்னல், மழை போன்ற இயற்கைக் காரணிகளிலிருந்து, பயங்களிலிருந்து பாதுகாப்பை நாடுகிறான். மூன்றாவதாக மனித சமுதாயத்தின் ஒரு பகுதியாக பிறரால் தான் ஏற்றுக் கொள்ளப்படுவதை, பிறரால் அங்கீகரிக்கப்படுவதை விரும்புகிறான். சமுதாயத்தின் ஒரு பகுதியாகத் திகழ்வதில் நிறைவு காண்கிறான். இதன் காரணமாகவே சங்கங்கள் அமைப்பதில் முயல்கிறான். நான்காவதாக, தனது திறமைகளுக்காக சமுதாயத்தால் தான் ஏற்றுக் கொள்ளப்படுவதை, பாராட்டப்படுவதை அவன் விரும்புகிறான். அதற்காக ஏங்குகின்றான். மனித மனத்தின் அடிப்படை இயல்பாக இது இருக்கிறது. ஐந்தாவதாக, தனது முழுத் திறமைகளையும் அறிவையும் வெளிக் கொணர்ந்து தான் மேற்கொண்ட இலட்சியத்தை அடைந்து அதில் நிறைவு பெறுகிறான். ஒருவனின் பூரணத்துவம் எதுவோ, அதனை எவ்வளவு தூரம் அடைய முடியுமோ, அவ்வளவையும் அடைந்து நிறைவு காணும் மனம் அடிப்படையில் இருந்து மனிதனைச் செயற்படுத்துகிறது.

ஆற்றல் என்பது எல்லோரிடமும் உண்டு. எனவே எமது ஆற்றலுக்கு ஏற்ப இலக்கை அடைய முயல வேண்டும். தனது ஆற்றலுக்கு மேலான இலக்கினைக் கொண்டிருப்பின், இலக்கை அடைய முடியாது அவதியுற நேரிடும். தனது ஆற்றலுக்கு குறை வான இலக்கைக் கொள்வானாயின், தனது சக்தியை, தனது திறமையை வீணாக்குகிறான் என்பதே பொருளாகும். எனவே நாம் சாதகமான உணர்வுகளுடன் செயலாற்ற வேண்டும். தனது திறனில் நம்பிக்கை கொண்டு செயலாற்ற வேண்டும். எனவே தளராமனத்துடன் செயலாற்ற வேண்டும். ஒரு குறிக்கோளைத் திட்டமிட்டுக் கொண்டு, அதை நிறைவேற்றுவதற்காக முயலும் போது, எவ்வளவு இடுக்கண்கள் ஏற்பட்ட போதிலும், குறிக்கோளை மட்டும் விட்டு விடாமல் உறுதியுடன் ஒருவன் செயற்படுத்துவானானால், எப்படியும் வெற்றி பெறுவான் என விஞ்ஞான மேதை கிளென் மார்டின் கூறுகிறார்.

சரியான நேரத்தில், சரியான முறையில் செயற்படுபவர்கள் சுயதிறனுடையவர்களாக இருப்பர். எனவே அவர்கள் நெருக்கடி ஏற்பட்ட போதும் சரி வரச் செயற்பட முற்படுவர். செய்யப் போகும் விடயம் கடினமாயினும் செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கையில் செயற்படுவர். சுயதிறன் எய்துபவர் சாதித்த சாதனைகளை ஆராய்ந்தால் அதன் முக்கியத்துவம் விளங்கும்.

**ஆண்ட்ரூகார்னகி (1835 - 1919)**

அமெரிக்காவின் "உருக்காலை மன்னர்" என்று போற்றப்பட்ட ஆண்ட்ரூகார்னகி, ஸ்கொட்லாந்தில் வறுமையில் பிறந்தார். 1846 இல் அவருடைய பெற்றோர்கள் அமெரிக்காவில் குடியேறிய பொழுது அவரது வயது 13. ஒரு பருத்தி ஆலையில் நூல் சுற்றும் வேலை கிடைத்தது. ஆனால் அவரை ஒத்த பிள்ளைகள் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தனர். இரவு வகுப்பில் பாடம் படிப்பார். வணிகக் கணக்கு முறை கற்பதில் அவருக்கு அதிக விருப்பம் இருந்தது. ஆலையில் மட்டுமல்ல, வீட்டிலும் நூல் நூற்று வீடுவீடாக எடுத்துச் சென்று விற்றார். கார்னகி தனது கடின உழைப்பால் பெற்ற ஆற்றலைக் கொண்டு தனக்கென்று ஒரு பாதையை உருவாக்கினார்.

**ஈஸ்ட்மன்**

இவர் ஆறு வயதில் தந்தையை இழந்தார். குழந்தைப் பருவத்தில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானார். ஓர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் காலை முதல் இரவு வரை வேலை பார்த்தார். மாலையில் அலுவலக வேலை முடிந்ததும் கட்டடத்தையும், சுற்றுப் புறத்தையும் கூட்டிப் பெருக்கிச் சுத்தப்படுத்தினார். அவருக்குக் கிடைத்த சம்பளம் வாரத்துக்கு மூன்று டொலர்களாகும். குறைந்த வருவாயில் தன்னையும் தன்னைச் சார்ந்து இருக்கும் தாயையும், இரண்டு மூத்த சகோதரிக்ளையும் காப்பாற்ற வேண்டிய அவல நிலை. ஊதியமோ போதவில்லை. வேறு இடத்தில் தகுதியான வேலையைத் தேடிக் கொண்டார். சுயமாக கணக்கியலைக் கற்றார். கல்வி நிலையங்களில் பட்டம் பெற முடியவில்லை. கணக்கியல் அனுபவத்துடன் வங்கிக் கணக்காளர் வேலையில் அமர்ந்தார். ஏழு ஆண்டுகள் வங்கி வேலை பார்த்தார். 3000 டொலர்களைச் சேமித்தார். விடுமுறைப் பயணம் சென்றார். அப்போது ஒரு கமராவை விலைக்கு வாங்கிக் கொண்டு சென்றார். ஆனால் அந்த கமரா செப்பமற்றது. பெரிய அளவானது. போட்டோ கிராபிக் புத்தகங்கள் வாங்கிப் படித்தார். அந்த நாளில் தகடுகளைப் பயன்படுத்தி படம் எடுத்தனர். கண்ணாடித் தகட்டில் ஜெலற்றின் திரவத்தை தடவிப் பயன்படுத்தி வெற்றி பெற்றார். எனினும் அதன் ஆயுள் குறைவாக இருந்தது. ஈஸ்ட்மன்ட் தயாரித்த உலர் தகடுகளை மக்கள் வாங்கினர். கமராவில் அளவைக் குறைத்து பிளேட்டுகளையும் நீக்கி புகைப்படம் எடுத்து செலவைக் குறைக்க முற்பட்டார். இறுதியில் வளையக் கூடிய மென்தாள் ஒன்றைக் கண்டுபிடித்தார். அதைப் புகைப்படக் கருவிக்குப் பயன்படுத்த முடியும். 1889 அறிமுகமானது. 2 ஆண்டுகளில் ஒரு லட்சம் கமராக்களை விற்றார் ஈஸ்ட்மன். 1892 இல் 40 வயதில் தமது நிறுவனத்தைத் தொடங்கினார். இப்படியாக வறுமையில் உழன்று, சுயதிறன் எய்தி புகழ்பூத்தவர்களில் ஈஸ்ட்மன் எனும் கோடீஸ்வரர் ஒருவராவார்.


**ஹென்றிபோர்ட் (1863 - 1947)**

இவரது தந்தை ஒரு விவசாயியாக வாழ்ந்தார். வறிய குடும்பம். இவர் இயந்திர வேலையில் ஈடுபாடு காட்டினார். குதிரை இல்லாமல் ஓடும் வண்டியைத் தயார் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். பகலில் எடிசன் நிறுவனத்தில் வேலை பார்த்தார். இரவில் தனது மனைவியான கிளாராவுடன் சேர்ந்து தங்கள் வீட்டின் பின்புறமுள்ள தொழிற்சாலையில் ஆராய்ச்சியில் ஈடுபடுவார்.

தான் உருவாக்கிய இயந்திரத்தின் வடிவை அபிவிருத்தி செய்தார். மோட்டார் வாகனச் சக்கரங்களைத் திருப்பும் அச்சுக்களைப் பொருத்தினார். ஹென்றியின் வாகனம் முதன் முதலாக 1896 ஜூன் 4 ஆம் திகதி சாலையில் ஓடியது. அப்போது அவருக்கு 33 வயது. குறைந்த நேரத்தில் கூடிய சம்பளம் பெற்றதால் தொழிலாளர்கள் தங்கள் முழுத்திறமையையும் காட்டி உழைத்து அதிக மனித சக்தியை நல்கினர். 1927 இல் புதுப்புது மொடல்களை அறிமுகப்படுத்தினார். 300 கோடி டொலர் முதலீட்டில் போர்டு பவுண்டேஷன் எழுந்தது. ஆண்டுக்கு 25 கோடி டொலர்களை வறியோருக்கு ஒதுக்கினார். 1947 இல் மறைந்தார். இன்றைய மோட்டார் தொழிலின் முன்னோடியான போர்ட் சுயதிறன் மூலம் உச்சநிலைக்கு வந்து கோடீஸ்வரரானார்.

---

## தவக்காலச் சிந்தனை



### எமது வாழ்வில் இறைவனைக் காட்டுவோம்

பணம் பத்தும் செய்யும் என்பார்கள். இயேசுவால் உருவாக்கம் பெற்று ஒரே பாத்திரத்தில் உண்டு. உறவாடி பணி செய்து வந்த யூதாஸின் மனதில் பணத்தாசை வடிவில் சாத்தான் புகுந்து கொண்டது. முப்பது வெள்ளிக்காசுக்காக குற்றமற்ற இரத்தத்தை முத்தமிட்டு காட்டிக் கொடுத்து காட்டிக் கொடுப்போரின் தலைவனாக சரித்திரத்தில் இடம்பிடித்தான் யூதாஸ் ஸ்காரியோத். கூட இருந்து குழி பறித்த அவன் இயேசுவுக்கு ஏற்படப்போகும் துன்ப விளைவுகளின் கனாகத்தை அறியாதவனாக பணத்தின் மீதே பற்றுக் கொண்டிருந்தான். முடிவு தூக்குக் கயிறே தஞ்சமானது.

யூதாஸ் ஆரம்பித்து வைத்த காட்டிக் கொடுப்பு இன்று வரை கச்சிதமாக தொடரப்படுகிறது. எட்டப்பன், எகலப்பொல, காக்கை வன்னியன், வாரிசுகளாக இன்றும்... பட்டத்தை, பதவியை, கதிரையை தக்க வைத்துக் கொள்ள தடையான நேர்மையாளர்களை வீண்பழி சுமத்தி காட்டிக் கொடுக்கும் படலங்கள் நீண்டு செல்கின்றன.

மனிதப் பிறவிகளில் குற்றமற்றவன், பாவமற்றவன் எவருமில்லை. சுட்டும் விரலால் பிறரை சுட்டி குற்றம் கூறுகையில் ஏனைய மூன்று விரல்களும் எமது நெஞ்சத்தை சுட்டி நிற்கின்றன என்பதை உணர்ந்து கொண்டால் காட்டிக் கொடுக்கும் நிலை தோன்றாது. தவறான காட்டிக் கொடுப்புக்கள் குற்றமற்றவன் தண்டனை பெறவும் அவரைச் சார்ந்தோர் வறுமையில் வாடவும் வழிவகுக்கும். மனித நீதி தடுமாறலாம். ஆனால் இறைவன் நீதி மாறாதவர். மன்னிப்பவர். மனிதனை மனிதன் காட்டிக் கொடுப்பதை விடுத்து மனிதனுக்கு இறை வழியைக் காட்டிக் கொடுப்போம். எமது அன்பு, தியாகம், பணிவு, பகிர்வு போன்ற முன்னு தாரண வாழ்வால் எம்மில் இறை வணைக் காட்டி வாழ்வோம். அனைத்தையும் அறியும் இறைவனுக்கு நாம் எவரையும் காட்டிக் கொடுக்கத் தேவையில்லை.

*சுமித்ஜெயக்கொடி, றக்கா வீதி, யாழ்ப்பாணம்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வருமானம் நல்ல முறையில் வந்தாலும் சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப் படுத்திக்கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன்மூலம் பல பிரச் சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

**இடபம்**: மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். சிலர் நீண்டநாள் களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்க ளின் வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டுச் செய்வீர்கள்.

**மிதுனம்**:மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவீராக உயர்வீர்கள். வியாபாரிகள் பொறுமையுடன் செயற்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் சிறப்பாகவே தொட ரும்.

**கடகம்**: சிறிய நோய் என்றாலும் உடனடியாக மருத்துவரை அணு குவது நல்லது. மருத்துவம் சார்ந்த செலவுகள் காத்திருக்கின்றன, கவனம் தேவை. கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். இருந்தாலும் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**சிங்கம்**: நெருங்கியவர்களுக்கு அரிய உதவிகளைச் செய்து கௌரவம் அடைவீர்கள். உங்கள் சிந்தனையில் தெளிவு பிறக்கும். செயலில் வேகம் அதிகரிக்கும். புதிய நிலங்களை வாங்குவதற்குக் கடன் கிடைக்கும்.

**கன்னி**: எவரையும் பகைத்துக்கொள்ளாமல் உங்களின் வேலை களில் மட்டுமே கவனமாக இருக்கவும். கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும்.

**துலாம்**: குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப் பயன் பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மிக பலம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: அனைவரிடமும் விட்டுக்கொடுத்து நடந்துகொண்டு குழப்பங்களைத் தவிர்க்கவும். மனதுக்குப் பிடித்த கேளிக்கை களிலும், விளையாட்டுகளிலும் ஈடுபட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப் பீர்கள்.

**தனுசு**: கையிருப்புப் பொருள்களையும், பணத்தையும் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். மேலும் குறுக்கு வழியில் எந்தச் செயலையும் செய்ய நினைக்க வேண்டாம். உறுதியான எண் ணத்துடன் பணியாற்றுவீர்கள்.

**மகரம்**: நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேசுவீர்கள். உங்களைப் பற்றிப் புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து சாதுரியமாக விலகிவிடுவீர்கள்.

**கும்பம்**: உங்களின் முயற்சிகள் பல மடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலை தூக்க நேரலாம்.

**மீனம்**: திறமையான செயல்களால் புகழும் அந்தஸ்தும் உயரும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். மாத இறுதியில் ஆன்மிகப் பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும்.

## நாளை

**சித்திரை-04 வியாழக்கிழமை | 17.04.2014**

திதி: துதியை பி.ப.12.32 வரை
நட்சத்திரம்: விசாகம்
மு.இ.11.22 வரை
சுபநேரம்: 07.34-09.04 வரை
இராகுகாலம்:.01.34-03.04 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### எரித்தல்களை ஒப்புநோக்குதல்

காரிகையை எரிப்பதுடன் ஒப்பிட்டால், ஒளிவீசும் ஓவியமாகும். சூனியக் காரி முதலிலிருந்தே குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்டு, மூச்சு அடைக்கும் சிறையில் அடைக்கப் பட்டு, குற்றத்தை ஒப்புக் கொள்வ தற்காகக் கொடூரமான சித்திரவதைக் குள்ளாவாள். பிறகு போலி விசா ரணை நடக்கும்; கேலிச் சிரிப்புக்கிடையே எரிக்குமிடத் துக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அவ்வளவு துன்பங்களும் போதாதென்று சுற்றி நிற்பவரின் வசைகளும் காதில் விழும். அந்த வசைகள் அவளுடைய ஆன்மா நரகத்தில் அழிவிலாத் தீயில் துயருறப் போவதன் அறிகுறியாகும்.

இந்து விதவை மிக விலை யுயர்ந்த தனது உடைகளை உடுத்து, விருந்தும் இசையும் தொடரத் தன் மரண வேதனையை எதிர் கொள்வாள்.
இந்தச் செயல் தமக்கும் தமது குடும்பத்துக்கும் சுவர்க்க இன்பத் தைத் தரும் என்பதே பெரும் பாலாரின் நம்பிக்கை. கொள் கைக்காக அவள் சாவை ஏற்றுக் கொண்டாள் என வழிபடப்பட்டு, அவளது பெயர் குடும்பத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பெறும்.
இந்தச் சடங்கு எவ்வளவு பயங்க ரமானதாக நமக்குத் தோன் றினாலும் கிறிஸ்தவ சூனியக்

# 2015இல் உலகை வட்டமிடத் தயாராகும் புதிய சோலர் விமானம்



Solar Impulse 2 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமா னம் ஒருமுறை பறக்க ஆரம்பித்ததன் பின்னர் மீண்டும் தரையிறங்காது தொடர்ச்சியாக பூமியை வட்ட மிடக்கூடிய வகையில் இருக் கும் என்று அந்தப் பொறியி யலாளர்கள் நம்புகின்றனர்.

சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் குழு ஒன்று சோலர் படலத்தில் செயற்படக்கூடிய விமானம் ஒன்றினை வடிவமைத்துள் ளது.
Solar Impulse 2 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமா னமானது ஒருமுறை பறக்க ஆரம்பித்ததன் பின்னர் மீண்டும் தரையிறங்காது தொடர்ச்சியாக பூமியை வட்ட மிடக்கூடிய வகையில் இருக் கும் என்று அந்தப் பொறியி யலாளர்கள் நம்புகின்றனர். இதற்கு முன்னரும் சோலர் விமானம் ஒன்றினை வடிவ மைத்துள்ள குறித்த பொறி யியலாளர்கள் அதனை விட வும் 8 மீற்றர் கூடிய நீளம் அதிகம் கொண்டதாக இப் புதிய விமானத்தின் விங்ஸ் பேனை வடிவமைத்துள்ளனர். இந்த விமானம் 2015 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத் துக்கும்ஜூலை மாதத்துக்கும் இடையில் தனது பறப்பை ஆரம்பிக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | 2 | 6 | | | |
| | | 9 | 4 | | 3 | | | |
| | | 3 | 8 | 1 | | 6 | 5 | 7 |
| 8 | | 2 | | 5 | 4 | | | |
| | 1 | | | 9 | | | 6 | |
| | | | 6 | 3 | | 5 | | 2 |
| 1 | 2 | 8 | | 6 | 7 | 4 | | |
| | | | 2 | | 5 | 9 | | |
| | | | 3 | 4 | | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 2 | 3 | 6 | 8 | 1 | 4 | 9 |
| 8 | 3 | 1 | 9 | 4 | 2 | 5 | 6 | 7 |
| 4 | 9 | 6 | 1 | 5 | 7 | 3 | 2 | 8 |
| 9 | 2 | 8 | 4 | 3 | 5 | 7 | 1 | 6 |
| 3 | 1 | 4 | 8 | 7 | 6 | 9 | 5 | 2 |
| 5 | 6 | 7 | 2 | 9 | 1 | 8 | 3 | 4 |
| 1 | 4 | 5 | 6 | 8 | 9 | 2 | 7 | 3 |
| 2 | 8 | 3 | 7 | 1 | 4 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 9 | 5 | 2 | 3 | 4 | 8 | 1 |




# கொலஸ்ட்ரால் அதிகரித்தால் தோலில் மஞ்சள் படிவுகள்

பரம்பரைக் காரணங்களால் கொலஸ்ட்ரால் அதிகரித்தவர்களுக்கு தோலில் மஞ்சள் படிவுகள் காணப்படும். இதை 'ஸாந்த லேஸ்மா' என்று சொல்வார்கள். பெரும்பாலும் அது கண்களுக்கு கீழே காணப்படும். இந்தக் கொழுப்பு படிவங்கள் நோயாளிகளின் தசை நாண்களிலும் படிய வாய்ப்புண்டு. அவர்களுக்கு மூட்டுப் பாதிப்புகள் அதிகமாக இருக்கும். இரத்தத்தில் 'டிரைகிளிசரைட் கொலஸ்ட்ரால்' மிகுந்தவர்களுக்கு உடலில் கொப்பளங்கள் போல் கொலஸ்ட்ரால் படிவுகள் ஏற்படும்.

விழித்திரையில் பார்த்தால், இரத்த ஓட்டம் தெரியாது. ஏதோ பால் ஓடுவது போல் கொலஸ்ட்ரால் இரத்தம் காட்சி அளிக்கும். அவர்களுக்கு மூளையில் இரத்த ஓட்டம் மெதுவாக நடைபெறுவதால், பல்வேறு நரம்புப் பாதிப்புகளும் ஏற்படும். கை,கால் பகுதிகளில் மதமதப்பு ஏற்படலாம். மூட்டு உபாதைகள் ஏற்படலாம். கண்கள் உலர்ந்து போகலாம். பக்கவாதம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.






# புற்றுநோய்க் கல வளர்ச்சியைத் தடுக்கும் செப்பு

கருங்கட்டி உட்பட சில அரிய வகை புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியை தடுக்கும் ஆற்றல், செப்புக்கு இருப்பதாக ஆராய்ச்சி ஒன்றிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆய்வுகளின்படி செப்பானது கலங்கள் கட்டி வடிவில் வளர்வதை தடுப்பதை கண்டறிந்துள்ளனர் விஞ்ஞானிகள்.

# கொம்புடன் வலம் வரும் மூதாட்டி



சீனாவில் மூதாட்டி ஒருவரின் நெற்றியில், திடீரெனக் கொம்பு முளைத் ததால் அவருடைய குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர்.

சீனாவின் ஹீனான் மாகாணத்தில் உள்ள லின்லோ கிராமத்தில் வசிக்கும் ஜாங் ருய்பெக் (வயது-101) என்ற மூதாட்டியின் நெற்றியில் கடந்தாண்டு லேசான வீக்கம் ஏற்பட்டது. ஆனால் அதனை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளாததால், நாளடைவில் அந்த வீக்கம் 6 சென்றிமீற்றர் நீளமுள்ள கொம்பாக வளர்ந்துள்ளது.

தற்போது, நெற்றியின் இடது பகுதியிலும் வீக்கம் தோன்றியுள்ள தாகவும், விரைவில் அங்கும் கொம்பு வளரும் என்று ஜாங்கின் கடைசி மகள் ஜாங் குவாஜெங் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த கொம்புகளை அகற்றினாலும், அவை உருவாவதற்கான காரணம் தெரியவில்லை என்று மருத்துவர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.



# பிரித்து வாழ விரும்பாத அதிசய இரட்டையர்

ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவிகள் தங்களுடைய வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில், ராய்ப்பூர் அருகே உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்த சிவனாத் மற்றும் சிவராம் என்ற இந்த இரட்டைப் பிறவிகளுக்கு, இரு மூளைகள், தலைகள் மற்றும் இருதயங்கள் இருந்தாலும், அவர்களுக்கு ஒரே ஒரு வயிறு இருப்பதால் சத்திரசிகிச்சைமூலம் அவர்களைப் பிரிப்பதும் கடினமாக இருந்தது. அவர்கள் தாங்களாகவே குளிப்பது, உடை மாற்றிக் கொள்வது, உணவு சாப்பிடுவது போன்ற செயல்களினால் மருத்துவர்களையே திகைக்க வைத்துள்ளனர்.

இந்த இணைபிரியாப் பிறவிகளும், தாங்கள் பிரிய விரும்பவில்லை என்றும் எப்பொழுதும் இணைந்தே இருக்கப் போவதாகவும், தாங்கள் எப்படிப் பிறந்தோமோ அப்படியே வாழ போவதாகவும் தெரிவித்துள்ளனர். அவர்கள் இவ்வாறு இருப்பது அனைவருக்கும் ஒரு வேடிக்கையாக இருந்தாலும், அவர்கள் வேதனையை நான் மட்டுமே அறிவேன் என்று அவர்களின் தந்தை தெரிவித்தார்.

# தக்காளிக் காயில் சத்துக்கள் அதிகம்

நாம் அன்றாடம் சமையலில் பயன்படுத்தும், சிவப்புத் தக்காளியை விட, தக்காளிக்காயில் சத்துக்கள் அதிகம் உள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.


இதுகுறித்து, அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியதாவது:

பச்சை நிற தக்காளிக்காயில் உள்ள டொமட்டடைன், மனிதர்களின் தசை வளர்ச்சிக்கும், வலிமைக்கும் உதவுகிறது. வயது அதிகரிப்பு மற்றும் பல்வேறு நோய்த் தாக்குதலால், தசை இழப்பு ஏற்படும். புற்றுநோய் மற்றும் விபத்துகளால் ஏற்படும் எலும்பு முறிவுகள் போன்றவற்றாலும், தசை இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆனால், காய்த் தக்காளியில் உள்ள, டொமட்டடைன் சத்து, இது போன்ற தசை இழப்புகளில் இருந்து பாதுகாக்கும். உடலில் உள்ள கொழுப்புகள் குறைந்தாலும், தசைகளின் உறுதியும், தோற்றமும் மாறாது என்றனர்.

பச்சை நிறத் தக்காளிக்காயில் உள்ள, டொமட்டடைன், மனிதர்களின் தசை வளர்ச்சிக்கும், வலிமைக்கும் உதவுகிறது.





## கழிவு நீரால் மாசடையும் கிளிநொச்சிக்குளம்

கிளிநொச்சி, ஏப்.16
கிளிநொச்சி நகரிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கிளிநொச்சிக்குளத்தில் கலந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கிளிநொச்சி நகரில் அமைக்கப்படும் கழிவு வாய்க்கால்களின் வேலைகள் பூர்த்தியடையாததாலும் திட்டமிடாத வகையில் குடியிருப்புக்கள், கட்டடங்கள் என்பன அமைக்கப்படுவதாலும் கழிவு நீர் குளத்தில் கலக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரின் சூழலைப் பாதுகாப்பதில் இந்தக் குளம் பெரும்பங்கு வகிக்கின்றது.

**கிளிநொச்சி நகரின் சூழலைப் பாதுகாப்பதில் இந்தக் குளம் பெரும்பங்கு வகிக்கின்றது.**

இதேவேளை இந்தக் குளத்தின் அணைக்கட்டின் கீழ்ப் பகுதியில் கழிவுகள் வீசப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

## அமதிபுரம் கிராமத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கிரவல் மண் அகழ்வுகள்

கிளிநொச்சி, ஏப்.16
துணுக்காய் அமதிபுரம் கிராமத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கிரவல் மண் தினமும் அகழ்ந்தெடுக்கப்பட்டு டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் செல்லும் வழியில் அமதிபுரம் கிராமம் உள்ளது. மீள்குடியமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் பெருமளவு நிலப் பரப்பில் காணப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டதுடன் கிரவல் மண்ணும் இந்தக் கிராமத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போது அமதிபுரம், அக்கராயன் ஆகிய கிராமங்களுக்கு இடையில்கிரவல்மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அமதிபுரம், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது. அக்கராயன் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது.

**அமதிபுரம், அக்கராயன் ஆகிய கிராமங்களுக்கு இடையில் கிரவல் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.**

இந்த இரண்டு கிராமங் களுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே கிரவல் மண் அகழ்வு இடம் பெற்று வருகின்றது.

புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, யூனியங்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய கிராமங்களில் கிரவல் மண் அகழ்வு இடம்பெறுவதுடன் இந்தப் பகுதியிலும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

## விபத்தில் காயமடைந்த சகோதரர்கள் மருத்துவமனையில்

அளவெட்டி, ஏப்.16
மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த சகோதரர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி பிற்பகல் 2.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோதரர்களான செல்வக்குமார் சுஜீபன் (வயது-21), செல்வக்குமார் கஜீபன் (வயது-20) ஆகிய இருவரும் மருதனார்மடத்தில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் சறுக்கியதால் தவறி விழுந்து இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்கள் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-36)

## அக்கராயனில் குடிதண்ணீர் நெருக்கடி

கிளிநொச்சி, ஏப்.16
கிளிநொச்சி அக்கராயன் மக்கள் குடிதண்ணீருக்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன், கெங்காதரன் குடியிருப்பு, இம்மாஸ்நகர், 50 வீட்டுத் திட்டம் உட்பட பல இடங்களிலும் குடிதண்ணீருக்கு நெருக்கடி நிலவுகிறது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் குடிதண்ணீர் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தியுள்ள போதிலும் அவ் வேலைகள் முழுமைப்படுத்தப்படாத நிலையில் உள்ளன.

எனவே அக்கராயன் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடியை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-18)

## ஆலயங்களில் மக்கள் கூட்டம்

நேற்றுமுன்தினம் புதுவருட தினத்தன்று அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலுள்ள இந்து ஆலயங்களில் அதிகாலை 6 மணிக்கு முன்னதாகவே ஆலய தரிசனம் செய்வதற்காக அதிகளவில் மக்கள் வந்ததைக் காண முடிந்தது.

அளவெட்டி கும்பழாவளை விநாயகர் கோவில், தெல்லிப்பழை துர்க்கையம்பாள் கோவில், மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில், மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் ஆகிய ஆலயங்களில் வருடப்பிறப்பையொட்டி விசேட பூசைகள், ஆராதனைகள் என்பன இடம்பெற்றன. இம்முறை அதிகளவான மக்கள்வருடப்பிறப்பை அமைதியான முறையில் ஆலய தரிசனத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். (க-36)


### கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் கிராம அலுவலர்களாக கடமையாற்றும் யாக்கோப்பு வேதநாயகம் மற்றும் வேதநாயகம் தர்சினி ஆகியோரின் தந்தையும், பேரனுமாகிய



**பிலிப்பு யாக்கோப்பு**

அவர்கள் 13.04.2014 ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தமையையிட்டு மீளாத்துயரில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி.

### 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**நவரட்ணம் குலசேகரம்**



பிறப்பு 1939.08.02
இறப்பு 2012.04.22

ஆண்டுகள் இரண்டு ஓடிமறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
கண்கள் பல உங்களைத் தேடி காணாமல் காலனுடன் சென்றதேனோ
சிறகொடிந்த பறவையாய் இடர் சுமந்து நிற்கின்றோம்
எந்நாளும் உங்கள் நினைவுகளுடன்.

(46815)(12.3.6)

சந்நிதி வீதி,
வர்ணன், அச்சுவேலி.
மனைவி, பிள்ளைகள்.

### எட்டிலும் எட்டாயா



தோற்றம் 07 . 04 . 1944
மறைவு 14 . 04 . 2006

அமரர்
**சிவக்கொழுந்து இராஜதுரை**

திதி: பிரதமை [16:04:2014]

என்னுயிரில் கலந்த உறவே
நான் தங்களைச் சேரும் வரை
உந்தன் நிஜமான நினைவுகள் வாழும் வளரும்
'எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே'

தங்கள் ஆருயிர்: மனைவி,
ஸ்ரீமதி. தவேஸ்வரி இராஜதுரை
(M.A, M.Phill), ஆசிரிய ஆலோசகர் - கோப்பாய்

குப்பிளான்,
ஏழாலை.

(46772)(12.3.6)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27.07.1963
மறைவு 16.03.2014



**இளையவலி குண்டுமணியம்**

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழ வைத்த தெய்வமே
நித்தமும் உங்களது ஆத்மா
சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

54/11 சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

நிர்மலா (மனைவி),
சுதேசன் (நிமால் மகன்),
டஸ்னி (மகள் - கைதடி)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

**கந்தசாமி மரியவிதுர்சன்**



மண்ணில் 1999.06.05
விண்ணில் 2009.04.16

நீங்கா நினைவலைகள்
அழகான தேன் கூட்டில் அனல் வீழ்ந்ததோ
வளமான பூங்காற்று புயலானதோ
ஏங்கி ஏங்கி கண்ணீரால் மிதக்கின்றோம்
நாம் அழும் குரல் கேட்கவில்லையா?
வாச மலராய் வந்துதித்த பாசமகனே
நெஞ்சிருக்கும் காலமதில் உனது
நினைவோடு வாழ்வோம்.

குடும்பத்தினர்.
VC அருகில், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(46823)(12.3)

### முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**கலாதேவி சந்தானகிருஷ்ணன்**

திதி: 05.05.2014

மலர்வு 24 - 11 - 1952
உதிர்வு 16 - 04 - 2013

எம்மைப் பிரிந்து போன எம் அம்மாவே -நிதம்
விழியில் விரியும் உங்கள் நினைவில்
இதயம் எரிந்து வேகுகின்றோம் -கண்
இமைகள் சுடநீர் சிந்துகின்றோம்.

தூக்கிச் சுமந்த உங்கள் கைகளும் -எம்
துக்கம் தணித்த உங்கள் தோள்களும்
தூங்க வைத்த உங்கள் தாய் மடியும் - இனி
தூரம் ஆகிப் போனதம்மா..
துயரம் நெஞ்சை வாட்டுதம்மா

கருவாய் சுமந்து உருவாய் வளர்த்து -எம்மை
உயர்த்தி வளர்த்த எங்கள் தாயே!- இனி
உங்கள் நினைவை சுமந்து காலம் முழுதும்
நீங்கள் காட்டிய நல்வழி தொடர்ந்திடுவோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 05.05.2014 திங்கட்கிழமை சென்னையில் கே.கே. நகரில் உள்ள அவரது இல்லத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

தொடர்பு:
ஓமான் - +968 99429816, சென்னை - +91 9790716623,
இலங்கை - +94 779927788

V.R.கிருஷ்ணன் குடும்பத்தினர்,
(சந்தான கிருஷ்ணன்)
K.K.நகர், இந்தியா.

(சி13624)(5.6.3)




பெண்கள் மற்றும் ஊடக சங்கங்களுக்கான கூட்டமைப்பின் குறும்படம் போட்டியில் வெற்றி பெற்ற குறும் படங்களின் தயாரிப் பாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு பொறளை புஞ்சி தியேட்டரில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதல் இடத்துக்கான விருதை யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட த பலன்ஸ் குறுந்திரைப் படத்துக்காக சிவலிங்கம் சிவராஜ்ஜும், இரண்டாது இடத்தைப் பெற்ற சிந்துவிளி குறுந்திரைப்படத்துக்காக சனத் திஸநாயக்கவும், மூன்றாவது இடத்தைப்பெற்ற அச்சமில்லை அச்சமில்லை குறுந்திரைப் படத்துக்காக ஏ.எஸ்.மஹ்ரூப்பும் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். (ச-10)

# சிறுபான்மையினருக்கு எதிரான செயல்களை நிறுத்த வேண்டும்

***பொதுபல சேனாவை கேட்கிறார் வடமாகாண சபை உறுப்பினர்***

மன்னார்.ஏப்.16

பொதுபல சேனா அமைப்பு சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயல்களை முற்றாக நிறுத்த வேண்டும். மிருகங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கூட அகதி முஸ்லிம்களுக்கு கிடைக்கவில்லை என்று வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:-

1990 ஆம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட அநாதரவற்ற முஸ்லிம்களுக்கு இன்று பொது பல சேனாவால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.



*றிப்கான் பதியுதீன்*

இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது. அதனால் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமான நாடு இது. ஜனாதிபதியின் பெயரை நாசப்படுத்தும் செயல்களையும், துரோகச் செயல்களையும் செய்கின்ற பேரினவாதிகளின் முற்போக்கு செயல்களையும் அடாவடித் தனத்தையும் தடுத்து நிறுத்த வேண்டும். முஸ்லிம்கள் குற்றவாளிகளாக எங்கே, எப்போது இந்த நாட் டுக்கு எந்த விதத்தில் துரோகம் செய்தார்கள்? என்று கேட்க விரும்புகின்றேன்.

பொது பலசேனா என்றால் அதன் கருத்து என்ன? இனவாதத்தை உண்டு பண்ணுபவர்களா? மாற்று மதங்களை அழிப்பவர்களா? இது வேண்டுமென்றால் உங்கள் நாடாக இருக்கட்டும். நாங்கள் நாட்டைக் கேட்கவில்லை, இந்த நாட்டில் பிறந்து வாழ்ந்து வருபவர்கள் இருப்பதற்கு ஒரு இல்லிடத்துக்கான காணிகளை மாத்திரமே கேட் கின்றோம்.

நாங்கள் இனவாதிகள் அல்ல; மதவாதிகள் அல்ல; மதத் திலோ.மார்க்கத்திலோ எங்கள் முஸ்லிம் சமுதாயத்தினர் இறை அச்சத்துடன் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் இந்த நாட்டில் வாழ்கின்றவர்கள்.

தேரர்கள் மதங்களை பேணி நடக்க வேண்டும். பௌத்த மதத்தை பொறுத்தவரை சகல இனத்தவர்க்கும் ஒரு கௌரவத்தை வழங்குகின்ற மதம் அது.

உங்களுக்கு இருக்கிற அனைத்து உரிமைகளும் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் இருக்கிறது என்பதை ஜனாதிபதி பலமுறை சொல்லியிருக்கிறார்.

பொதுபல சேனா அமைப்பு சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயல்களை முற்றாக நிறுத்த வேண்டும். மாற்று மதங்களில் தலை யிடுவதற்கு பொதுபலசேனாவுக்கு அதிகாரம் இல்லை- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகி செல்லத்துரை



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இல. 25, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதியை வசிப்பிடமாகவும் தற்போது பாதிரி கோயிலடி, கொக்குவிலில் வசித்தவருமான திருமதி செல்வநாயகி செல்லத்துரை நேற்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சரவணமுத்து - செல்லமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சரஸ்வதி மற்றும் தில்லைநடராஜா ஆகியோரின் சகோதரியும், தேவராஜா, புஸ்பராணி, காலஞ் சென்ற வரதராஜா ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற கிருஸ்ணகாந்தன் மற்றும் பூரணச்செல்வி, யோகேஸ்வரி ஆகியோரின் மாமியும், கிரிசன் , தனுசன், ஜனனீ, தாரணி, சுயனிதா, தர்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 5548

பாதிரி கோயிலடி,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(46821)(2.6)

## மரண அறிவித்தல்

### திருமதி மதுரா சிவகலாபன்



உடுப்பிட்டி இலக்கணாவத்தையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதுரா சிவகலாபன் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவகலாபன் (Engineer - Business Promotor & Partner Pvt. (Ltd) அவர்களின் பாசமிகு துணைவியாரும், வைகுந்தநேசன் (எமரல்ட் ஹாட்வெயர் - உடுப்பிட்டி)- தயாநிதி தம்பதியரின் மூத்த மகளும், திருஞானசம்பந்த மூர்த்தி- (Ret.Senior Technical Officer - Irrigation Department)- பரமேஸ்வரி தம்பதியரின் இளைய மருமகளும், மதுவந்தி, மதுசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவரஞ்சன், சிவரஞ்சினி (சுவிஸ்), காலஞ்சென்ற சிவஜோதி மற்றும் சிவபாணு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (உடுப்பிட்டி) நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
தந்தை - வைகுந்தநேசன்,
கணவர்- தி. சிவகலாபன்.
தொ.பே. 077 287 7472

இலக்கணாவத்தை
உடுப்பிட்டி.

(46818)(45.6.3)

# அதிக நேரம் பஸ்களுக்காக காத்திருந்தனர் பயணிகள்



*கோப்புப்படம்*

கொழும்பு,ஏப்.16

புத்தாண்டுப் பண்டிகையை முன்னிட்டு சொந்த இடங்க ளுக்கு செல்ல விருந்த பலர் நேற்றுமுன் தினம் முற்பகல் புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பிடத்தில் தமக்கான பஸ் பயண வசதி கிடைக்காததால் சிரமங்களை எதிர்நோக்கினர். தமது போக்குவரத்துக்கு போதுமான அளவு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் இதனால் நீண்டநேரம் பஸ் நிலையத்தில் காத்திருக்க நேர்ந்ததாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

இதேவேளை சாதாரண நாள்களை போன்று பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதித் தலைவர் எல் ஏ விமலரத்ன தெரிவித்தார்.

பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற் கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி அருந்தவம் நடராஜா



தொட்டிலிட்ட நாள் முதலாய்!
தோளில் போட்ட போதிலெல்லாம்
பட்டினியே பாராது அன்று!
பணிவிடைகள் பல முடித்தாயே
எம்மைக் கட்டுறுப்பாய் வளர்த்த
நாள்கள் எங்கே யம்மா!
உங்கள் கட்டில்லாக் கடமைகளை – நாம்
காலம் பார்த்து முடிக்கும் முன்
காலனவன் முந்தினானே!

25.04.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (16.04.2014) புதன்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் தங்களை அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- ஆறாத் துயருடன்
குடும்பத்தினர்.

தம்பாலை நாச்சிமார் வீதி,
அச்சுவேலி.

(46828)(2.3)

# மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.16

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு புத்தூர் கலைமதி மக்கள் பொது மண்டபத்தில் இன்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கலைமதி மாணவர் அமைப்பினால் நடத்தப்படும் இந்த நிகழ்வு கலைமதி மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக பாடசாலை அதிபர் இ.கோகுலராகவனும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் ஐ. மகேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக கா.கதிர்காமநாதன், பொ.முருகேசு, ச.தவராசா, செ.ரஞ்சித்குமார், த.சிறிப்பிரகாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

# சாரண மாணவருக்கு பயிற்சிகள்

பருத்தித்துறை மாவட்ட சாரணர் பயிற்சிக் குழுவினால் சாரண மாணவர்களுக்கான பயிற்சிகள் தொண்டமானாறுவீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் வழங்கப்படவுள் ளன. அணித்தலைவர்களுக்கான வதிவிடப் பயிற்சி இன்று இடம்பெறவுள்ளது.

முன்னோடிப் பயிற்சி இன்றும் நாளையும் காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். (க-35)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வாசுகி சிறிரஞ்சன்



யாழ்.உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், கைவிக்கம் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுகி சிறிரஞ்சன் நேற்றுமுன்தினம் (14.04.2014) திங்கட்கிழமை (தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று) சிவபதம் அடைந்தார்.

அன்னார் சின்னத்துரை சிறிரஞ்சனின்பாசமிகு மனைவியும், லக்ச்மன், ரூபன், மயூரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.திருமதி கந்தப்பிள்ளை தம்பதியரின் (இளைப்பாறிய கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள்) சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், அனபாயன் (ஜீவா - கனடா), பார்த்திபன், சுமதி, பதுமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிலானி (கனடா), அன்பழகன், சங்கர் ஆகியோரின் மைத்துனியும், அபிராமி, வைதேகி, வைஸ்ணவி, கௌதம், மாதுளன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ராகுல், பீஸ்மர், வைசாலி ஆகியோரின் அன்பு மாமியும், கமலா கதிர்காமத்தம்பி, விமலா சண்முகராசா, வசந்தா - குணரட்ணம், ரஞ்சிதற்குமார், காலஞ்சென்ற கலாரஞ்சிதம் - குகனேஸ்வரன் மற்றும் மோகனரஞ்சன் ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு 4 Eastern dene, Hazlemere, Bucks HP15 7BT நடைபற்று பி.ப.01.00 மணியளவில் Chilterns Crematorium, Whielden Lane, Amersham, Bucks HP7 ONDஇல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Husband: Sriranjan - 00441494718430 / 00447841511514
Brother: Parthipan - 00447971486921
Cousin Sister: - 0776086217

(46819)(12)(3)

தகவல்:
குடும்பத்தினர்.

## முருகேசு நாகராஜா



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.218, சில்வா வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகராஜா அவர்கள் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா - பர்வதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதா, ராஜன், சாவித்திரி, காலஞ்சென்றவர்களான ஈசன், சாந்தி, ஜெயந்தி மற்றும் கௌரி, வாசன், நேசன், சிவா ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம், வேலுப்பிள்ளை, செல்லம்மா, பூபதி, ஆறுமுகம் (துரை), சற்குணம், இரத்தின சிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, ஆச்சிமுத்து, ஏகாம்பரம், அன்னம்மா, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், குலேந்திரன், சுதாகினி, மகாதேவன், புஸ்பநாதன், செரி, கிரிஜா, காலஞ்சென்ற சிவரூபி மற்றும் கௌசி ஆகியோரின் அன்பு மாமனும், ஷோபியா, அபிநயா, நிவேதிகா, கிஷோனா, சந்தோஷ், கியுரிஜா, ஸ்ரெபியா, இலக்கியா, சாயிரா, சித்தார்த், சயுரா, காலஞ்சென்ற லதுர்சிகன் மற்றும் ருஜாந், கஜானா, கேதிஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014)வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.6, கரடிப்போக்கு, கிளிநொச்சி (இலங்கை வங்கி முன்பாக) என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.6, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(43438)(2.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
விற்பனை முகவர்
வைகுந்தநேசன் (Emerald Hardware) அவர்களின் அன்பு மகள்
**திருமதி மதுரா சிவகலாபன்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

டோக்கியோ சீமெந்து நிறுவன ஊழியர்கள்.
யாழ்ப்பாணம்

(46789)
(2.3)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் நடராசா

(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்-சங்கானை)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நடராசா 14.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும்,சந்திரசேகரம்-செல்லம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்,கிருஸ்ணபிள்ளை, இராசம்மா மற்றும் சரஸ்வதி, பாக்கியம், வைத்திலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தவமலர், வசந்தமலர்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் மைத்துனரும்,சிவராமன்(ஓய்வுபெற்ற தபாலதிபர்), பரராசசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் குலேந்திரன்-ஜெயந்தினி, அஜித்குமார்-வாசுகி, இராசகுமாரன்-யோகசக்தினி, சற்குரு, பிரசன்னா, பிரவீனா, பிரசாந் ஆகி யோரின் பாசமிகு பேரனும், துசாந், கஸ்தூரி, அனுசாந்தன், சாகித்தியன், நந்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014)வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு.

(46822)(5.3)

தகவல்: குடும்பத்தினர்
021 492 4172

## சின்னப்பு தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர் - மட்டுவில் தெற்கு, சரஸ்வதி வித்தியாலயம், கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின் னப்பு தாமோதரம்பிள்ளை 14.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா உபாத்தியார் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சொர்ணலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் (ஆசிரியர்) சகோதரரும், தெய்வநாயகி, சிவசெந்தி நாதன் (கனடா), சேந்தநாயகி, சர்வநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (கருணை), பிரியா (கனடா), சந்திரதாஸ் (ராதா), ரவிச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், குகப்பிரஷாந் (HNB முள்ளியவளை), விக்ரம், ஆதித்தன், பிருத்துவி (கனடா), தர்சிகா - சதீஸ், டனீஷன், சுஜன், துஷாந், சங்கீத், ராகேஷ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், விபிசாவின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற பீதாம்பரம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற குமாரசுவாமி (P.W.D ஓவசியர்) மற்றும் பொன்னம்பலவாணர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014)வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.
021 4923294

(46802)(2.3.6)

தகவல்:
கருணாகரன்
(கருணை- மருமகன்)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி மதுரா சிவகலாபன்



எமது வாடிக்கையாளர்
வைகுந்தநேசன்
அவர்களின் அன்பு மகள்
மதுரா சிவகலாபன்
அவர்கள் கடந்த
(13.04.2014)
அன்று
அகாலமரணமடைந்த
செய்தி அறிந்து ஆழ்ந்த
துயர் அடைவதுடன் அன்
னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரி
வித்துக் கொள்வதுடன்
அன்னாரது ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர்களும் ஊழியர்களும்,**
பாக்கியரத்தினம் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்.
இல.163, 165பிரதான வீதி, சங்கானை.

**உரிமையாளர்களும் ஊழியர்களும்,**
தரன் வணிக நிலையம்.
இல.130, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**உரிமையாளர்களும் ஊழியர்களும்,**
ஜெற் ஸ்டீல் (பிறைவேற்) லிமிட்டட்.
இல.247 B, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12.

# மரண அறிவித்தல்



## திருமதி வள்ளியம்மை சிதம்பரப்பிள்ளை

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சிதம்பரப்பிள்ளை 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா சிதம்பரப்பிள்ளையின் (முன்னாள் கிராமசபைத் தலைவர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சந்திரசேகரம் (முன்னாள் அதிபர்) மற்றும் சுந்தரலிங்கம் (முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி), நேசமணி (புதுக்குடியிருப்பு), சவுந்தரராஜன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவலிங்கம், பன்னீர்ச்செல்வம் (டென்மார்க்), கமலேஸ்வரி (லண்டன்), விமலேஸ்வரி (ஆசிரியை புது/ ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை), சிறிதரன் (லண்டன்), இரத்தினேஸ்வரி (லண்டன்), மங்களேஸ்வரி (புது/விக்கினேஸ்வரா வித்தியாலயம்), தவரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், இராசேந்திரம், காலஞ்சென்ற சண்முகவடிவேல் மற்றும் சந்திராதேவி, ராஜகுமாரி (டென்மார்க்), பாலராசா (லண்டன்), நவேந்திரன், ஜெகதீஸ்வரி (லண்டன்), ராசலிங்கம் (லண்டன்), சுதாகரன் (நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்), ஜெயச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று(16.04.2014) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2.3)(C/13630)

கோம்பாவில்,
4 ஆம் வட்டாரம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

# கைதடி முதியோர் இல்லத்தில் சிரமதானம்

குருநகர், ஏப்.16

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த 8 ஆம் திகதி சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இந்த இல்லத்தின் உள்வளவில் அமைந்துள்ள சவச்சாலையில் இருந்து சிறுவர் இல்லத்துக்குச் செல்லும் பாதையில் வளர்ந்திருந்த முற்பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டன. சிரமதானப் பணி யில் இங்கு கடமையாற்றும் இல்லத்தின் அத்தி யட்சகர் த.கிருபாகரன், இல்லத்தின் வேலை யாள்கள், சுத்திகரிப்புக் கடமைகளை மேற் கொண்டு வரும் எவரெடி சுத் திகரிப்பு நிறுவனத் தொழிலாளர்கள் மற்றும் இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்களும் கலந்துகொண்டனர்.

இல்லத்தில் உள்ள அனைவருக்கும் தமது இல்லம் என்ற உணர்வை உருவாக்கும் நோக்குடன் இந்தச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதாக கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (வ-51)

# செயலிழந்த நிலையில் அரிசி ஆலை

கிளிநொச்சி கட்டைக்காடுப் பகுதியில் "ஐஔம்" நிறுவனத்தினால் 35 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட அரிசி ஆலை செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கட்டைக்காடுப் பகுதியில்பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் "ஐஔம்" நிறுவனத்தினால் 35 லட்சம் ரூபா செலவில் அரிசி ஆலையொன்று அமைக்கப்பட்டு. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் உள்ளூர் அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இந்த அரிசி ஆலை தற்போது மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றது. (க-55)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**அரேபிய அதிபர்களின் வருகையில் இம்மாதம் நேர்முகப் பரீட்சை**

கட்டார், நெஸ்லே போர்ட் கம்பனியில்
**வேலைவாய்ப்புகள்**
சாரதிகள் - **70,000/=** இற்கு மேல் சம்பளம்
சேல்ஸ் ரெப்ரசென்டர் - **40,000/=** இற்கு மேல்
இன்னும் பல கம்பனிகளில் வேலை வாய்ப்புகள்

**AC Technician - 12**
**Electrician - 40**
**Plumber - 35**
**Dutch Fitter - 30**
**Pipe Fitter - 30**
**Hel per - 15**

விசா, டிக்கெட் விமானச்சீட்டு சம்பளம் கம்பனியால் 39,000/= இலிருந்து 69,000/= வரை

**இன்னும் ஏராளமான வேலை வாய்ப்புகள் எம்மிடம் உள்ளன**
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV 72052 LL 2502

**Head Office**
Rifraa International(Pvt)Ltd.
Main Street, Nintavur,
Sri Lanka.
T.P.: 0675677777,
0674929149,
0674929159.
E.mail.rifraa@gmail.com.
www.rifraa.com

**Branch Office**
Rifraa International(Pvt)Ltd.
No.95, Muslim College Road,
Jaffna.
Sri Lanka.
T.P.: 077 843 6475,
021 221 7085
E.mail.rifraajaffna@gmail.com,
www.rifraa.com

# காணவில்லை பெருமாள் இராமசாமி



***வயது:*** 68, ***வதிவிடம்:*** பழைய வட்டக்கச்சி, பெரிய குளம், மனநிலை குன்றியவர். இறுதியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து காலை 06.00 மணிக்குப் புறப்பட்டவரை இன்று வரை காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். (43438) (12.3)

**021 791 7493/077 407 3716**

பழைய வட்டக்கச்சி தகவல்: மகன்.

## 14.04.2014 அன்று நடைபெற்ற தும்பளை மேற்கு சனசமூக நிலைய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - A. இளவரசி - 9215
இரண்டாம் பரிசு - சி.சுஜன் - 0512
மூன்றாம் பரிசு மா.ஜெயமயூரன் - 1293

**ஆறுதல் பரிசுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) ஏ.சசிகரன் | - 2166 | 6) M.சாலினிக்கா | - 0289 |
| 2) இ.செந்தூரதி | - 2512 | 7) ம.கானவி | - 0370 |
| 3) B.ஜெயதர்சன் | - 0406 | 8) R.நர்மிவி | - 0222 |
| 4) R.பாலேந்திரா | - 0415 | 9) S.சிந்நலக்ஷ்மி | - 2340 |
| 5) த.லக்ஷ்மி | - 3002 | 10) R.காந்தராஜ் | - 0568 |

மேற்படி பரிசுப் பொருள்களை புதன், ஞாயிற்றுக்கிழமைகளில் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தும்பளை மேற்கு சனசமூக நிலையம். (45502) (5.3) செயலாளர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவாம்பிகை தியாகராஜா (கந்தரோடை)



கல்லூரி அருகில், கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாம்பிகை தியாகராஜா 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற மலேயன் பென்சனர் சின்னையா - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், கமலாம்பிகையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராஜா (கணக்குப் பரிசோதகர் -தபாற் திணைக்களம்)வின் பிரியமுள்ள மனைவியும், புவனதேவி (நோர்வே), ஜெயதேவி (கனடா), மனோகரன் (நோர்வே), கிருபாகரன் (நோர்வே), சத்தியதேவி (நோர்வே), வசீகரன் (நோர்வே), சிறீகரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருபாமூர்த்தி (நோர்வே), சிவபாதசுந்தரம் (கனடா), பிருந்தகுமாரி (நோர்வே), சுகந்தி (நோர்வே), சிறீஸ்கந்தராசா (நோர்வே), மீனகுமாரி (நோர்வே), கௌரி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, பாக்கியம் (மனோரஞ்சிதம்) மற்றும் நடராசா, மகாதேவன் (ஆஸ்திரேலியா), கணேசவேல் (J.P) ஆகியோரின் மைத்துனியும், Dr.ரவீனா மனோதீபன், தர்ஷன், மயூரன், Dr.சோபனா, ரக்ஷனா, வர்மன், சரண்யா, ரமணன், பிரதீபா, பிரவீன், தனுசியா, நிரோஜா, மொனிசா, இந்துஜா ஆகியோரின் பேர்த்தியும், தன்சியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை, சுன்னாகம்.
021 224 0393

(46162)(12)(3)

தகவல்: **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### ஆறுமுகம் சிவராசா (கரணவாய் தெற்கு)



தோற்றம்
01 . 08 . 1940

மறைவு
18 . 03 . 2014

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து தியாக தீபமாய் வாழ்ந்து எங்கள் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வீரப்பதிராஜன்
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(C/13633)(10)

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் சொருபகாந்தன்



யாழ்/வண்ணை வீரமாகாளிஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசேந் திரம் சொரூபகாந்தன் நேற்று (15.04. 2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசேந்திரம்- வாலாம்பிகை தம்பதியரின் புதல்வனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளானந்தம்-சிவ பாக்கியரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சத்திய வாணி (லண்டன்), சத்தியப்பிரியா (லண்டன்), சத்திய சாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரஞ்சோதி தர்மேசின் (லண்டன்) அன்பு மாமனும், துஷாந்தின் பாசமிகு பேரனும், சிறிகாந்தா, ரூபகாந்தன், சொரூபகாந்தி, இந்திர காந்தன், சந்திரகாந்தி, காலஞ்சென்ற ராஜகாந்தன் மற்றும் கௌரிகாந்தி, குபேரகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோ தரனும், அசோகலிங்கம், காலஞ்சென்ற சத்தியேந்திரன் மற்றும் சிறிஸ்கந்தராஜா, ரதிதேவி, காலஞ்சென்ற ஜெயநாதன் மற்றும் சாரதாதேவி, லோகேந்திரன், சுசிலா, ரதி, துசி, லைலாக்குமாரி, சண்முகராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/13631) (10)

## மரண அறிவித்தல்

### சாமி கந்தையா சோமசுந்தரம் (துரையர்)

### (நாத்தாண்டியா பிரபல வர்த்தகர்)



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும்,116A, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சாமி கந்தையா சோமசுந்தரம் நேற்று முன்தினம் (14.04.2014) திங்கட் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் (நாத்தாண்டியா பிரபல வர்த்தகர்) காலஞ்சென்றவர்களான சாமி கந்தையா - கணபதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், புதுறோட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும், இந்திராணி, பத்மராணி, இன்பமலர், சசிகரன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), சிவகரன் (கணக்காளர், யாழ். கணேசன் ஸ்ரோர்ஸ்) அன்புத் தந்தையும், சிவநேசன் (கணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), பாலகுமாரன் (சிறி.விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ், பசறை), சரவணபவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசங்கர், கஜானன், சாருஜன், துஷ்யந்தி, ஐங்கரன், பிரணவன், கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் பொன்னம்பலம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானம், செல்வராசா, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தவமணிதேவி, கமலாதேவி, செல்வரட்ணம், கனகாம்பிகை, ராஜலட்சுமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பாலாமணி, மனோன்மணி, காலஞ்சென்ற சிவசம்பு ஆகியோரின் மைத்துனரும், ஆறுமுகம், செல்வரத்தினம் இராசையா, சோமசுந்தரம், திலகவதி, மங்களேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2014) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*116 A, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 9981*


## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


### நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

ஜேர்மன் செற்பட் முதல். ஊசி, பூச்சி மருந்து கொடுத்தபடி 50 நாள் குட்டிகள்.

தொடர்பு: 5488849 (46842) (10)

### உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள் மற்றும் காட்போட் ஆகியவற்றை உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 879 0581 (46838) (10)

### வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு
விற்பனையாளர் தேவை.
தங்குமிட வசதியும், மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= லிருந்து வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை
தொடர்பு:11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3857

(46423) (12.3)

### ஆய்வு உத்தியோகத்தர்கள் தேவை

தெல்லிப்பழை,சங்கானை, கோப்பாய், நல்லூர், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு களில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக உத்தி யோகத்தர்கள் தேவைப்படு கின்றனர். பணிக் காலம்: 2 மாதங்கள் மட்டும். தகைமை: க.பொ.த.உயர்தரம் விரும்பத்தக்கது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 077 9915459
jsureom@gmail.com/
sureom@yahoo.com

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கண்ணகை அம்மன் தேவஸ்தானம் ஆனைக்கோட்டை

பரிசுக்குரியோர்:

| | |
|---|---|
| முதலாம் பரிசு | : 3864 |
| 2ஆம் பரிசு | : 2142 |
| 3 ஆம் பரிசு | : 1952 |

ஆறுதல் பரிசு பெறுவோர்:
427, 443, 809, 1228, 2443, 3857, 4204, 4123, 4271, 4707

தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்
077 472 6644, 077 205 9284

குறிப்பு: 21.04.2014 அதற்கு முன்னர் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் சமூகம் தரவும்.

குருசுமதவடி,
ஆனைக்கோட்டை. (46845) (10) ஆலய பரிபாலன சபை.

உ

### ஸ்ரீ வல்லிபுரேசன் துணை
### சிவாச்சார்யாபிஷேகம்

நிகழும் ஜய வருஷம் சித்திரை மாதம் 3ஆம் நாள்
இன்று (16.04.2014) புதன்கிழமை

பிரம்மஸ்ரீ **சுதர்சனகிரிதர சர்மா**

அவர்களுக்கு
சிவாச்சார்யாபிஷேகம் மு.ப 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுபவேளையில் அருள்மிகு
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில்
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
தலைமையில் நடைபெறும்.

சுபம்.
சிவன் கோயிலடி,
ஆவரங்கால்.

பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு J.P,
குடும்பத்தினர்,
பிரதம குரு ஸ்ரீ வல்லிபுரக்கோயில்,
புலோலி.

(சி/15629) (10.5)

### Words of peace

உங்கள் கண்களைத் திறவுங்கள்
பார்க்கத்தொடங்குங்கள், கேட்கத் தொடங்குங்கள்
இந்த மூச்சு எடுத்துக் கொள்வதின்
கொண்டாட்டத்தை
ஏனெனில் அது உயிர்கொண்டு வருகிறது.

For more details, Call: 0117 250001
bet 3 pm - 10 pm
and get free dvd.

(46837) (10)

### சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு 14.04.2014 அன்று வாணி விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு பரிசு பெற்றவர் விவரம்

முதலாம் பரிசு : 537 2ஆம் பரிசு : 1039
3 ஆம் பரிசு : 0619

7 ஆறுதல் பரிசுக்குரிய இலக்கம்:

| | | | |
|---|---|---|---|
| 1. 0631 | 2. 949 | 3. 0727 | |
| 4. 0965 | 5. 147 | 6. 819 | 7. 0736 |

(46844) (10)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணலீலா தெபோரா கனகரத்தினம்



யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Bad Friedrichshall ஐ வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணலீலா தெபோரா கனகரத்தினம் (08.04.2014) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தம்மா (இலங்கை), தங்கம்மா (இந்தியா), கனகலிங்கம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கவேல், சின்னராசா, சாந்தநாயகி (இலங்கை), சாந்தமலர் (இலங்கை), தயானந்தபவானி (கௌரி - டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பகீரதன், சிறிதரன், கிரு பாதரன், கிரிதரன், அஜந்தன், சயந்தன், சரங்கன், சுபாஜினி, பிரதீபன், பிராகாஷினி, வசந்தியன் ஆகியோரின் சித்தியும் சாளினி, பார்த்திசன், அனுதன், அனுஸன், கோம்சியா, றஜீபனா, கோகுலன், குகனியா, சகிர்த்தன், அபிநயா, அக்ஷனா, அபிவர்மா, அம்பி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (16.04.2014) புதன் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் புத்தூர். (C/13632)

தகவல்: தங்கவேல் குடும்பம்,
கனகலிங்கம் குடும்பம்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பலமான

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

"உங்களுக்கு முன்பாக பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு மிகவும் நன்றி. எனது வாழ்க்கை தொடங்கியது 65ஆம் ஆண்டில் இந்த இடத்தில் தான். இங்கு தான் நான் தரம் 5இல் இருக்கும்போது வந்து பரீட்சை எழுதினேன். 67ஆம் ஆண்டு படிக்கத்தொடங்கினேன். யாழ். இந்துக் கல்லூரி இல்லாமல் நான் இல்லை என்பதை இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்கிறேன்.

நான் பிறந்தது தமிழ்ப் பண்பாடான ஒரு குடும்பத்தில். எனது அம்மா ஒரு ஆசிரியர். நான் இன்று இப்படி இருக்கக் காரணம் நான் இந்த மண்ணில் பல காலமாக பெற்றுக் கொண்ட அனுபவம்தான். நான் பிறந்தது மட்டுவில் சாவகச்சேரி. எனக்கு இப்பவும் நினைவில் நிற்கின்றனர் சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்கள். அவர்களது அன்பு, எந்தப்பிள்ளையையும்தங்கள்பிள்ளையாக பார்க்கும் உணர்வு. அதனால் கூட நான் இன்று இந்நிலைக்கு வந்திருக்கின்றேன்.

'அடைய முடியாது' என்ற வசனம் யாழ். இந்துக் கல்லூரியிலோ அல்லது சரஸ்வதி வித்தியாசாலையிலோ யாரையும் கூற விடமாட்டார்கள். எப்பவும் அடைய முடியாது என்ற வார்த்தைக்கு நான் இடம் கொடுப்பதே இல்லை. அது நான் கற்றுக்கொண்டது இந்த மண்ணில். விடாமுயற்சியால் எதையும் செய்யலாம் என்பது இக்கல்லூரியில் கற்றுக் கொண்ட முக்கியமான விடயம். மனதில் ஒரு சரியான தீர்மானத்தோடு இருந்தால் நாம் எப்போதும் எதையும் அடையலாம்.

ஒரு மலை உச்சியை நாம் அடையவேண்டும் எனில் அதன் தோற்றத்தைப் பார்த்துப் பயப்படக் கூடாது. எப்பவும் மலை பெரிதாக இருக்கும். அதற்கு அண்மையில் போவதே கஷ்டமாக இருப்பதாக தோன்றும். கீழே சென்று தான் மேலே வரலாம். போகும் போது பல தடவைகள் விழுவோம். விழாமல் நாங்கள் போவோம் என்று யோசித்தால் அது நடக்காது. எப்போதும் நடந்து போகும் போதும் மலை ஏறும் போதும் விழுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. நாம் மலையை பார்த்து பயப்படாது போனால் மலை உச்சியை அடையலாம். இதை இக்கல்லூரியில் ஆசிரியர்களிடம் கற்றுக் கொண்டேன். இங்கு பல மாணவர்கள் உள்ளீர்கள். நீங்கள் இதே உணர்ச்சியோடு நடந்தால் மலை உச்சியை அடையலாம்.

நீங்கள் எதையும் செய்யும் போது உங்களுக்கு என்ன விருப்பம் என்பதை தெரிந்து கொண்டு அந்த மலையை நோக்கி நடக்க வேண்டும். சிலவேளை நாங்கள் எல்லோரும் என் நண்பர் அப்படி செய்கின்றார். ஆகவே நானும் செய்வோம். நல்ல சம்பளம் எடுக்கலாம். இதைச் செய்தால் அரச உத்தியோகம் கிடைக்கும் என்ற மனதோடு செல்லக் கூடாது.

உங்கள் விருப்பத்தை கண்டு பிடித்து கொள்ள வேண்டும். ஒரு போதும் நீங்கள் உங்களால் முடியாது என்ற வசனத்தை சொல்லக் கூடாது. ஏன் என்றால் நீங்கள் நினைத்தால் செய்யலாம். நான் நிறையக் கற்றுக்கொண்டேன் சரஸ்வதி வித்தியாசாலையிலும் யாழ். இந்துவிலும்.

ஒரு மலையில் ஏறி விழும் போது ஏறவேண்டாம் என்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் ஏன் விழுந்தேன் எண்ணி யோசித்து, அதைப் ஒரு படிப்பினையாக நினைக்க வேண்டும். எல்லோரும் விழுவார்கள். அதுக்காக விழுந்ததை என்று பின்தங்கிவிடக்கூடாது. என்னுடன் வந்த குழுவினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

நான் 32 வருடத்துக்கு முன் இங்கிருந்து சென்றுவிட்டேன். வெளியில் இருந்து இங்கு இருப்பவர்களுக்கு அறிவுரை சொல்ல முடியாது. இங்க இருப்பவர்களுக்குத்தான் இங்குள்ள சூழ்நிலைக்கேற்ப சிந்திக்க முடியும்.

நாங்கள் ஏதும் செய்ய நினைத்தால் செய்யலாம். சந்தர்ப்பம் இல்லை என்பது உண்மை இல்லை. சந்தர்ப்பம் வரும் அதை உபயோகிக்க விரும்புவதில்லை. மற்றவர்களுக்காகச் செய்யக் கூடாது. அது வெற்றி அளிக்காது. எதுவும் விருப்பத்துடன் செய்யும் போது வெற்றி பெறுவீர்கள் நன்றாக படியுங்கள். நல்ல பெறுபேறு வரவில்லை என்றால் நீங்கள் புத்திசாலி இல்லை என்று நினைக்காதீர்கள்.

பிரச்சினைகளில் முக்கியமானது பொருளாதாரம். அது பலமாக இருந்தால் ஏனைய பிரச்சினைகளை தீர்க்க முடியும். தென் கொரியாவைப் பார்த்தால் பொருளாதார ரீதியாக பலமாக உள்ளது. நாங்களும் அந்த நிலையை அடைய வேண்டும். எனது பலத்தை வைத்து என்ன செய்யலாம் என யோசிக்க வேண்டும். சோலா்ர் சக்தி பற்றி நாம் சிந்திக்கவேண்டும். நாங்களே சோலா்ரை கையாளும் திறனிற்கு வர வேண்டும். யாழ் மண்ணில் பாவனைக் காலம் என்பது தரமானதாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் சின்ன சின்ன பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ள குறித்த துறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு குழுவினர் தேவை.

பல்கலைக் கழகத்தில் எல்லாவற்றையும் தொடங்கவேண்டும். ஏனெனில் கல்வியூடாகவேஅதைகொண்டுவரமுடியும். அதை எப்படி பயன் படுத்த வேண்டும் என்பது தொடர்பில் கற்க வேண்டும். பின்னர் சிறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு செல்லலாம்"- என்று தெரிவித்தார். (ற-10)

### தென்னாபிரிக்க

ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நாம் அவதானித்துக் கொண்டிருப்போம். அதற்கேற்றவாறு எமது பங்களிப்புகளை வழங்குவோம். நாம் இனியும் ஏமாறத் தயாரில்லை." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"எமது தென்னாபிரிக்கப் பயணம் ஆக்கபூர்வமாக - திருப்தியாக அமைந்தது. நாம் சொல்லவேண்டிய விடயங்கள் அனைத்தையும் தென்னாபிரிக்க அரச தரப்பினரிடம் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டோம்.

இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தீர்வைக் காண்பதற்கும் தென்னாபிரிக்க அரசு முன்வந்துள்ளது. இந்நிலையில், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா விசேட பிரதிநிதி ஒருவரை நியமித்துள்ளார். அவரின் பெயர் சிறில் ரமபோஷ.

எமது பயணத்தின்போது ரமபோஷவை நாம் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளோம். அத்துடன் தென்னாபிரிக்க நாட்டின் வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார பிரதியமைச்சர், தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் ஆகியோரையும் நாம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம்.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அவர்கள் அரச படைகளின் தொந்தரவுகள் எதுவுமின்றி சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்பதை தென்னாபிரிக்காவிடம் நாம் எடுத்துக் கூறியுள்ளோம்.

தென்னாபிரிக்காவின் இந்த நல்லிணக்க முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். இதற்கு எமது ஆதரவைத் தெரிவித்துள்ளோம். ஆனால், இலங்கை அரசு இதற்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமா என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது. ஒவ்வொரு கட்ட நடவடிக்கைகளையும் நாம் அவதானித்துக் கொண்டிருப்போம். அதற்கேற்றவாறு எமது பங்களிப்புகளை வழங்குவோம். நாம் இனியும் ஏமாறத் தயாரில்லை - என்றார். (ற-சி)

### கோபியின்

வித்துள்ள சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண, "வவுனியாவில் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்ட கோபி, மற்றும் முன்னாள் போராளியான அப்பன் உட்பட ஏனைய இருவரின் தொலைபேசி அழைப்புகள் குறித்துத் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது."- என்று தெரி வித்துள்ளது டன், மூவரின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு, அவை குறித்த விசாரணைகளின் பின்னரே, அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக நாம் தீர்மானிக்கவுள்ளோம்"- என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கோபியுடன் தொடர்புகளைப் பேணி வந்தனர் என்று நம்பப்படும் அரசியல்வாதிகள் சிலர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் விசாரணை களை அடுத்து கைது செய் யப்படலாம் என்ற தகவல்கள் முன்னர் வெளியாகியிருந்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பு மீள் உருவாக்க முயற்சித்தனர் என்று தெரிவித்து, அண்மைக்காலமாக பயங்கரவாதப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் பலரைக் கைது செய்திருந்தனர். அவர்களில் கோபியின் தாய் உட்பட ஒரு பகுதியினர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளபோதும், 41 பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ற)

### சரவணபவன்

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனைத் தொடர்பு கொண்ட போது, "குறித்த அழைப்பு எனது கைபடக்கத் தொலைபேசிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. தமிழில் உரையாடிய ஒரு நபர், நீங்கள் தற்போது எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் எவ்வாறு போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருகிறீர்கள் என்று பார்ப்போம் என்று அச்சுறுத்தும் பாணியில் பேசினார். 0779908892 என்ற இலக்கத்தில் இருந்தே அந்த அழைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது"- என்று தெரிவித்தார்.

தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தொலைபேசியில் தொடர்பு கொண்டு முறையிட்டுள்ளதுடன், கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கமும் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (ற)

### கைதான

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட தொடர் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மூலம் 65 பேர் வரையில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 55 பேர் ஆண்கள் என்றும் 10 பேர் பெண்கள் என்றும் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் விசாரணையின் பின்னர் 5 பேர் உடனடியாகவே விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி, பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்டவர்களாக அறிவிக்கப்பட்ட கோபி, அப்பன், தேவிகன் மூவரும் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டனர். கடந்த 12 ஆம் திகதி 8 பேரும், நேற்று முன்தினம் 14 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுட்டுக் கொல்லப்பட்ட கோபியின் தாயார் விடுவிக்கப்பட்டுள்ள போதும், கோபியின் மனைவி இன்னமும் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### மிரட்டப்படுகின்றார்

அதனையடுத்து தாக்கப்பட்ட பஸ் உரிமையாளரால் குறித்த இராணுவச் சிப்பாய்க்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதுகுறித்து இராணுவப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்றும் சி.ஐ.டி என்றும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இனந்தெரியாத நபர்கள், முறைப்பாடு செய்தவர்களின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாட்டை மீளப்பெறுமாறு அச்சுறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இராணுவப் பொலிஸார் என்று தம்மை அறிமுகப்படுத்திய சிவில் உடையில் சென்ற இருவர், தாக்கப்பட்ட பஸ் உரிமையாளரிடம் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். இதன் போது தமிழிலும் - சிங்களத்திலும் தனித்தனியாக எழுதப்பட்ட முறைப்பாட்டுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியுள்ளனர். கிட்டத்தட்ட 30 இடங்களில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. சிங்களத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாமலேயே தான் கையெழுத்திட்டுள்ளதாக பஸ் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ற-5-4)

### பொதுநலவாய

பொறுப்புக் கூறப்படாதது குறித்து கனடா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இலங்கை அரசு மனித உரிமைகள் விவகாரத்திலோ, அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலோ அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது.

அதனால், இலங்கை தலைமை தாங்கும் பொதுநலவாய அமைப்புக்கு கனடாவால் வழங்கப்படும் 20 மில்லியன் டொலர் நிதியை நிறுத்தி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."- என்று தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கும், தலைமைப் பொறுப்பு அதற்கு வழங்கப்படுவதற்கும் கனடா கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தது. கடந்த நவம்பரில், கொழும்பில் நடந்த பொதுநலவாய மாநாட்டையும் கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் புறக்கணித்திருந்தார். இந்தநிலையில் தற்போது நிதியுதவியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ற-5)

### காணாமற்

ளோம் என்று குறிப்பிட்ட அவர், இருப்பினும் தம்மால் இயன்ற விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் பெரும்பாலும் இறப்புச் சான்றிதழை ஏற்க மறுக்கின்றனர். அவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட வேண்டும். ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்தவர்களில் பெரும்பாலானோர் போதிய தகவல்களைத் தரவில்லை. ஆனாலும் ஆணைக் குழு தமது உறவினர்களைக் கண்டுபிடித்துத் தரும் என்று நம்புகின்றனர்.

சில குடும்பங்களில் 9 அல்லது 10 பேர் வரையில் காணாமற்போயுள்ளனர். இதனால் அந்தக் குடும்பங்கள் அதிர்ச்சியில் இருக்கின்றன. இத்தகைய குடும்பங்களுக்கு மனநல ஆலோசனை வழங்குவது தொடர்பில் ஐ.சி.ஆர்.சி உள்ளிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

### இறுதிப்

ததாகவும் குறித்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக நடத்தப்பட்ட உள்நாட்டுப் போரில், இலங்கைப் படைகளுக்கு உதவுவதற்காக 2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் இந்திய இராணுவ, கடற்படை, மற்றும் விமானப்படையினர் சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் என்று இந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

போர்ப் பிரகடனம் ஒன்று செய்யப்படாமல் - இந்திய ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படாமல் -அரசியலமைப்பின் 246 ஆவது பிரிவுக்கு அமைய, நாடாளுமன்ற அனுமதி பெறப்படாமலேயே இவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமான முன்னெடுப்புகளுக்காக தாம் பல முறை இலங்கைக்குச் சென்று வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சட்டவாளர் ராம் சங்கர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மீதான தாக்குதலின் போது தலைப்பாகை கட்டிய இந்திய அதிகாரி ஒருவர் ஆயுதப் படைகளுக்கு தலைமை தாங்குவதை தாம் கண்டதாக, புகலிடக் கோரிக்கையாளர்கள் சர்வதேச விசாரணையில் சாட்சியமளித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

போர்ப் பிரகடனம் செய்யப்படாமலேயே, இலங்கைப் படைகளுக்கு ஆதரவாகவும், உடந்தையாகவும், இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். இராணுவ விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்துக்கும் இது வெளிப்படுத்தப்படவில்லை.

இந்தியாவின் பாதுகாப்பு தவிர, வேறு எந்தக் காரணத்துக்காகவும் இந்திய ஆயுதப் படைகளை பயன்படுத்த இந்திய அரசியலமைப்பில் அதிகாரம் அளிக்கப்பட வில்லை. உள்நாட்டு போரில், தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக, இலங்கை இராணுவத்துக்கு உதவியாக, இந்திய ஆயுதப்படைகள் 2008, 2009 காலப் பகுதியில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ- மூன் நியமித்த சுதந்திர அனைத்துலக நிபுணர் குழுவின் அறிக்கையில் 56 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை 2011 மார்ச் 31 ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

பரிகாரம் வேண்டும்

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் உள்ளிட்ட தமிழர்களுக்கு எதிரான இந்திய ஆயுதப்படைகளின் கூட்டுப் பங்கு தொடர்பாக, விசாரிக்க இந்திய உயர்நீதிமன்றம் தனது கட்டுப்பாட்டின் கீழ் சிறப்பு விசாரணைக் குழுவொன்றை அமைக்க வேண்டும். அது சுயாதீன மாக நடத்தப்படுவதை கண்காணிக்க வேண்டும் என்று சட்டவாளர் ராம் சங்கர் தனது மனுவில் கோரியுள்ளார்.

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினரின் உயிர்கள், உடைமைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து, விசாரித்து, அதில் சம்பந்தப்பட்டவர்களை சிறப்புத் தீர்ப்பாயம் முன்பாக நிறுத்தி விசாரிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்க அவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.


இந்த மனுவில், இந்தியப் பாதுகாப்பு, வெளிவிவகார, மற்றும் உள்துறை அமைச்சுக்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

# றோயல், ஐக்கியம் அணிகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஐங்கரன் மீடியா செலுசன் நிறுவனம் நடத்தும் 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்று இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

2 ஆவது காலிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
(த-23)




கோவில்குளம் இளைஞர் கழகத்தின் அனுசரணையில் வவுனியா ரொக்கெற் விளையாட்டுக் கழகத்தின் 35 ஆவது வருட விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. ரொக்கெற் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் செ.தவச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.
(த-402)

# வென்றது நவஜீவன்ஸ் 'பி'

யாழ்ப்பாணம், ஏப்.16
கோபிநாத் போட்டுத்தாக்க நவஜீவன்ஸ் 'ஏ' அணியை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் 'பி' அணி.
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், நியூவே சொப்பிங் சென்ரரின் அனுசரணையுடன் வடமராட்சி ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றது.
இந்த இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ', 'பி' ஆகிய இரு அணிகள் மோதின. இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய இரு அணிகளும் ஒரே விளையாட்டுக்கழகம் என்பதால் ஆட்டத்தில் சூடு இருக்காது என அனைவரும் எண்ணினர். ஆனால் அவர்கள் எண்ணியதற்கு எதிர்மாறாக ஆட்டம் வெகு விறுவிறுப்பாக இருந்தது. வேற்று அணியுடன் மோதுவது போன்று இரு அணி வீரர்களும் மிகவும் ஆக்ரோஷமாக மோதினர். இதனால் பார்வையாளர்கள் உற்சாகமடைந்தனர்.
முதல் செற்றில் நவஜீவன்ஸ் அணியின் நிதுஷாந் போட்டுத்தாக்க எதிர் அணியின் கோபிநாத்தும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். இதனால் புள்ளி இரு பக்க மும் மாறிமாறி ஏறிக் கொண்டே இருந்தது. இருந்த போதும் 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் 'ஏ' அணி வெற்றி பெற்றது.
அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது செற்றில் நவஜீவன்ஸ் 'பி' அணியினர் எப்படியாவது வெல்ல வேண்டும் என்ற நோக்கில் அதிரடியுடன் மதி நுட்பத்தையும் பயன்படுத்தி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம நிலைப்படுத்தியது.
இதனைத் தொடர்ந்து வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க இடம்பெற்ற மூன்றாவது செற்றில் கோபிநாத் மீண்டும் அதிரடி காட்ட 15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியினர் வென்று வெற்றிக் கிண்ணத்தையும் பணப் பரிசையும் தமதாக்கிக் கொண்டனர்.
இப் போட்டியின் சிறந்த விளையாட்டு வீரராக கு. கோபி நாத் தெரிவு செய்யப்பட்டார்.
(த-400-422)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.16
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறைதிக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை பி.ப 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில்பொம்மர்ஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(த-23)

# செவ்வானம் அணி சம்பியன்



வெற்றிக் கிண்ணத்துடன் வீரர்கள்

வவுனியா,ஏப்16
வவுனியா கோவில்குளம் ஐக்கிய நட்சத்திர விளையாட்டு கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்று போட்டியின் இறுதி ஆட்டத்தில் உதய தாரகை அணியும் செவ்வானம் அணியும் மோதிக் கொண்டன.
நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய செவ்வானம் அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அது 12 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. 79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய உதய தாரகை அணி 48 ஓட்டங்களுடன் சகல இலக்குகளையும் இழந்தது. செவ்வானம் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கிண்ணத்தை தனதாக்கியது.
இதன் சிறப்பு அதிதிகளாக வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதாவும், கோவில்குளம் இளைஞர் கழக ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம், அகில இலங்கை சமாதான நீதிவான் சௌந்தர்ராஜன் மற்றும் ஐக்கிய நட்சத்திர விளையாட்டு கழக சிரேஷ்ட உறுப்பினர்களான சுனில், மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.
(த-402)

# யாழ்.பாடசாலைகளின் கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17,19, வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதேவேளை பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 17ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி இடம் பெறவுள்ளது.
ஆண்களுக்கான போட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக, கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம் பெறவுள்ளது. (த-23)

# வென்றது சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஐங்கரன் மீடியா செலுசன் நிறுவனம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் ஆட்டங்கள் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


# முறிகண்டி வளர்மதி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.16
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.
இறுதியாட்டத்தில் மாங்குளம் மின்னொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருமுறிகண்டி வளர்பிறை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
அதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழக அணி 5பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளையும் இழந்து 32 ஓட்டங்கள் பெற்றது.
இதில் மயூரன் 12ஓட்டங்களையும், கேசவன் 10 ஓட்டங்களையும், நகுலேஸ்வரன்05 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் திருமுறிகண்டி வளர்பிறை விளையாட்டுக் கழக அணி சார்பில் புவனேந்திரன் 3 இலக்குகளையும், ரவிச்சந்திரன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.
33 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருமுறிகண்டி வளர்பிறை விளையாட்டுக் கழக அணி ஓர் இலக்கினை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் புவனேந்திரன் 15 ஓட்டங்களையும், குமரேசன் 9 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழக அணி சார்பில் மயூரன் ஓர் இலக்கினை வீழ்த்தினர். (த-23)

# இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் முதலாம் சுற்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம், மன்னார் சென். லூட்சியா விளையாட்டுக் கழகம், வடமாரட்சி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம், மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகம், உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று 2ஆம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.
இரண்டாம் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம் பெறவுள்ளது. (த-23)



சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ர நஷனல் ஸ்ரீலங்கா கழகத்தின் பிரதம பயிற்றுநர் சென்செய். அன்ரோ டினேஸ் மற்றும் சிரேஷ்ட மாணவன் நாகசுந்தரம் சுஸ்மன் ஆகியோர் அண்மையில் ஜப்பானின் மியாசாக்கியில் நடைபெற்ற கராத்தே பயிற்சிகளில் கலந்துகொண்டனர். அன்ரோ டினேஸிடம் பயிற்சிபெற்ற என். சுஸ்மன் ஜப்பானில் கிராண்ட் மாஸ்டர் ஹன்சி. கெனிச்சி புக்காமிசு நடத்திய தேர்வில் பங்கெடுத்து இரண்டாம் கறுப்புப்பட்டிக்குத் தரம் உயர்த்தப் பட்டுள்ளார்.
(த-23)

# ரென்னிஸிலும் கால்பதிக்கும் சச்சின்

உதைபந்தில் தடம் பதித்துள்ள கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின், தற்போது சர்வதேச ரென்னிஸ் பிரிமியர் லீக் தொடரில் மும்பை அணியை வாங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐ.பி.எல் 20/20 போட்டிகள் ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.எனவே இதே பாணியை மற்ற விளையாட்டுகளும் பின்பற்றத் தொடங்கிவிட்டன.

ஹொக்கி, பட்மின்ரன், குத்துச்சண்டை, கோல்ப் வரிசையில் தற்போது உதைபந்து, ரென்னிஸ் என்பனவும் இணைந் துள்ளன. இந்திய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு அங்கீ காரத்துடன் இந்தியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் முதல் நவம்பர் வரை நடக்க உள்ளது. இந்தத்தொடரில் பங்கேற்கும் கொச்சி அணியை பி.வி.பி.வென்ச்சர்ஸ் மற்றும் இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் இணைந்து வாங்கினர்.



சச்சின்

இந்நிலையில் சர்வதேச ரென்னிஸ் லீக் தொடரிலும் இந்த நிறுவனம் கால்பதிக்கத் திட்டமிட்டுள்ளது.

மும்பை ரென்னிஸ் அணியை வாங்க சச்சினும், பி.வி.பி. வென்ச்சர்ஸ் நிறுவனமும் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி முதல் டிசெம்பர் 13ஆம் திகதி வரை நடக்கும் இத்தொடரில் மும்பை, டுபாய், சிங்கப்பூர் மற்றும் பாங்ஹொக் என நான்கு அணிகள் பங்கேற்கின்றன. (த)

# இந்தியா-பாக். அணிகளின் கிரிக்கெட் தொடர் 2015 இல்



இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர், 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

2023 ஆண்டு வரையான 8 வருடத்துக்குள் இரு அணிகளும் 6 தொடர்களில் விளையாடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கூட்டத்தில், நிபந்தனையின் அடிப்படையில் புதிய நிர்வாக மாற்றத்துக்குப் பாகிஸ்தான் ஆதரவு தெரிவித்தது. அந்த நிபந்தனையில் ஒன்று இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் தொடர்ந்து கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவேண்டும் என்பது. இதன்படி இந்த இரு அணிகளுக்குமான தொடர், அடுத்த வருடம் நடைபெற அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பதிலுக்காக தாம் காத்திருப்பதாகவும், 15 நாள்களுக்குள் பதில் கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

# ரசிகர்களை சந்தோஷப் படுத்துவோம்



ரசிகர்களைச் சந்தோஷப்படுத்துவது மட்டுமே ஐ.பி.எல் தொடரின் முதல் இலக்கு என மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் டரன் சமி தெரிவித்துள்ளார்.

ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகமுள்ள 7ஆவது ஐ.பி.எல் தொடர் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகிறது.

இந்தத் தொடர் குறித்து ஐதராபாத் அணியில் இடம் பெற்றுள்ள டேரன் சமி கூறியதாவது, ஐபிஎல் தொடரில் விளையாட மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன். உலகில் உள்ள அனைத்து கிரிக்கெட் வீரர்களும் இத்தொடரில் பங்கேற்க விரும்புவார்கள். முதன்முறையாக ஐக்கிய அரபு இராச் சியத்தில் நடக்கும் இந்தப் போட்டிக ளுக்கு ரசிகர்கள் பேராதரவு தருவார்கள்.

இந்தத் தொடர் ரசிகர்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வீரரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ரசிகர்களை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண் டும்.

சர்வதேச மற்றும் இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ள ஐதராபாத் அணியில், நாங்கள் அனைவரும் ஒரு அணியாக இணைந்து வெற் றிக்குப் போராடுவோம். கடந்த ஆண்டு இதேபோல ஒருங் கிணைந்து செயல்பட்டதால் நிறைய வெற்றிகளைப்பெற முடிந்தது என்று கூறியுள்ளார். (த)



# சம்பியன் லீக் அரையிறுதியாட்டத்தில் அத்லட்டிக் மட்ரிட், பேயர்ன் முனிச்

சம்பியன் லீக் போட்டிகளின் காலிறுதிப் போட்டிகளின் இரண்டாம் சுற்றில் அத்லட்டிக் மட்ரிட், பேயர்ன் முனிச் அணிகள் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.


அத்லட்டிக் மட்ரிட் அணி பார்சிலோன அணியை 1-0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் முதல் சுற்றில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்று போட்டியைச் சமன் செய்தன. இதன் படி மொத்தமாக 2-1 என்ற கோல்களின் அடிப்படையில் அத்லட் டிக் மட்ரிட் அணி அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. 40 வருட போராட்டத்துக்கு பின்னர் முதற் தடவையாக அத்லட்டிக் மட்ரிட் அணி சம்பியன் லீக் தொடரின் அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. பேயர்ன் முனிச் அணி, மன்செஸ்ரர் ஜுனைட்டட் அணியை 3-1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. முதற் போட்டி இரு அணிகளுக்குமிடையில் 1-1 என முடிவுக்கு வந்தது. இதன் அடிப்படையில் முன்னிலை பெற்ற பேயர்ன் முனிச் அணி அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

அரை இறுதிப் போட்டி விபரங்கள்:-

செல்சி எதிர் அத்தலட்டிக் மாட்ரிட் - ஏப்ரல் 23

பேயர்ன் முனிச் எதிர் ரியல் மாட்ரிட் - ஏப்ரல் 24 (த)

# பொதுநலவாய போட்டி பதக்கங்கள் வெளியீடு



பொதுநலவாய போட்டிகளுக்கான பதக்கங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

பொதுநலவாய போட்டிகளுக்கு 100 நாள்களே உள்ள நிலையில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

போட்டிகளின்போது 261 பதக்கம் வழங்கும் நிகழ்வுகளில், 1380 க்கும் அதிகமான பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஸ்கொட்லாந்தின் க்ளைஸ்கோவில் நடைபெறவுள்ள பொது நலவாய போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் ஜுலை மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பதக்கமும் 100 கிராம் நிறை கொண்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. க்ளஸ்கோ கலைக் கல்லூரியின் ஆபரண நிபுணர்களால் பதக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. (த)

# ஐ.பி.எல் திருவிழா இன்று ஆரம்பம்

இந்தி நடிகைகள் மாதுரி தீட்சித், தீபிகா படுகோனே ஆகியோரின் நடன நிகழ்ச்சியுடன், 7ஆவது ஐ.பி.எல். போட்டியின் தொடக்க விழா இரவு விருந்து நிகழ்ச்சி அபுதாபியில் நேற்று நடந்தது. ஆட்டங்கள் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்றன.

வழக்கமாக ஐ.பி.எல் போட்டியின் தொடக்க ஆட்டத்துக்கு முதல் நாளில் பிரமாண்டமான தொடக்க விழா நடைபெறும்.

பல்வேறு சர்ச்சைகள் காரணமாக 7ஆவது ஐ.பி.எல் போட்டியில் கோலாகலமான தொடக்க விழா நிகழ்ச்சி கிடையாது என்று இந்திய கிரிக்கெட் சபை ஏற்கனவே அறிவித்திருந்தது.

இருப்பினும் அபுதாபியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் 7ஆவது ஐ.பி.எல் போட்டியின் தொடக்க விழாவாக, பிரமாண்டமான இரவு விருந்து நடந்தது. இதில் எல்லா அணியின் வீரர்களுடன், உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த இரவு விருந்து நிகழ்ச்சியில் இன்னிசை விருந்துடன், இந்தி நடிகைகள் மாதுரி தீட்சித், தீபிகா படுகோனே ஆகியோர் நடனமாடித் தொடக்க விழாவை சிறப்பிக்கவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தி நடிகரும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளருமான ஷாருக்கானும் நடன நிகழ்ச்சியில் பங்கேற்றார். (த)




# வழிக்கு வந்த பாகிஸ்தான்

சர்வேதேசக் கிரிக்கெட் சபையின் புதிய திட்டத்துக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், சட்ட திருத்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய 3 நாட்டுக் கிரிக்கெட் சபைகளின் வருமானம் மற்றும் நிர்வாக விவகாரங்களில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில்ஐ.சி.சி. சட்டதிருத்தம்கொண்டு வந்துள்ளது.

பெரும்பாலான கிரிக்கெட் சபைகளின் ஆதரவுடன் நிறைவேறிய இந்த நிர்வாக திருத்தத்துக்கு இலங்கை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் மட்டும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு நடந்த ஐ.சி.சி. கூட்டத்தில் புதிய நிர்வாக சீர்திருத்தத் திட்டத்தை சில நிபந்தனைகளுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேதி கூறுகையில்; இந்தியா உட்பட டெஸ்ட் போட்டிகளில் முன்னணி பெற்றுள்ள நாடுகளுடன் அடுத்த 8 ஆண்டுகளில் கிரிக்கெட் தொடர் நடத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன், புதிய நிர்வாக சீர்திருத்தத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்ள சம்மதித்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (த)

# ஐ.பி.எல் எதிர்ப்பார்ப்புக்கள்

2014 ஆம் ஆண்டின் இந்தியன் பிரிமியர் லீக்கின் கிரிக்கெட் போட்டித்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில்.அந்தப் போட்டிகள் தொடர்பில் பலத்த எதிர்பார்ப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் 20/20 போட்டிகளில் இலங்கை அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

அதேநேரம் அந்த வெற்றிக்குக் காரணமானவர் என்று குற்றஞ் சுமத்தப்பட்ட இந்திய வீரர் யுவ்ராஜ் சிங் போன்றவர்கள் தமது திறமையை காட்டவேண்டியநிலையில் உள்ளனர்.

மறுபுறத்தில் இலங்கை அணி வீரர்கள் தாம் வெற்றிக்கிண்ணத்தைக் கொண்ட அணியின் வீரர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் செயற்படுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

முன்னர் சர்வதேச கிரிக்கெட்டில் முன்னணி அணியாக விளங்கிய ஆஸ்திரேலிய தற்போது தீரம் குறைந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து அணி மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணி என்பனவும் 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறப்பாகச் செயற்படவில்லை.

எனவே அந்த அணிகளின் வீரர்களும் தமது திறமைகளைக் காட்டக்கூடிய ஒரு களமாக இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகள் அமையும் என்று கிரிக்கெட் விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (த)

UK | USA| Malaysia | India | Georgia | Latvia
Russia| Ukraine | Bangladesh | China

STUDY MEDICINE
MBBS
RECOGNISED BY
W.H.O & SRILANKAN MEDICAL COUNCIL



2014 INTAKE
APPLICATIONS ARE OPEN FOR NEXT INTAKE

LIMITED SEATS
CALL: 021 7306000
021 4926222
077 3013060

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna.
107, B 1/1 Galle Road, Colombo - 06
077 3013060

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ஸ்ரார் கல்வி நிலையம்
ஸ்ரேசன் றோட், சுன்னாகம். | ஏழாலை மேற்கு, ஏழாலை.
O/L Day Class
ஆரம்பம் 16.04.2014
புதன் காலை 8.00 மணி (46835) (10)

Ethical Hacking
Certified Cyber Security Professional
யாழ்நகரில் முதல்முறையாக CCSP கற்கைநெறி மூலம் Ethical Hacking கற்பதற்கான ஓர் வாய்ப்பு
புதிய பிரிவு 26.01.2014 முதல் ஆரம்பமாகின்றது
6 Days Training 9.00am to 5.00pm
அறிமுக சலுகையாக Linux Administration & Security இலவசமாக கற்றுக்கொள்ளலாம்
System Hacking, Trojans and Backdoors, Hacking Webservers, SQL Injection, Hacking Wireless Networks & More...
SofTech
மேலதிக விபரங்களுக்கு:
306. கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 077-9122997
www.softtech-edu.com/ccsd

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இப்போது புதிய நெருக்கடியில்

பாகிஸ்தான் வீரர் தனேஷ் கனேரியா ஆயுள்கால தடையை மீறி போட்டிகளில் பங்கேற்றதால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குக் கடும் நெருக்கடி வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் தனேஷ் கனேரியா, கடந்த 2012 ஆம்ஆண்டு இங்கிலாந்தில்நடந்த கவுண்டி போட்டியின் போது சகவீரர் வெஸ்ட் பீல்டுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து கனேரியா கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆயுள்கால தடை விதிக்கப் பட்டது.

கடந்த 11ஆம் திகதி அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நட்புரீதியி லான 20/20 கிரிக்கெட் போட்டி நடை பெற்றது. இதில் பாகிஸ்தான் டெஸ்ட் வீரர்கள் சிலர் பங்கேற்றுள்ளனர். போட்டியில் ஆயுள்கால தடை விதிக் கப்பட்ட பாகிஸ்தான் வீரர் தனேஷ் கனேரியாவும் விளையாடியுள்ளார்.

இத்தகவல் தெரியவந்ததையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

ஏற்கனவே சூதாட்டத்தில் சிக்கிய முகமது ஆசிப் நோர்வே போட்டிகளில் பங்கேற்றதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை எச்சரிக்கை தெரிவித்த நிலையில், மீண்டும் ஒரு வீரர் கட்டுப்பாட்டை மீறியுள்ளார். இவ்விவகாரத்தினால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு கடும் நெருக்கடி ஏற்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. (த)

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு af Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் 26.04.2014 – 8.30 am. இன்றே பதிவுசெய்யுங்கள்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு கந்தசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹாயாக பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம்
ஆலய கும்பாபிஷேக பெருவிழா தினமான நாளை (17.04.2014) வியாழக்கிழமை மாலை உற்சவத்தின்போது தென் இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட யானை சகிதம் பல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.



குறிப்பு: இன்று 16.04.2014 காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.
எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
ஆலய அறங்காவலர்
சு.புவனகுமார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இயற்கையின் தன்மைகள் உங்கள் இதயத்தில் நிறைய வேண்டும். புதிய எண்ணங்களுக்கு வரவேற்பு கொடுங்கள். அதுதான் மனிதகுலம் முன்னேறும் வழி.
-இங்கர்சால்

புதன் பொய்கை A

உதயன் ஏப்ரல் 16 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# இரக்கம் காட்டுவது தெய்வகுணம்

ராஜராஜன்

விபத்தொன்றில் படுகாயமடைந்த பெண் ஒருவரை உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வதற்கு எவரும் உதவ முன்வராததால் அவர் உயிரிழந்த சம்பவம் எம்மவரின் இரக்கமற்ற மனப்பான்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.


இரக்கம் என்பது அறவே வற்றிப் போகும் அளவுக்கு இத்தகையவர்களின் நெஞ்சம் கல்லாக மாறிப் போனமைக்கான காரணத்தைக் கண்டறிதல் அவசியமாகின்றது. ஏனென்றால் எதிர்காலத்தில் இங்குள்ள நிலைமை இன்னமும் மோசமாக மாறிவிடக் கூடும்.

ஒருவர் துன்பப்படும்போது, வேறொருவரின் நெஞ்சில் இரக்கம் பிறக்காது விட்டால் அவரை ஆறறிவு படைத்த மனிதர் எனக் கொள்ள முடியாது. அவர் ஓர் இரக்கமற்ற மிருகம் என்றே கொள்ளத்தக்கவர். ஏனென்றால் இரக்கம் என்பது இயல்பாகவே பிறக்கக் கூடியது. எவரும் பிறரில் அதை வலிந்து ஏற்படுத்திவிட முடியாது.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் கடந்த சில தசாப்தங்களாக இடம்பெற்ற கொடிய போர் காரணமாக மக்களின்



மன நிலைகளில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. ஆனால் இரக்கம் ஏற்படாமைக்கு இதையொரு காரணமாகக் கூறிவிட முடியாது. ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் பாதிப்பின் வலி அதிகம் தெரிய வரும். உதவ வேண்டுமென்ற உத்வேகமும் அதிகம் பிறக்கும். ஆனால் இங்கு எல்லாமே தலை கீழாகத் தெரிகின்றது.



இதற்கு வேறொரு காரணமும் இருக்கலாம். நமக்கேன் வீண் வம்பு என்ற மனநிலை எழும்போது இரக்கம் அடிபட்டுப் போகின்றது. மனச்சாட்சியும் இயங்க மறுத்து விடுகின்றது. மனிதத்துவமும் செத்துப்போகின்றது. மனிதத்துவம் செத்துவிட்டால் மனிதன் என்று அழைப்பதில் பயனேதும் இல்லை. இவ்வாறு உள்ளவர்கள்தான் எம்மிடையே உலவிவருகின்றனர்.

இன்று மழைக் காளான்களைப் போன்று பார்க்கும் இடமெல்லாம் உணவுச் சாலைகள் நிறைந்து காணப்படுகின்றன. உடலுக்கு நன்மை விளைவிக்கின்றனவோ இல்லையோ பார்ப்பதற்கு ஆவலைத் தூண்டும் விதத்திலான உணவுகள் அங்கு பரிமாறப்படுகின்றன. எம்மவரும் இவற்றை மொய்ப்பதையே ஒரு வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். பணம் தண்ணீராகச் செலவழிக்கப்படுகின்றது. ஆனால் ஒருவேளை வயிற்றுக்குக் கூட உணவு கிடைக்காத நிலையில் எத்தனை பேர் இங்கு வாடிநிற்கின்றனர் என்பதை எவருமே சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் உண்ணும் உணவுக்குச் செலவழிக்கும் சிறிய தொகைப் பணத்தை இந்தப் பசியால் வாடி நிற்பவர்களுக்கு வழங்கி உதவினால் அவர்களின் வயிறு குளிர்ந்து விடும். ஆனால் இது நடப்பதாகத் தெரியவில்லை.

மிருகங்களையும், பறவைகளையும் கொன்று உண்பது மனிதர்களின் வாடிக்கையாகவே மாறிவிட்டது. இவையெல்லாம் தமக்காகவே இறைவனால் படைக்கப்பட்டவை என்று தத்துவம் வேறு பேசுகிறார்கள். அண்மையில் கோழி இறைச்சி விற்பனை செய்யும் இடமொன்றுக்குச் சென்றிருந்தபோது அங்கு கண்ட காட்சி நெஞ்சைப் பதற வைத்தது. கோழிகளை உரித்துச் சுத்தம் செய்பவரின் கையில் உலோகக் குழாய் ஒன்று காணப்பட்டது. அவர் கோழிகளைப் பிடித்து அவற்றின் முதுகின் மீது அந்த உலோகக் குழாயினால் பலமாக அடித்து விட்டு அவற்றை நிலத்தில் வீசி விடுவார். வலி பொறுக்க முடியாத கோழிகள் அவலக்குரல் எழுப்பியவாறு நிலத்தில் கிடந்து தவிப்பதைப் பார்த்த போது இறைச்சி தேவைதானா என்ற எண்ணம் மனதில் எழுந்தது. கோழிகளைக் கொல்லாமல் உண்ண முடியாது என்பது உண்மைதான். ஆனால் அவற்றை கொல்வதற்கு சில நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய கோரிக்கையாகும். குறைந்தது ஏனையவர்களின் மனங்களைப் பாதிக்காத வகையில் மறைவாகவும், கோழிகள் துடித்துத் துடித்து இறக்காத வகையிலும் நடந்து கொள்ளவாவது முயற்சி செய்ய வேண்டும்.

போர் காரணமாக ஏராளமான சிறுவர்கள் தாய், தந்தையரை இழந்து அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். இத்தகையவர்களில் பலர் உணவு மற்றும் கல்வி கிடைக்காத நிலையில் அநாதைகளாக அலைந்து திரிவதையும் காண முடிகின்றது. சிலர் சிறுவர் இல்லங்களிலும், ஆதரவற்றோரைப் பேணும் நிலையங்களிலும் இணைக்கப்பட்டுள்ள போதிலும் பலரின் நிலை இன்னமும் பரிதாபமானதாகவே காணப்படுகின்றது. இத்தகையவர்கள் மீது இரக்கம் காட்டி அவர்களை அரவணைத்துக் கொள்வது அனைவரதும் முக்கிய பொறுப்பாகும். ஏதிலிகளான இந்தச் சிறுவர்கள் அல்லற்படும் போது நாம் மட்டும் வேளாவேளைக்கு உண்டு களிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. நாம் மனச் சாட்சியை ஒரு முறை தட்டிப் பார்க்கும் போது அங்கு தானாகவே இரக்க உணர்வு பிறந்து விடும். ஆனால் நாம் தான் இதற்கெல்லாம் இடம் கொடுக்காத நிலையில் கல் நெஞ்சர்களாக மாறிக் காணப்படுகின்றோம். காலச் சக்கரம் உழலும் போது எமக்கும் இந்த நிலைதான் ஏற்படும் என்பதை நாம் ஒரு முறை சிந்திப்போமானால் இந்த நிலை ஏற்படவே மாட்டாது.

ஒரு சிலர் சிறு சிறு விடயங்களில் கூட தமது இரக்கமில்லாத தன்மையைக் காட்டி வருகின்றனர். பஸ்களில் பயணிக்கும் போது இயலாத நிலையில் வருபவர்களுக்குத் தாம் அமர்ந்திருக்கும் ஆசனத்தைக் கொடுப்பதற்குக் கூட இவர்கள் விரும்புவதில்லை. நாம் இயலுமான நிலையில் இருக்கும்போது இயலாதவர்களுக்கு உதவி புரிவதில் தயக்கம் காட்டுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மரத்துப் போன எமது மனதுக்கு இரக்கம் என்னும் நீரைப் பாய்ச்சும் போதுதான் அதில் நெகிழ்வுத் தன்மையைக் காண முடியும். இல்லாதுவிட்டால் வறண்டு போன பாலை நிலமாகவே அது மாறிப் பிறருக்குப் பயன்படாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.


புத்தர், இயேசு பிரான், காந்தியடிகள் போன்ற மகான்கள் தமது போதனைகளில் இரக்கப்படுவதற்கு முதன்மை இடத்தைக் கொடுத்திருந்தனர். பிறருக்கு இரக்கப்பட்ட இவர்களுக்குத் துன்பங்கள் ஏற்பட்ட போதிலும் அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது மற்றவர்கள் மீது மேலும் மேலும் இரக்கத்தைக் காண்பித்தனர். இதனால் தான் மகான்களாகப் போற்றப்படுகின்றனர்.

ஒருவனிடத்தில் மன்னிக்கும் குணமும், இரக்க சுபாவமும் நிறைந்து காணப்பட்டால் அதுவே அவனை உயர்ந்த இடத்துக்கு உயர்த்திவிடும்.

மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரங்கள், செடி கொடிகள் ஆகியனவற்றை நேசிக்கும் பழக்கத்தை முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் ஆறறிவு படைத்தவர்கள், ஆனால் ஏனையயாவுமே எமக்குச் சமம் ஆகாது என்னும் கர்வத்தை நாங்கள் விட்டொழிக்க வேண்டும். அறிவைப் பொறுத்தவரை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் உயிர் என்பது அனைத்துக்கும் பொதுவானதே என்பதை உணர்ந்து கொள்ளும்போது அவற்றின் மீது பாசத்தையும், இரக்கத்தையும் எம்மால் காட்ட முடியும்.

ஒரு சிலர் தாம் மற்றவர்கள் மீது இரக்கத்தைக் காட்டும்போது தமது மதிப்புக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றனர். இதுவொரு போலித்தனமான சிந்தனையாகும். இரக்கம் காட்டுவது என்பது உயர்வான தெய்வ குணமாகும். இதனை வெளிக்காட்டுவதில் எமக்கு எந்த விதமான இழிவும் ஏற்பட்டுவிடாது. மாறாக எமது மனதில் ஓர் ஆத்மார்த்தமான திருப்தியே ஏற்படும்.

ஆகவே மனிதராய்ப் பிறந்த நாம் அனைவரும் இரக்க குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உறவுகளிடம் மட்டுமல்ல ஏனையவர்களிடமும் எமது அன்பையும், பரிவையும் காட்ட வேண்டும். எந்த வகையிலும் எவருக்காவது பாதிப்பு ஏற்படுமாயின் அதனைத் துடைத்து ஆறுதல் அளிக்கும் வகையில் எமது மனதை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். இரக்கம் உள்ளவன் தெய்வத்துக்கு ஒப்பாக மதிக்கப்படுவான். தெய்வம் என்பதும் மனிதர்கள் மத்தியில்தான் உலவி வருகின்றது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. மனிதர்கள் எப்போதுமே தம்மையும், தமது சுகபோகங்களையும் மட்டுமே சிந்திப்பதை விடுத்து ஏனையவர்களின் நலன்களிலும் அக்கறை செலுத்த வேண்டும். அனுதாபம் காட்ட வேண்டும். இதற்கு அவர்களின் மனங்களில் எப்போதுமே இரக்க உணர்வு சுரந்து கொண்டே இருக்க வேண்டும். இதுதான் இந்த உலகில் நிரந்தரமான மகிழ்ச்சிக்கு வித்திடும் என்று கூறத் தேவையில்லை.



## மின் சாதனத்தால் குணப்படுத்தப்பட்ட பக்கவாதம்

மின் சாதனம் மூலம் பக்கவாதத்தை குணப்படுத்தி அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மார்புக்கு கீழே செயலிழந்து ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில் இருந்த நான்கு நோயாளிகள் முதுகுத் தண்டில் மின்சாதனம் பொருத்தப்பட்டு கால்களையும், பாதங்களையும் அசைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

இந்த வெற்றி சிறிய எண்ணிக்கையிலான நோயாளிகளிடத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற போதிலும் இந்தப் புதிய முயற்சி பக்கவாத நோயால் முடங்கியுள்ள 6 மில்லியன் அமெரிக்கர்களுக்கு குறிப்பாக முதுகுத் தண்டுப் பிரச்சினையால் அவதிப்பட்டு வரும் 1.3 மில்லியன் நோயாளிகளுக்கு நம்பிக்கை அளிப்பதாக அமைந்துள்ளது என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.


மறுவாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையே அளிக்கப்படாத நோயாளிகளுக்குக் கூட இந்த சிகிச்சை முறையில் பயன் கிடைக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இதுமட்டுமின்றி முதுகுத் தண்டு பிரச்சினைகளில் சேதமடைந்த நியூரான்களின் மறுவளர்ச்சி அல்லது ஸ்டெம் செல்கள் மூலம் புதுப்பித்தல் என்ற சிகிச்சை முறைகளும் இதுவரை கடினமானதாகவும், சர்ச்சைக்குரியதாகவும் இருந்து வந்தது. ஆனால் இந்தப் புதிய முறையின் மூலம் முதுகுத்தண்டு பிரச்சினைகளால் பக்கவாதம் ஏற்படும் போது அதனை வாழ்நாள் தண்டனையாக அனுபவிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று மருத்துவர் ரோட்ரிக் பெட்டிகுரூ குறிப்பிட்டார்.

இவர் தேசிய சுகாதார நிறுவனத்தின் துணை நிறுவனமாக செயற்பட்டு வரும் உயிர் மருத்துவவியல் இமேஜிங் மற்றும் உயிர்பொறியியல் தேசிய நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

> **மறுவாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையே அளிக்கப்படாத நோயாளிகளுக்குக் கூட இந்த சிகிச்சை முறையில் பலன் கிடைக்கக்கூடும்.**

நடக்க முடியாது என்றபோதிலும் தன்னார்வச் செயற்பாடுகள் சிலவற்றை அவர்களால் மேற்கொள்ளமுடியும் என்றும் முதுகுத்தண்டு காயங்களுக்கான ஆராய்ச்சியில் இந்த சிகிச்சை ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.



## திடீரென மாரடைப்பு வந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

மாரடைப்பு எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. திடீரென்று தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் கஷ்டம். அந்த நேரத்தில் நீங்கள் மிகவும் படபடப்பாகவும், தொய்வாகவும் உள்ளீர்கள். திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள். அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள்.

உங்கள் இதயம் தாறுமாறாகத் துடிக்கிறது. நீங்கள் சுயநினைவை இழக்க 10 நொடிகள்தான் உள்ளன. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும். ஒவ்வொரு முறை இருமும் போதும், அதற்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும். இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும்.

இருதயம் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக் கொண்டே இருக்க வேண்டும்.

மூச்சை இழுத்து விடுவதால் நுரையீரலுக்கு ஒட்சிசன் சீராகச் செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக் கொண்டே இருக்க உதவும்.

இதனால் இரத்த ஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராகத் துடிக்கும். பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல முடியும்.

## மனதை உற்சாகமாக வைத்திருந்தால் எப்போதும் இளமையாக இருக்கலாம்

மனதை எப்போதும் உற்சாகமாக வைத்துக் கொண்டால் நாம் எப்போதுமே இளமையாக இருக்கலாம்.

அது எப்படி பிரச்சினைகள் வரும் போது மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ள முடியும் என்று நீங்கள் கேட்கலாம்.

எதையும் நேர்மறையாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் நம்மால் எந்தச் சூழ்நிலையிலும் உடைந்து போகாமல் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

வாழ்க்கையைப் பற்றிய கவலையை தூக்கி எறிந்து விட்டு. வாழ்க்கை என்பது பூங்காவனம் அல்ல போராட்ட களம் என்பதை உணருங்கள்.

போராட்ட களத்தில் இழப்புகளும், வெற்றிகளும் சாதாரணம். எதற்கும் கலங்காமல் வாழப் பழகிக் கொள்ளுங்கள். எப்போதும் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று அதன் போக்கில் உங்களது வாழ்க்கையை சிறப்பாக வாழப் பழகிக் கொள்ளுங்கள்.



நீங்கள் எந்தப் பிரச்சினையையும் சந்திக்காமல் வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் தவறான பாதையில் பயணிக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

முதலில் உங்கள் பாதையை மாற்றுங்கள். உற்சாகம் உங்களுக்குள்தான் இருக்கிறது. அதை வெளியில் தேடாதீர்கள். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுங்கள்.

> **முதலில் உங்கள் பாதையை மாற்றுங்கள். உற்சாகம் உங்களுக்குள் தான் இருக்கிறது. அதை வெளியில் தேடாதீர்கள்.**



## நீரிழிவு நோயை குணப்படுத்த புதிய மருந்து

நீரிழிவு நோயாளிகளுக்கு காஸ்டஸ் பிக்டஸ் என்ற தாவர இலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால், இனி இன்சுலின் ஊசி போட்டுக் கொள்வதைத் தவிர்க்க வாய்ப்புள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலின் மருந்து பயன்படுத்த வேண்டியுள்ளது. முதல் நிலை நீரிழிவு நோயாளிகளை தவிர 2 ஆம் நிலை நீரிழிவு நோயாளிகள் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்வதைத் தவிர்க்க கூடிய வாய்ப்பு, தற்போது ஏற்பட்டுள்ளது.

காஸ்டஸ்பிக்டஸ் (சிறுகுறிஞ்சான்) என்ற இன்சுலின் தாவரத்தின் இலை ஒன்றை, தினந்தோறும் காலையில் வெறும்வயிற்றில் சாப்பிட்டாலே போதுமானது என்று கூறுகிறார்கள்.


இன்சுலின் மருந்து மாத்திரை வடிவிலோ, திரவ மருந்தாகவோ இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஊசி மட்டுமே உள்ளது. ஆனால் நீரிழிவு நோய் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு காஸ்டஸ்பிக்டஸ் அதிக பயன்களைத் தருகிறது என்று விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர்.

தாவரத்தின் இலைகளிலிருந்து பெறப்படும் சாறு இரத்தத்தில் கலந்துள்ள சீனியின் அளவைக் கட்டுப் படுத்துவதோடு இனிப்புச் சாப்பிட வேண்டும் என்ற ஆவலையும் படிப்படியாக்கக் குறைப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

காஸ்டஸ் பிக்டஸ் தாவரத்தின் இலை சாப்பிட்டால் எத்தகைய பின் விளைவுகளும் ஏற்படுவது இல்லை என்று ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இதன் மூலம் இன்சுலின் ஊசி போடுவது கட்டாயமில்லை என்ற நிலையில் நீரிழிவு நோயாளிகள் பயன் பெறுவார்கள் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.



உதயன்
16.04.2014



# பருவ நிலை மாற்றத்தால் பாதிப்புகள் அதிகரிக்கலாம்

## ஐ.நா. எச்சரிக்கை



புவியில் ஏற்பட்டுவரும் பருவநிலை மாற்றங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆதாரங்கள் காட்டுகின்றன என்று ஐ.நா. தற்போது வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

பெரியளவிலான நடவடிக்கைகளை எடுக்காமல்விட்டால், பருவநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்புகளை மனிதர்கள் சந்திக்க நேரிடும் என்று அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு, வறட்சி, உணவுத் தட்டுப்பாடு, மனித குலத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது போன்றவை எதிர்வரும் காலங்களில் ஏற்படும் ஆபத்து அதிகமாக உள்ளது என்று பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நாவின் சர்வதேச குழு கணித்துள்ளது.

ஆனால் ஏற்படக்கூடிய மாற்றங்களில் பலவற்றுக்கு எம்மால் ஈடுகொடுக்க முடியும் என்றும், கரிமம் சுற்றாடலில் கலந்து வருவதை நாம் வேகமாகக் கட்டுப்படுத்தினால், மிக மோசமான பாதிப்புகளை நாம் தவிர்க்கவும் முடியும் என்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கரிம வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சர்வதேச நாடுகள் இடையில் ஒரு ஒப்பந்தத்தை எட்டச்செய்வதற்கு இந்த அறிக்கை உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

உலகின் எல்லா கண்டங்களிலும் சமுத்திரங்களை அண்டிய பிராந்தியங்களிலும் பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகள் கண்கூடாகத் தெரிகின்றன.

கடைசியாக 2007 ஆம் ஆண்டில் வெளியான பருவநிலை மாற்றம் தொடர்பான அறிக்கையின் பின்னர், தற்போது 7 ஆண்டுகளின் முடிவில் புவி வெப்பமடைதலின் பாதிப்புகள் இரட்டை மடங்காகியுள்ளமைக்கான விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள் இந்தப் புதிய ஆய்வறிக்கையில் வெளியாகியுள்ளன.

**'எல்லா மனிதர்களையும் பாதிக்கும்'**

'இந்த பூமிப் பந்தில் வாழும் எந்தவொரு மனிதரையும் பருவ நிலை மாற்றத்தின் விளைவுகள் தொடாமல் இருக்கப் போவதில்லை' என்று ஐ.பீ.சி.சி. (IPCC) என்ற பருவநிலை தொடர்பான சர்வதேச குழுவின் தலைவர் ராஜேந்திர பச்சோரி கூறினார்.

அடுத்த 20-30 ஆண்டுகளில் இயற்கையின் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்று இந்த அறிக்கை கணிக்கிறது.

குறிப்பாக, ஆர்க்டிக் கடல் பனிப்பாறை பகுதிகளில் 2 செல்சியஸ் அதிகரிப்புடன் வெப்பநிலை உயரலாம். அதனால் கடல் மற்றும் நன்னீர் நிலைகள் கடுமையாகப் பாதிக்கப்படலாம்.

சமுத்திரங்களில் அமிலத்தன்மை செறிவு அதிகரிப்பது பவளப் பாறைகளையும் அவற்றை ஒட்டிவாழும் உயிரினங்களையும் அச்சுறுத்தக்கூடும் என்றும் ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

நிலத்தில் விலங்குகள், தாவரங்கள் மற்றும் மற்ற உயிரினங்கள் மேட்டு நிலங்களை நோக்கி நகரலாம். மேலும் அவை துருவங்களை நோக்கி இடம்பெயரக்கூடும்.

**உணவுத் தட்டுப்பாட்டுக்கும் பஞ்சம் இருக்காது**

ஒட்டுமொத்தத்தில் இந்த நூற்றாண்டு மாறும்போது மனித குலமும் கடுமையான பருவநிலை பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தாகவேண்டிய நிலை ஏற்படும் என்பது தான் இந்த ஆய்வறிக்கையின் சுருக்கம்.

2050 ஆம் ஆண்டாகின்றபோது சோளம், நெல், கோதுமை போன்ற உணவு பயிர்ச்செய்கைகள் கடுமையாகப் பாதிக்கலாம். அதன் பின்னர் பல பிராந்தியங்களில் உணவு உற்பத்தி இன்னும் மோசமாகும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

அதுமட்டுமன்றி, 2050 இல் உலக சனத்தொகையும் 9 பில்லியனைத் தொட்டுவிடும். அதற்கேற்றாற்போல் உலக உணவுத் தேவையும் அதிகரித்துவிடும் என்றும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

மனிதர்களின் முக்கியமான உணவுப் பொருள்களில் ஒன்றாக உள்ள மீன்களும் நீரின் வெப்பம் தாளாமல் வேறு இடங்களுக்கு இடம்பெயரக்கூடும்.

குறிப்பாக, வெப்பமண்டல பிராந்தியங்கள் பலவற்றிலும் அண்டாட்டிகா பகுதியிலும் மீன்வளம் 50 வீதத்துக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துவிடும் என்றும் விஞ்ஞானிகள் கணிக்கின்றனர்.


**அடுத்த 20-30 ஆண்டுகளில் இயற்கையின் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்று இந்த அறிக்கை கணிக்கிறது.**



# வானவில்லின் வடிவம் என்ன?

நீங்கள் வானவில்லைப் பார்த்திருக்கிறீர்கள்தானே? எப்போதெல்லாம் வானவில் தோன்றும்? மழை வந்த பின்னர் வானவில் தோன்றும் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் வானவில் தோன்ற மழை மட்டுமே காரணம் இல்லை. பனிமூட்டம், காற்றில் மிதக்கும் கண்ணுக்குப் புலப்படாத சின்னச் சின்ன தூசு, காற்றில் நிறைந்திருக்கும் நீர்த்துளிகள் ஆகியவற்றுக்கும் வானவில் தோன்றுவதில் பங்கு இருக்கிறது.

எமது கண்களுக்குத் தெரிவதுபோல உண்மையில் வானவில் அரைவட்டமாக இருக்காது. முழு வட்ட வடிவில்தான் வானவில் தோன்றும். எமது கண்களுக்கு வளிமண்டலத்தின் மேற்பகுதியில் இருக்கும் அரைவட்டம் மட்டும் தெரியும். அழகான வண்ணங்களுடன் இருக்கும் வானவில்லைக் கையால் தொட்டுப்பார்க்க ஆசையாக இருக்கிறதா? உண்மையில் கையால் தொடமுடிகிற அளவுக்கு வானவில் ஒரு பொருள் அல்ல. கானல் நீர் போல ஒளிச்சிதறல் மற்றும் எதிரொலித்தல் மூலம் எம் கண்களுக்குத் தெரிகிற ஒரு பிம்மம் மட்டுமே.



**வானவில்லில் நீலம், கருநீலம், ஊதா, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என ஏழு நிறங்கள் இருக்கும்.**

வானத்தில் உள்ள நீர்த்துளிகளில் (அதுதான் மழையாகப் பொழிகிறது) சூரிய ஒளி ஊடுருவி, அது சிதறலடைந்து, நீர்த்துளிகளின் பின்புறமாக எதிரொலிப்பதால் உருவாகும் நிகழ்வே வானவில். ஒரு குறிப்பிட்ட கோணத்தில் இருந்து பார்த்தால் மட்டுமே வானவில் எமது கண்களுக்குத் தெரியும். அதனால்தான் சில நேரங்களில் உங்கள் கண்களுக்குத் தெரியும் வானவில், அடுத்த ஊரில் இருக்கும் உங்கள் நண்பனின் கண்களுக்குத் தெரிவதில்லை.

வானவில்லில் ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என ஏழு நிறங்கள் இருக்கும். ஆங்கிலத்தில் VIBGYOR என்ற வார்த்தையின் மூலம் இந்த வண்ணங்களை நினைவில் வைத்துக் கொள்ளலாம். அதாவது ஒவ்வொரு ஆங்கில எழுத்தும் ஒவ்வொரு நிறத்தின் முதல் எழுத்தைக் குறிக்கும். v - violet, i - indigo, b - blue, g - green, y- yellow, o - orange, r-red.


வானவில்லில் இரண்டு வகை உண்டு. முதன்மை வானவில்லில் வெளிப்பக்கம் சிவப்பு நிறமும், உள்பக்கம் ஊதா நிறமும் இருக்கும். இரண்டாம் நிலை வானவில்லில் (அதாவது நீர்த்துளிகளுக்குள் சூரிய ஒளி இரண்டுமுறை சிதறடிக்கப்படும்போது தோன்றுவது) இந்த வண்ண அமைப்பு அப்படியே தலைகீழாக இருக்கும். அடுத்தமுறை வானவில் பார்க்கும்போது அது என்ன வானவில் என்று சரியாகச் சொல்லிவிடுவீர்கள்தானே!



## சவாலுக்காக புலிகளின் கோட்டைக்குள் பாய்ந்த துணிவு மிக்க இளைஞன்

இந்தியாவின் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவனான யசோநந்தன் கௌசிக் என்ற 23 வயதான இளைஞன் தனது நண்பர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட பந்தயத்துக்காக குவாலியர் (Gwalior) மிருகக்காட்சிச் சாலையிலுள்ள புலிகள் அடைக்கப்படிருந்த பிரதேசத்தினுள் பாய்ந்துள்ளான்.

சவாலுக்காக புலிகளின் கோட்டைக்குள் பாய்ந்த அந்த இந்திய மாணவன், தனது மேற்சட்டையை கழற்றிய பின்னர் புலிக்கூண்டுக்குள் பாய்ந்து எந்தவித பயமுமின்றி நடனமாடியுள்ளார். ஆனாலும் அவரது நண்பர்கள் வெளியே வருமாறு கேட்டுக்கொண்ட போதிலும் அதனைப் பொருட்படுத்தாது சுமார் 45 நிமிடங்கள் வரை அப்பகுதியில் நின்றுள்ளார். எனினும் அங்கிருந்த புலிகள் அவரை எதுவும் செய்யவில்லை. அதன் பின்னர் அங்கு வந்த பாதுகாவலர்கள் அவரைப் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளனர்.



## கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

அணில் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது என்ன? கையில் ஒரு பழத்தையோ அல்லது கொட்டையையோ பிடித்தபடி கொறித்துக்கொண்டிருக்கும் காட்சிதானே. சரி, அணில் ஏன் எப்போதும் எதையாவது கொறித்துக் கொண்டே இருக்கிறது?

**உயிர்வாழும் இரகசியம்**

அணிலின் முன்பற்கள் நீளமானவை, கூர்மையானவை. அவை தொடர்ந்து வளரும் தன்மை கொண்டவை. அணில்கள் இப்படி மரப்பட்டைகளை கடித்துத் தங்கள் பற்களைத் தேய்க்காவிட்டால் அவை நீளமாக வளர்ந்துவிடும். அப்படி நீளமாகிவிட்டால் அணில்களால் வாயை அசைக்க முடியாது. வாயை அசைத்தால்தானே சாப்பிட முடியும்? சாப்பிட்டால்தானே உயிர்வாழ முடியும்? அதனால் அணில்கள், பட்டினி கிடந்து இறப்பதற்குப் பதிலாக இப்படிக் கொறித்துக் கொறித்துத் தங்கள் வாழ்நாளை நீடித்துக் கொள்கின்றன.

மரக்கிளைகளில் தாவியோடும் அணில்களைப் பற்றி இன்னொரு சந்தேகமும் தோன்றலாம். இவ்வளவு வேகமாக மரங்களில் ஓடும்போது அவை கீழே விழுந்துவிடாதா? பழத்தை இரு முன்னங்கால்களால் பிடித்துக் கொண்டிருக்கும்போது, பின்னங்கால்களால் மட்டும்தானே உட்கார்ந்திருக்கின்றன. எப்படி கீழே விழாமல் இருக்க முடியும்?

இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். அணிலின் நகங்கள் வளைந்து இருக்கும். அந்த அமைப்பு, மரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள உதவும். குட்டிப்புதர் மாதிரி இருக்கிற அணிலின் வால், அவை தாவும்போது சமநிலையை ஏற்படுத்த உதவுகிறது. அதனால் தான் அணில்கள் எந்தப் பயமும் இன்றி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மரத்தின் உச்சிக்கே சென்று, நம்கண்ணில்இருந்து மறைந்துவிடுகின்றன. சில அணில்கள் காற்றில் சறுக்கிப் பறக்கும்தன்மைகொண்டவை.



**அணில்களின் கருணை**

அணில்களிடம் இன்னொரு சிறப்பியல்பும் இருக்கிறது. அணில் குட்டிகளின் அம்மா உணவு தேடச்செல்லும்போது மற்ற விலங்குகளால் இறக்க நேரிட்டால், அணில் குட்டிகள் என்ன செய்யும்? அவற்றுக்கு இரை தேடிச் சாப்பிடத் தெரியாதுதானே? அதனால் ஏனைய அணில்கள், அந்த அணில் குட்டிகளைத் தத்தெடுத்து வளர்க்கும். அதேபோல பெண் அணில்கள் குட்டிபோடும் காலத்தில் எதையுமே சாப்பிடா. பிரசவ காலத்தில் ஏற்படும் வலிக்கும், அணில்கள் உணவைத் தவிர்ப்பதற்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். அடுத்தமுறை அணிலைப் பார்க்கும்போது அதன் பல், வால், நகம் அனைத்தின் செயல்பாடுகளையும் கவனித்துப் பாருங்கள். உண்மையை நீங்களே உணர்வீர்கள்.

# வாழ்க்கைப் புத்தகம்

## எனக்கு மட்டும் ஏன்..?




வாழ்க்கையில் வரும் இயல்பான பிரச்சினைகளை எதிர் கொள்ளத் திராணியற்று மரணத்தைத் தழுவிக் கொண்ட வெவ்வேறு விதமான மனிதர்களின் மரண வாக்குமூலங்களின் மூலம் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கான உத்திகளை வழங்கும் நூல் இது. அதிலிருந்து ஒரு பகுதி.

ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகள். ஆனால் எல்லோரும் ஒரே ஒரு கேள்வியைக் கேட்போம், 'எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?'

உலகத்தில் இருக்கும் அனைவரும் சந்தோஷமாக இருந்துகொண்டிருப்பது போலவும், தனக்கு மட்டும் பிரச்சினை, தனக்கு மட்டும் தோல்வி, தனக்கு மட்டும் சிக்கல் எனவும் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. இந்த இடத்தில் ஒரு முக்கியமான மனிதரை உங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டிருக்கிறது.

அவர் ஆர்தர் ஆஷே. பிரபல டென்னிஸ் வீரர். கறுப்பினத்தைச் சேர்ந்தவர். டென்னிஸ் என்பதுதான் இவருடைய கனவு, எதிர்காலம், எல்லாமும்.

ஆனால் டென்னிஸ் விளையாடச் செல்லும் இடங்களில் எல்லாம் பலவிதமான எதிர்ப்புகள், அவமதிப்புகள். ஆனால் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு டென்னிஸ் விளையாடக் கற்றுக் கொண்டார். மிக நன்றாக விளையாடவும் செய்தார். வெற்றிகள் குவிந்தன. பலரது கவனத்தையும் ஈர்த்தார்.

உலகின் பிரபலமான அத்தனை போட்டிகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் வந்தன. அமெரிக்க ஓபன் டென்னிஸ், ஆஸ்திரேலியா ஓபன், விம்பிள்டன் எனப் பல போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றிகளைச் சுவைத்தார்.

திடீரென ஒருநாள் அவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. மாரடைப்பு என்றார்கள். அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. தீவிர மருத்துவ சிகிச்சைகள் தரப்பட்டன. ஆஷே பிழைத்தார். டென்னிஸ் ரசிகர்கள் பெருமூச்சு விட்டனர். அந்தப் பெருமூச்சு அடங்குவதற்குள் அடுத்த அதிர்ச்சி வந்து சேர்ந்தது. ஆஷேவுக்கு மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டது.

மீண்டும் மருந்துகள், மாத்திரைகள். ஆனாலும் சிக்கல் தீர்ந்தபாடில்லை. வெவேறு விதமான உடல்நிலைப் பிரச்சினைகள் தொடர்ந்தன. தீவிர பரிசோதனையில் அவருக்கு எயிட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தீய பழக்கவழக்கங்கள் எதுவும் அவரிடம் இல்லை. அவருக்கு எயிட்ஸ் எப்படி வந்தது? ஆய்வுசெய்து பார்த்தபோது அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்தபோது இரத்தம் ஏற்றப்பட்டது. அந்த இரத்தம் எச்.ஐ.வி. கலந்த இரத்தம். விடயம் தெரிய வந்தபோது ரசிகர்கள் துடிதுடித்துப்போனார்கள். அவருடைய ரசிகர்களில் ஒருவர் ஆஷேவுக்குக் கடிதம் எழுதினார், 'உங்களுக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?'

அதற்கு ஆஷே நிதானமாகப் பதில் எழுதினார். 'உலகில் 5 கோடி சிறுவர்கள் டென்னிஸ் விளையாட விரும்புகிறார் கள். 50 லட்சம் பேரே விளையாடுகிறார்கள். 5 லட்சம் பேரே முறையான பயிற்சியுடன் தேர்ச்சி பெறுகிறார்கள்.

அவர்களில் 50 ஆயிரம் பேருக்குதான் போட்டிகளில் விளையாடும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால் அவர்களில் 5 ஆயிரம் பேரால்தான் விளையாட முடிகிறது.

அவர்களில் 50 பேர்தான் விம்பிள்டன் போன்ற சர்வதேசப் போட்டிகளுக்கு வருகிறார்கள். அவர்களில் நான்கு பேர்தான் அரை இறுதிக்கு முன்னேறுகிறார்கள். இருவர் இறுதிப் போட்டியில் மோதுகிறார்கள். ஒருவர்தான் கோப்பையை வெல்கிறார்.

எனக்கு மட்டும் ஏன்? என அப்போது நான் கேட்கவில்லை.

# அரச அதிகாரியிடம் இருக்கக் கூடாதது எது?

சீனா என்று அந்த நாட்டுக்குப் பெயர் வந்ததற்குக் காரணமே அங்கு தயாராகும் பட்டுத்துணிகள்தான். சீன மொழியில் டிஸின் என்றால் பட்டு: மென்மையானது என்று பொருள். டிஸின் என்பதே நாளடைவில் ட்ஸின் என்றும் ஸின் என்றும் ஸினாய் என்றும் மாறிக் கடைசியில், சீனா என்று ஆகிவிட்டது. புத்த மதம் சீனாவில் இருந்துதான் ஜப்பானுக்குப் பரவியது. புத்தத் துறவிகள் ஜப்பானைப் போன்று சீனாவிலும் நிறையப் பேர் இருந்தனர்.

சீன குரு என்பதே ஸின் குரு என்றாகி, ஜென் குரு என மாறியது என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். புகழ்பெற்ற சீனக் குருக்களில் முதன்மையானவர் கன்பூசியஸ். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக, இன்றுவரை அவரது பொன்மொழிகள் உலகெங்கும் போற்றப்படுகின்றன. சிறிய குடிசையில் எளிமையாக வாழ்ந்த அவரிடம் பாடம் கற்க ஏராளமாக பிரபுக்கள், மன்னர்கள் தங்களுடைய பிள்ளைகளை அனுப்பி வைத்தனர். கன்பூசியசிடம் பாடம் கற்றவன் என்ற ஒரு தகுதியே அந்நாளில் அரசுரிமை பெறுவதற்கான தகுதிகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்கியது.

ஒருநாள் குருகுலத்தில் கன்பூசியஸ் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

குருவே! என்னை அரசு அதிகாரியாக நியமிக்கப் போகிறார்கள். எனக்குத் தாங்கள் கூறும் அறி வுரை என்ன? என்று கேட்டான் ஒரு மாணவன்.

நீ செய்யும் எந்தக் காரியத்திலும் உடனே பலன்கள் ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்க்காதே. அதற்காகவும் அவசரப்படாதே. குறுகிய காலத்தில் இலாபம் ஏற்படவேண்டுமென்றும் எதிர்பார்க்காதே. நீ செய்யும் முதலாவது தவறு உன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக மதிப்பு இழக்க வைக்கும்: இரண் டாவது தவறு பெரும் சாதனைகளைக் கூடக் கோட்டை விடச் செய்யும். என்றார் கன்பூசியஸ்.


அரசு அதிகாரி என்ற முறையில் என்னிடம் என்ன குறைகள் இருக்கக் கூடாது? என்றான் அந்த மாணவன். பாரபட்சம், அவசரப்பட்டு முடிவெடுத்தல், சுயநலம், பிடிவாதம் இவை கூடாது. என்றார் கன்பூசியஸ்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இளவரசன் எழுந்து கேட்டான்.

குருவே முன்னோர்களின் ஆவிகளுக்கு எப்படி நம் கடமைகளைச் செய்வது? 'உயிருடன் இருப்பவர்களுக்கு முதலில் உன் கடமைகளைச் செய். ஆவிகளைப் பிறகு கவனிக்கலாம்' என்றார் கன்பூசியஸ்.

ஆட்சி சிறப்பானதாயிருக்க எவை எவை தேவை? என்றான் இளவரசன். மூன்று விடயங்கள் தேவை. முதல் தேவை, போதிய உணவு இரண்டாவது தேவை, மக்களின் பாதுகாப்புக்காக பலமான இராணுவம், மூன்றாவதாக, மக்களின் நம்பிக்கையை அரசு பெற்றிருக்க வேண்டும். இந்த மூன்றிலும் தன்னிறைவு பெற்றதே சிறந்த நிர்வாகம். இதில் ஏதேனும் ஒன்றை விடவேண்டும் என்றால் முதலில் விட வேண்டியது எது? பளிச்சென்று, 'இராணுவம்!' என்றார் கன்பூசியஸ். இரண்டாவதாக விட வேண்டுமென்றால்...? உணவு, மாணவர்கள் இதைக் கேட்டுத் திகைத்தனர். குரு அவர்களுக்கு விளக்க ஆரம்பித்தார். உணவு இல்லையென்றால் பஞ்சம் ஏற்படும். மக்கள் மடிவார்கள். அப்படிப் பலமுறை மனித சமூகத்துக்கு நேரிட்டிருக்கிறது. இருப்பினும் மனித சமுதாயம் மீண்டும் துளிர் விட்டு எழாமல் இல்லை என்றார் கன்பூசியஸ்.

# அழிந்து போன யானைப் பறவை மீண்டும் வருகிறது






உலகின் மிகப் பெரிய பறவையாக கருதப்பட்ட யானைப் பறவையான (எலிபண்ட் பேர்ட்) 300 ஆண்டுகளுக்கு முன் பிரஞ்சு காலனிக்காரர்களால் அழிந்து போனது. மடகாஸ்கரைச் சேர்ந்த இந்தப் பறவையினம், அதன் பாதுகாக்கப்பட்ட முட்டையின் ஓட்டில் இருந்து எடுக்கப்படும் டி.என்.ஏ.யின் மூலம் மீண்டும் உயிர் பெறலாம் எனக் கருதப்படுகிறது.

நெருப்புக் கோழி மற்றும் ஈமு வகை கோழியை போன்று உருவ அமைப்புடன் அளவில் மிகவும் பெரியதாக காணப்படுவது யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்). இது 10 அடி உயரமும், அரை டன் எடையும் கொண்டது. ஆபிரிக்கத் தீவுகளில் பிரெஞ்சுக்காரர்கள் குடியேறும் வரை, இவ்வகைப் பறவை அங்கு காணப்பட்டது. அவர்கள் குடியேறிய சில ஆண்டுகளிலேயே, இந்தப் பறவை இனம் இறைச்சி மற்றும் முட்டைக்காக தொடர்ந்து வேட்டையாடப்பட்டதால், காலப்போக்கில் அழிந்து போயின. இந்தப் பறவையின் முட்டை, சாதாரண கோழி முட்டையை விட 160 மடங்கு பெரிது. தற்போது காணப்படும் ஈமு கோழியை விடப் பெரியது. மூக்கு குத்தீட்டி போல பெரியதாக இருக்கும்.

மடகாஸ்கரின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த இந்த பறவைகளின் பழைய கூடுகளில் காணப்பட்ட முட்டை ஓடுகளை, ஷெப்பீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். அழிந்து போன பறவை இனங்களான நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த மோவா மற்றும் மடகாஸ்கர் பகுதியை சேர்ந்த யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்) போன்ற பறவையினங்களின் முட்டை ஓடுகளில் இருந்து அவற்றின் மரபணுவைப் பிரித்தெடுக்கும் முறையை, விஞ்ஞானிகள் தற்போது கண்டறிந்துள்ளனர். அவ்வாறு வெற்றிகரமாக டி.என்.ஏ யைப் பிரித்தெடுத்து அதன் மூலக் கூறுகளைக் கண்டறிந்தால், அதன் மூலம் அழிந்து போன பறவை இனங்களைப் போன்ற தோற்றம் கொண்ட, ஒன்றை, குளோனிங் மூலம் உருவாக்கும் வாய்ப்பு உள்ளது.

இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில், முட்டை ஓடுகளில் இருந்து பழைமையான டி.என்.ஏ யைப் பிரித்தெடுப்பதுதான், தொல்பொருள் மற்றும் புதைபடிவ ஆராய்ச்சியில் இருக்கும் முக்கியமான ஒன்று. பழைமையான டி.என்.ஏ., படிவங்களை போதுமான அளவு பெறுவது, மிகவும் சவாலாக உள்ளது. பொதுவாக, அழிந்து போன இனங்களின் புதைபடிவங்கள் எங்காவது சில இடங்களில் சிறிதளவே உள்ளன என்றார். இந்த யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்) மிகப் பெரிய கால்கள், கூர்மையான நகங்கள், நீண்ட சக்தி வாய்ந்த கழுத்து மற்றும் உரோமம் போன்ற இறகுகளால் மூடப்பட்டுக் காணப்படும். பார்க்க மிகவும் பெரிதாக, பயமுறுத்தும் தோற்றுத்துடன் இப்பறவை காணப்பட்டாலும், இதன் உணவு தாவரங்கள்தான். மடகாஸ்கர் பகுதியில் இந்த பறவை இனம் ஆறு கோடி ஆண்டுகள் வாழ்ந்துள்ளன.

இதே போன்று, நியூசிலாந்தில் வாழ்ந்து 18ஆம் நூற்றாண்டில் அழிந்த பறவை இனம் மவோ. இது யானையை விட உயரமானது. இதுகுறித்து, ஆஸ்திரேலியாவின் முர்டாச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் வல்லுநரான சார்லட் ஓஸ்காம் என்பவர் கூறுகையில், இந்த முட்டை ஓடுகள் மூலம் புதிய வகை டி.என்.ஏ., குறித்த தகவல்களை அறியலாம். பூமியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட பறவைகளின் பழங்கால முட்டை ஓடுகளில் டி.என்.ஏ க்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதற்கு இது முதல் ஆதாரம் என்றார்.



# கடல் தாமரைகள்

காட்டுப்பூக்களைப் போலவே அழகிய வண்ணத்தில் இருப்பதால் கடல் தாமரைகள் என அழைக்கப்படும் இந்த உயிரினத்தை ஆங்கிலத்தில் சீ அனிமோன் என்கிறார்கள். ஆக்டினாய்டியா என்பது இதன் விலங்கியல் பெயர். அரை செ.மீ. முதல் 6 அடிவரை அழகிய ஆரங்கள் கொண்ட வட்ட வடிவத்தில் அழகான தோற்றம் உடையவை.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிற்றினங்கள் இருந்தாலும், இந்த உயிரினங்கள் தமது வாழ்நாள் முழுவதும் கடலுக்குள் ஒரே இடத்திலேயே பட்டா போட்டுக் கொண்டு உயிர் வாழ்கின்றன. கால்களே இல்லாத இந்த உயிரினங்கள் ஆபத்து என்று தெரிந்தால் மட்டுமே ஒரு மிதவையைப் போல் மிதந்து வேறு இடத்திற்கு நகர்ந்து சென்று அமர்ந்து கொள்கின்றன

சுருக்கங்களுடன் கூடிய வட்ட இதழ்களை அற்புதமாக விரித்து கடலின் அடிப்பகுதியில் மணல் பரப்பிலோ அல்லது பாறைகளிலோ ஒட்டிக் கொண்டு உயிர் வாழ்கின்றன. இதன் வயிறு ஒரு குழாய் மூலம் இதழ்களோடு இணைந்திருப்பதுடன் உடலின் நடுவில் வயிறே வாய் போன்றும் செயற்பட்டு மற்ற மீன் இனங்களை விழுங்குகின்றன.

இவற்றின் வகைகளில் சில மட்டும் தமது அழகிய இதழ்கள் மூலமாக மற்ற மீன்களைக் கவர்ந்து இழுத்து அருகில் வந்தவுடன் விஷ திரவத்தை வெளியேற்றிக் கொண்டு பின்னர் வாய் போன்று இருக்கும் வயிற்றுக்குள் தள்ளி மூடி விடுகின்றன.

ஆணின் உறுப்புக்களும் பெண்ணின் உறுப்புக்களும் ஒரே தாமரையில் அமைந்தவாறு சில வகைகள் மட்டும் இருபால் உயிரியாகவும் செயற்படுகின்றன. இருபால் உயிரினங்களாக இருப்பவற்றில் தாய்த் தாமரை பல துண்டுகளாகிச் சிதறிய பின்னர் அவற்றில் ஒவ்வொரு துண்டும் ஒரு புதிய உயிரியாக மாறி வளரத் தொடங்குகின்றன.

பெண் இனம் முட்டைகளை வாயாக இருக்கும் வயிற்றின் மூலமே வெளியேற்றுகிறது. முட்டைகள் கடலின் அடிப்பகுதியில் சுத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அதில் ஒட்டிக்கொண்டு சில நாள்களுக்குப் புழுக்களாகவே வாழ்ந்து பின்னர் உருமாறித் தாமரையாக மலர்கின்றன.

வளர்ச்சியடையும்போது நுண்ணிய பச்சைப் பாசிகளையும் சேர்த்துக் கொண்டு அதன் இதழ்களுக்கு அழகிய நிறத்தையும் தாவரங்கள் போன்ற தோற்றத்தையும் தருகின்றன. மேலும் இவை சேர்த்துக் கொண்ட பச்சைப்பாசிகள் ஓரினச் சேர்க்கை நடத்திக் கொண்டு தமது தேவை போக மீத உணவை தாமரைகளுக்கு தானாகவே கொடுத்து விடுகின்றன.

கோமாளி மீன்கள் எனப்படும் ஒரு வகை மீன் இனம் மட்டுமே கடல் தாமரைகளுக்குள் உயிர் வாழக்கூடியது. இம்மீன்கள் பிடித்துக் கொண்டு வரும் இரைகளையும் தாமரைக்கு கொடுக்கின்றன.

பொதுவாக மற்ற மீன்களை லாகவமாகப் பிடித்து விழுங்கும் கடல் தாமரைகள் கோமாளி மீன்களை மட்டும் விட்டு விடுகின்றன. துறவி நண்டுகள் எனப்படும் ஒரு வகை நண்டுகள் கடல் தாமரைகளில் உள்ள அழுக்குகளை சுத்தம் செய்து சாப்பிடுகின்றன. வயதாகிவிட்ட கடல் தாமரைகளை டாக்டர் இறால்கள் எனப்படும் மீன்கள் சுத்தம் செய்கின்றன. மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பச்சைக் கம்பள கடல் தாமரைகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

# நினைவாற்றலை அதிகரிப்பது எப்படி?



மிது

நினைவாற்றல் என்பது அனைவருக்கும் தேவையான ஒன்று. நினைவாற்றல் சுமாராக இருப்பவர்கள் கூட, நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள மூன்று முக்கியமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மூளையின் செயல்திறன் மற்றும் நினைவாற்றலை அதிகரிக்க எளிய வழி!

மூளையின் செல்களில் குளுகோஸ் சக்தியாக மாற ஆக்சிஜன் மிக மிக அவசியம். காரணம் மூளை தனது எரி பொருளாக குளுகோஸையே பயன்படுத்திக் கொள்கிறது. இவை நவீன விஞ்ஞானம் கூறும் உண்மைகள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மூளைக்கும் பிராண சக்திக்கும் இடையிலான தொடர்பு குறித்து எமது தந்திர யோகிகள் அறிந்திருந்தனர். மூளையின் இயக்கத் துக்கு பிராண வாயு (ஒட்சிசன் ) மட்டுமின்றி, பிராண சக்தி எனப்படும் பிராணனும் தேவை என்று தந்திர யோக நூல்கள் கூறுகின்றன. இந்தப் பிராண சக்தியை உடலில் அதிகரிக்கச் செய்து. மூளையின் செயல்திறனைப் பலமடங்கு அதிகரிக்கச் செய்யும் எளிய தந்திர யோக முறையே பிராண முத்திரையாகும்.

**செய்முறை:**

சிறுவிரல், மோதிர விரல் ஆகியவற்றின் நுனிப் பகுதியால் பெருவிரலின்நுனிப் பாகத்தைத் தொடவும், அதிக அழுத்தம் வேண்டாம் சற்றே தொட்டுக் கொண்டிருந் தால் போதும்,பிற இரு விரல்களும் (சுட்டுவிரல், நடுவிரல்) வளைவின்றி நேராக இருக்கட்டும்.

**அமரும் முறை:**

ஆசனங்களில் பரிச்சயம் உள்ளவர்கள் பத்மாசனம் அல்லது அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்து செய்யலாம். மற்றவர்கள் கால்களை மடக்கி அமர்ந்து செய்யவும் மாண வர்கள் படிக்க ஆரம்பிக்க முன்னர் நாற்காலி யில் அமர்ந்தபடியே இந்த முத்திரையைச் செய்யலாம், தலை, கழுத்து,முதுகு ஆகியவை வளைவின்றி நேராக இருக்க வேண்டும். இரு கைகளிலும், ஒரே நேரத்தில் செய்யவும். சுவாசம் இயல்பான நடையில் இருக்கட்டும். சீராகவும் ஆழமாகவும் இருப் பதுஅவசியம், மூச்சை அடக்குதல் கூடாது. குறைந்த பட்சம் 8 நிமிடங்கள், அதிக பட்சமாக 48 நிமிடங்கள் வரையில் செய்யலாம். சராசரியாக பள்ளி மாணவர்கள் காலையில் 16 நிமிடங்கள், மாலையில் 16 நிமிடங்கள் செய்யப் பழகிக்கொள்வது நல்லது.

**பயன்கள்:**

மூளையின் செயல்களுக்கு பிராண சக்தியும், பிராண வாயுவும் அதிக அளவில்கிடைப் பதால், மூளை சுறுசுறுப்பாகிறது. மூளை யின் செல்களிலுள்ள சோர்வு மறைந்து, புத்துணர்ச்சியுடன் மூளை செயற்பட ஆரம்பிக்கும். உடலிலுள்ள அனைத்துச் செல்களுக்குமே பிராணசக்தி அதிகளவில் பாய்வதால் உடலில் உள்ள அசதி, சோர்வு, சோம்பேறித்தனம் ஆகியவை மறைந்து, உடலிலும் ஒரு புத்துணர்வு உருவாகும். உடல், மூளை இரண்டின் செயல்திறனும் பலமடங்கு அதிகரிக்கும். உடலில் பிராண சக்தி அதிக அளவில் பாயும்போது, நாடிகளில் உள்ள சக்தித் தடைகள் அதிகரிக்கும். இவை தவிர பிராண வாயுவுக்கு வேறு ஒரு மிக முக்கியமான பணியும் உண்டு.

ஒட்சிசன் அதிகம் கிடைப்பதால் மூளையின் செயல்கள் சுறுசுறுப்படைந்தாலும், இடது மூளையின் செயற்பாடுகளே அதிகரிக்கும். பிராண சக்தி அதிக அளவில் செல்லும் போதுதான் வலது மூளையின் பணிகளான, பேச்சுத்திறன், எழுத்துத் திறன், கற்பனைத் திறன் ஆகியவையும் அதிகரிக்கும். நினை வாற்றலை அதிகரிக்கும் சக்தியும் பிராண முத்திரைக்கு உண்டு. பிராண முத்திரையைத் தொடர்ந்து செய்து நினைவாற்றலைப் பல மடங்கு அதிகரிக்கச் செய்யலாம்.

1. கவனமான பார்வை
2. ஆர்வம், அக்கறை
3. புதிதாகச் சிந்தித்தல்

இந்த மூன்றுக்குமே சிறப்பான பயிற்சி தேவை. அந்தப் பயிற்சிக்காக எந்தப் பயிற்சிக்கூடத் துக்கும்செல்ல வேண்டியதில்லை. எமக்கு நாமே பயிற்சி அளித்துக் கொள்ளலாம்.

ஒன்றிலிருந்து நூறு வரை எண்ணுங்கள், பின்னர் 2, 4, 6, என்று இரண்டு இரண்டாக எண்ணுங்கள். அதன்பிறகு 100 லிருந்து தலைகீழாக, 100, 98, 96 என்று இரண்டு இரண்டாகக் குறைத்துஎண்ணுங்கள். பிறகு நான்கு நான்காகக் குறையுங்கள். இப்படியே 5, 6, 7 வரை தாவித் தாவிகுறைத்து எண்ணுங்கள்.

இவ்வாறு ஏழு ஏழாக குறைத்து எண்ணக் கற்றுக்கொண்டீர்கள் என்றால் உங்களுடைய நினைவுத் திறன் நல்ல அளவில் வளர்ந் திருக்கிறது என்று அர்த்தம்.

இப்போது ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் ஒரு பத்தியில் எஸ்.எழுத்தையெல்லாம் எண்ணிக் குறித்துக் கொள்ளுங்கள். அடுத்து இரண்டு மூன்று பத்திகளில் உள்ள ஏ எழுத்தையெல்லாம் எண்ணிக் குறித்துக் கொள்ளுங்கள்.

இப்போது மீண்டும் ஒரு முறை திருப்பிப் பார்த்தீர்கள் என்றால், எத்தனை எஸ் அல்லது ஏ யை எண்ணாமல் விட்டிருப்பீர்கள் என்று தெரிய வரும். அதை வைத்து உங்கள் நினை வுத் திறனின் அளவை நீங்கள் தெரிந்து கொள் ளலாம். புதிய சிந்தனை மூலமும் நினைவுத் திறனை அதிகமாக வளர்த்துக்கொள்ளலாம்.

தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்களைப் பாருங்கள். அந்த விளம்பரம் பற்றி ஓரளவாவது ஆராய்ச்சி செய்யுங்கள். வேறு எந்த மாதிரி இந்த விளம்பரம் இருந்திருந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். சிந்திக்கச் சிந்திக்க மூளையின் சிந்திக்கும்ஆற்றல் வளர்வதோடு நினைவாற்ற லும் அதிகரிக்கும். முயன்று பாருங்கள்.

இதேபோன்று இன்னொரு பயிற்சி. உங்கள் நெற்றியை கற்பனையாக நீங்களே 6 அறைக ளாகப்பிரித்துக்கொள்ளுங்கள். ஓர் அறையை இழுங்கள் அதில் மறுநாள் 9 மணிக்கு யாரை யாவது சந்திப்பதாக எழுதிப் போடுங்கள். பின்னர் அந்த அறையை இழுத்து மூடுங்கள். இதேபோன்று இரண்டாவது அறையைத் திறந்து இன்னொரு விடயத்தை எழுதிப் போடுங் கள். அதேபோன்றுஅடுத்தடுத்த நான்கு அறை களுக்கும், இப்படிச் செய்துவிட்டால் இரவு படுக்கையில் படுத்ததும் உங்களுக்கே ஆச்சரி யமாக இருக்கும்.

இந்த 6 விடயங்களும் அடுத்தடுத்து உங்களை அறியாமலே உங்கள் மனதில் தோன்றும். இன்னும் இதேபோன்று நீங்கள் கூட புதிய புதிய முறைகளைக் கையாண்டு உங்களது நினை வாற்றலை வளர்த்துக்கொள்ளலாம். புத்தகங்க ளைப் படிப்பது, காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருந்து அன்றைய நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவது, அப்பியாசங்கள் செய்வது இதனா லெல்லாம் கூட உங்கள்சிந்திக்கும் திறனையும், நினைவுத் திறனையும் வளர்த்துக் கொண்டே போகலாம். உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஓர் இயந்திரம். அதிலும் இதயமும், மூளையும், ஓய்வில்லாத இயந்திரங்கள். இதயம் ஓய்வு எடுத்துக்கொண்டால் வாழ்க்கை நின்றுவிடும். மூளைக்கு ஓய்வு கொடுத்தால் அது துருப் பிடித்துப் போய் ஒன்றுக்கும் பயனற்று வாழ்க்கை முன்னேற்றம் நின்றுபோய்விடும். ஆகையால் எந்த நேரமும் மூளைக்கு ஏதேனும் வேலை கொடுத்துக் கொண்டே இருங்கள். நினைவாற்றலை மேம்படுத்துங்கள். நினைத்ததைச் சாதியுங்கள்.

இந்த உலகத்தில் ஒருவரைச் சுட்டி இவருக்குத் தான் அறிவு அதிகமாக உள்ளது என்று குறிப் பிட முடியாது. ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ் வொரு வகையில் அறிவாளியாக, புத்திசாலியாக இருப்பர். அறிவு என்பது சிந்திக்கும் திறனையே குறிக்கிறது. எந்தச் சமயத்தில் எப்படிச் சிந்தித் தால் எப்படிவெற்றி கிடைக்கும் என்பதைச் சரி யாக யார் சிந்தித்து அறிவைப் பயன்படுத்து கிறார் களோ அவர்களே புத்திசாலிகள் மற்றும் மிகுந்த அறிவுள்ளவர்கள்.

## எட்டிப் பார்த்துப்போன நிலா



பூமியின் துணைக்கோள் எது? 'நிலா'என்று பாடசாலையில்கூட உங்களுக்குச் சொல்லித் தந்திருப்பார்கள். ஆனால், பூமியைச் சுற்றித் தற்காலிகமாக நிலாக்கள் சுற்றி வருவது பற்றி தெரியுமா? கடந்த 2 வருடத்துக்கு முன்னால் இப்படி ஒரு தற்காலிக நிலா, உலா வந்து சென்றதை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் சொல்லி யிருக்கின்றனர்.

இந்தத் தற்காலிக நிலா 2006 ஆம் ஆண்டு முதல் 2007 வரை பூமியைச் சுற்றி வந்திருந்தது. இது சுமார் 5 மீற்றர் விட்டத்தில் இருந்ததாம். பூமியின் சுற்றுப் பாதை யில் இப்படி ஒரு விண்கல் (குறுங்கோள்) சுற்றிவருவதைப் பார்த்த விஞ்ஞானிகள், ரொக்கெட் அல்லது செயற்கைக்கோளின் சிதைந்த பாகம் என்று நினைத்துள்ளனர். அதை விஞ்ஞானிகள் தெளிவாக ஆராய்ந்தனர். அது ஒரு தற்காலிக நிலா என்று கண்டுபிடித்து தெரிவித்தது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள கார்ன்பெல் பல்கலைக்கழகம்.

இது பூமியின் சுற்றுப்பாதைக்கு எப்படி வந்திருக்கும்? அதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்பு விசை என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர். ஈர்ப்பு விசையால் தற்காலிகமாக ஈர்க்கப்பட்டு, பூமியின் சுற்றுப்பாதைக்குள் வந்த அந்த விண்கல், இரண்டு ஆண்டுகள் சுற்றிவிட்டுப் போய்விட்டதாம்.

1846 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரைக்கும் இவ்விதம் நூற்றுக்கணக்கான தற்காலிக நிலாக்கள் பூமியை உலா வருவதும் போவதுமாக இருந்திருக்கின்றன என்று கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

உதயன்
16.04.2014

16.04.2014

# பருவநிலை மாற்றத்தால் வெடிக்கப்போகிறது போர்



(இணையவன்)

தண்ணீர் வளத்தைக் கைப்பற்ற எதிர்காலத்தில் மூன்றாவது உலகப் போர் வெடிக்கலாம் என்று சுற்றுச்சுழல் அறிஞர்கள் முன்பு எச்சரித்தபோது, நம்பமுடியாத ஒன்றாகத்தான் இருந்தது. ஆனால், இப்போது ஐ.நாவின் துணை அமைப்பான ஐ.பி.சி.சி. (பருவநிலை மாற்றம் பற்றிய பன்னாட்டு அரசுக் குழு -Intergovernmental Panel on Climate Change) அந்தக் கணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறது.

எதிர்காலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு, உணவுப் பயிர் உற்பத்தி போன்றவை கடுமையாகப் பாதிக்கப்படும். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இதன் காரணமாகப் போர் வெடிக்கலாம் என்று ஐ.பி.சி.சி. சமீபத்தில் எச்சரித்திருக்கிறது.

பருவநிலை மாற்றம் (Climate Change) உலகின் அனைத்துக் கண்டங்களிலும் பெருங்கடல்களிலும் ஏற்கெனவே பற்றியெரிந்துவரும் சுற்றுச்சூழல் பிரச்சினை யாக இருக்கிறது. வெள்ளம், புயல், கடுமையான மழைப்பொழிவு, வெப்பஅலை, வறட்சி, காட்டுத்தீ போன்ற பருவநிலை மாற்ற தீவிர பிரச்சி னைகள் சமீபகாலத்தில் அதிகரித்துள்ளன. ஆனால், அந்த ஆபத்துக்களை எதிர்கொள்ளவோ, சமாளிக்கவோ, தடுக்கவோ இந்த உலகம் இன்னும் தயார்ப்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறது என்றும் ஐ.பி.சி.சி. எச்சரித்துள்ளது.

பருவநிலை மாற்றம் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான 2,600 பக்க அறிக்கையை ஜப்பான் நகரம் யோகஹாமாவில் ஐ.பி.சி.சி. சமீபத்தில் வெளியிட்டது. இந்த ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கையில்தான் மேற்கண்ட முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஐ.பி.சி.சி.யில் நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள், அரசுப்பிரதிநிதிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.



### யாரும் தப்பிக்க முடியாது

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து இந்த உலகத்தில் யாரும் தப்பிக்க முடியாது என்று எச்சரிக்கிறார் ஐ.பி.சி.சி. அமைப்பின் தலைவரும் இந்திய விஞ்ஞானியுமான ராஜேந்திர பச்சௌரி. மழைபொழியும் முறை மாறும், வறட்சி அதிகரிக்கும் என்பதால் வசிப்பிடம், சொத்துகள், உணவு, தண்ணீர் போன்றவை கடுமையாக பாதிக்கப்படும். இதன் விளைவாகப் பட்டினியும், இடப்பெயர்வும், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான போட்டியும் அதிகரிக்கும்.

பருவநிலை மாற்றத்தால் துருவக்கரடிகள், பவழத் திட்டுகள், மழைக்காடுகள் மட்டும் ஆபத்தில் இல்லை. உண்மையான ஆபத்து மனிதர்களுக்குத்தான் என்கிறார் கிரீன்பீஸ் அமைப்பின் அரசியல் ஆலோசகர் கைசா கோசனன்.

உலகுக்கு ஏற்பட்டுள்ள நிஜமான ஆபத்தைத் தெள்ளத் தெளிவாக, அறிவியல்பூர்வமாக ஐ.பி.சி.சி. அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அதை உணர்ந்து செயல்படத் தவறினால், பயங்கரமான பின்விளைவுகளை நாம் எதிர்கொள்ள நேரிடும்.

### யார் காரணம்?

இந்த மோசமான மாற்றங்கள் அனைத்துக்கும் காரணம் மனிதச் செயற்பாடுகள்தான். கட்டுமீறிய நுகர்வுக் கலாசாரமும், சுற்றுச்சூழல் சீரழிவும்தான் அந்தக் காரணங்கள்.

மின்சாரம், பெட்ரோல் போன்ற எரிபொருள்களை நாம் அதிகம் பயன்படுத்துகிறோம். மின்சாரம் தயாரிக்க அதிகமாகப் பயன்படுத்தப்படும் நிலக்கரியும், மற்ற எரிபொருள்களும் காபனீரொக்சைட், மீதேன் உள்ளிட்ட வாயுக்களை அதிகமாக வெளியிடுகின்றன. இவை பூமியின் வெப்பநிலை கடுமையாக அதிகரிக்கக் காரணமாக அமைகின்றன. இது புவி வெப்பமடைதல் (Global warming) எனப்படுகிறது.

கடல்மட்ட உயர்வு, பனிச்சிகரங்களும் துருவப் பனிப்பாறைகளும் வழக்கமற்று உருகி வருவதற்குக் காரணம், மனிதச் செயற்பாடுகளால் தீவிரமடைந்த புவி வெப்பமடைதல் தான் என்று ஐ.பி.சி.சி. ஏற்கெனவே எச்சரித்திருக்கிறது. அதனால் ஏற்படும் பின்விளைவுகள் காலநிலை மாற்றம் எனப்படுகிறது.

### முக்கிய பாதிப்புகள்

காலநிலை மாற்றத்தின் ஒரு பகுதியாக, உலக சராசரி வெப்பநிலை தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்ததைவிட அதிகபட்சமாக 4 டிகிரி செல்சியஸ் உயரும். சராசரி வெப்பநிலை 1 முதல் 2 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் போதே, பின் விளைவாக உருவாகும் ஆபத்துகள் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிடும்.

2100 இற்குள் கடல் மட்டம் ஒன்று முதல் இரண்டரை அடி வரை உயரும். விவசாயம் பாதிக்கப்படும் என்பதால் அரிசி, கோதுமை, சோளம் போன்ற முதன்மை உணவுப் பயிர்களின் உற்பத்தி சரியும். உலகின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பதால், கொசுக்களாலும் தண்ணீராலும் பரவும் தொற்று நோய்கள் அதிகரிக்கும்.

இந்தக் கணிப்புகள் எதுவும் நம்மைப் பயமுறுத்துவதற்காகக் கூறப்படுபவை அல்ல. அனைத்தும் வலுவான அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் முன்மொழியப் பட்டிருக்கின்றன.

### வருவாய் இழப்பு

தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது 2 டிகிரி செல்சியஸ் சராசரி வெப்பநிலை அதிகரித்தால், சர்வதேச ஆண்டு வருமானத்தில் அதிகபட்சமாக 2 சதவீத இழப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.



ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்ந்தால் இந்தியா போன்ற நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) 1.7 சதவீதம் சரியும். இது 3 சதவீதம் வரை அதிகரிக்கலாம் என்கிறார் இந்திய ஆராய்ச்சியாளர் சுரேந்தர் குமார். இதன்காரணமாக ஏழ்மை அதிகரிக்கும், பொருளாதாரச் சரிவுகள் பரவலாகும். உணவுப் பொருள் விலையேற்றத்துக்கும் பருவநிலை மாற்றத்துக்கும் தொடர்பிருப்பதாகக் கணிக்கப் பட்டுள்ளது. தொடர்ச்சியாக போர்களும் மூளலாம்.

### முக்கிய ஆபத்துகள்

பருவநிலை மாற்றத்தால் ஆசியாவில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, வங்கதேசம், இலங்கை, மாலை தீவுகள் அதிகம் பாதிக்கப்படலாம்.

வெள்ளம், புயல், கடுமையான மழைப்பொழிவு, வெப்பஅலை, வறட்சி, காட்டுத்தீ போன்ற பருவநிலை மாற்றத் தீவிரப் பிரச்சினைகள் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன. மழைப்பொழிவில் ஏற்படும் மாற்றம், நன்னீர் ஆதாரங்களின் அளவிலும், தரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். நன்னீர் கிடைக்கும் வீதம் சரியும். இமயமலை பனிச்சிகரங்கள் சுருங்கும் என்பதால், அவற்றை நம்பியுள்ள ஜீவநதிகளில் தண்ணீர் வரத்துக் குறையும்.

இமாலய நதிப் பாசனப் பகுதிகளில் நன்னீர் ஆதாரம் குறையும் என்பதால், இந்த நூற்றாண்டின் மத்தியில் இந்தியா-தெற்கு ஆசியாவில் உள்ள மற்ற நாடுகள் இடையே போர் வெடிக்கலாம்.

பருவநிலை மாற்றம் ஏற்படுத்தும் பாதிப்புகளுக்கு ஏற்ப தேசிய பாதுகாப்புக் கொள்கையிலும் மாற்றம் உருவாகும்.

# விஞ்ஞானிகளை குழப்பிய விண்வெளி ரகசியம்!



விண்வெளிக்குச் சென்று திரும்பிய செரிப் பழ விதைகள் 6 ஆண்டுகளுக்கு முன்பாகவே பூக்கத் தொடங்கியுள்ளதால் விஞ்ஞானிகள் குழப்பம் அடைந்துள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற ஜப்பான் விஞ்ஞானிகள் தங்களுடன் செரிப் பழ விதைகளைக் கொண்டு சென்றனர்.

தொடர்ந்து 8 மாதங்களாக அங்கேயே வைக்கப்பட்டு இருந்த விதைகளைப், பின்பு ஜப்பானுக்கு கொண்டு வந்து நட்டு வைத்தனர்.

பொதுவாக செரி மரங்கள் 10 ஆண்டுகளுக்கு பிறகு தான் பூக்கத்தொடங்கும். ஆனால் விண்வெளிக்குச் சென்று திரும்பிய செரி விதை மூலம் வளர்ந்த மரங்கள், 4 ஆண்டுகளிலேயே பூக்கத்தொடங்கி விட்டன.

எப்படி 6 ஆண்டுகளுக்கு முன்பாகவே பூக்கத் தொடங்கியிருக்கும் என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.



# இயற்கையிலிருந்து எடுத்த நகல்கள்

என். ராமசந்திரன்

அறிவியலாளரில் இரண்டு வகையினர் உண்டு. இயற்கையில் இருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்திய நியூட்டன் போன்றவர்கள் கண்டுபிடிப்பாளர்கள். புதிய சாதனங்களை உருவாக்கிய எடிசன், கிரஹாம் பெல் போன்றவர்கள் புதுப்புனைவர்கள். பல சமயங்களில் இந்த இரு வகையினரைப் பிரித்துக் காட்டும் கோடு மங்கி விடுகிறது. ஏனெனில் பல புதுப் புனைவுகள் முன்னரே விலங்குகளிலும் தாவரங்களிலும் காணப் படும் சிறப்பு அமைப்புகளை ஒத்தவையாகவே உள்ளன.



கண்ணின் அமைப்பை, ஒளிப்படக் கருவி களும், வெளிக்காது மற்றும் காதின் உட்புறத் திலுள்ள செவிப்பறையின் அமைப்பை, ஒலி பெருக்கிகளும் பெரிதும் ஒத்திருப்பதைக் காண் கிறபோது அவை அசல் படைப்புகளா அல்லது இயற்கையை நகல் எடுத்ததா என்ற சந்தேகம் எழும். சிட்டுக்குருவியின் அலகின் உட்பகு தியைப் பார்த்த ஒரு விவசாயி நெல்லின் உமியை அரிசி உடையாமல் நீக்கும்படியான இயந்திர உறுப்பை வடிவமைத்தார். கேற்றி லின் மூடியை நீராவி தூக்குவதைப் பார்த்த ஜேம்ஸ் வாட்டுக்கு நீராவியின் அழுத்தத்தைக் கொண்டு இயங்கும் ஓர் எந்திரத்தை உருவாக் கும் திட்டம் மனதில் தோன்றியது.

சுவிற்சர்லாந்தில் ஜார்ஜ் த மெஸ்ட்ரல் என் பவர் தன் நாயுடன் காட்டுக்குள் உலாவப் போனபோது சில புதர்ச் செடிகளின் விதைப் பைகள் அவருடைய காற்சட்டையிலும் நாயின் மயிரடர்ந்த உடலிலும் ஒட்டிக்கொண்டதைப் பார்த்தார். எவ்வளவு உதறினாலும் அவை கீழே உதிரவில்லை. அவர் அவற்றை வீட்டுக்கு எடுத்துப் போய் ஓர் உருப்பெருக்கிக் கண்ணாடி மூலம் பரிசோதித்தார். அவற்றின் மேற்பரப்பில் ஏராளமான நுண்ணிய கொக்கிகள் தென்பட் டன. அந்தக் கொக்கிகள் உடையிழைகளிலும் நாயின் மயிரிலும் சிக்கிக் கொள்ளுமாறு அமைந்திருந்தன.

தாவரம் தன்னிடத்திலிருந்து நீண்டதூரம் சென்று விதைகள் தரையில் விழுமாறு செய்ய தன் விதைப்பைகளில் கொக்கிகளை உரு வாக்கிக் கொண்டிருக்கிறது. எமது ஊரிலும் நெருஞ்சி, நாயுருவி போன்ற செடிகளின் விதை கள் இவ்வாறு எமது உடைகளிலும் விலங்கு களின் உடலிலும் ஒட்டிக்கொண்டு வேறிடங் களில் சென்று விழும்.

விதைகளைப் பரவலாக விநியோகம் செய்ய தாவரங்கள் பலவிதமான உத்திகளைக் கையாளு கின்றன. எருக்கஞ் செடியின் காய் முற்றிய வுடன் வெடித்துச் சிதறும் விதைகளின் பஞ்சு போன்ற இழைகள், விதைகள் காற்றில் பறந்து தொலைவில் சென்று விழ உதவுகின்றன.

கடற்கரையில் வளரும் இராவணன் மீசை என்ற செடியின் விதைகளின் நீட்சிகள் ஒரு பந்தைப் போல விரிந்து காற்றின் திசையில் ஓடச் செய் யும். கடற்கரைகளிலுள்ள தென்னை மரங்களி லிருந்து விழுந்த மட்டைத் தேங்காய்கள் கடலில் மிதந்து சென்று உலகு முழுவதும் பரவியிருக்கின்றன.

மெஸ்ட்ரல் ஒரு படலத்தில் கொக்கிகளையும் இன்னொரு படலத்தில் வளையங்களையும் அமைத்து இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ள வைக்கலாம் என்று திட்டமிட்டார். எட்டு ஆண்டுகள் உழைத்து அவர் வெல்க்ரோ' என்ற அமைப்பை உருவாக்கினார்.

அவற்றை இலேசாக ஒரு திசையில் தடவினால் ஒட்டிக் கொள்வதோடு எதிர்த்திசையில் இழுத்து எளிதாகப் பிரிக்கவும் முடிந்தது. இன்று பொத் தான்களுக்கும் 'ஸிப்' இணைப்புகளுக்கும் மாற்றாக வெல்க்ரோ உடைகளிலும், காலணி களிலும், பயணப் பைகளிலும் விண்வெளி ஓடங்களிலும் இரு பரப்புகளை ஒட்டி வைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

உலகெங்கிலும் ஆய்வாளர்கள் தாவரங்களி லும் விலங்குகளிலும் தென்படுகிற அசாதா ரணமானவையும் சாதுரியமானவையுமான அமைப்புகளைச் சோதித்து, மனிதர்களுக்கு உதவக்கூடிய தன்மைகளைக் கொண்ட நகல்களை உருவாக்க முனைந்திருக்கிறார் கள். உயிரியல் வழிப் பொருள் அறிவியல் என்ற புதியதோர் ஆய்வுக்களமாக வளர்ந் திருக்கிறது.

சிலந்தி இழை ஆய்வு அவற்றில் ஒன்று. சிலந் தியின் இழை சில குறிப்பிட்ட கலப்பு உலோக இழைகளை ஒத்த அடர்த்தியையும் நீட்சி வலுவையும் பெற்றுள்ளது. அதை ஐந்து மடங்கு நீளத்துக்கு இழுத்து நீட்டினாலும் அறுந்து போவதில்லை.

சிலந்தியிழையின் கூட்டமைப்புள்ள இழை களைச் செயற்கையாக உருவாக்கி, குண்டு துளைக்காத கவச உடைகள் தயாரிக்க பயன் படுத்துகிறார்கள். அவை கார், விமானம் ஆகிய வற்றின் உடல் பரப்புகளைக்கூட உருவாக்க உதவுகின்றன.

வீட்டுப்பல்லியின் பாத அமைப்பு இயற்கை யின் அற்புதப் படைப்புகளில் ஒன்று. பல்லி எத்தகைய பரப்பிலும் செங்குத்தாக விரைந்து ஏறவும், உட்கூரையில் தலைகீழாக நடக்கவும் அது உதவுகிறது. பல்லியின் பாதத்தை எலக்ட் ரான் நுண்ணோக்கியின் மூலம் பார்த்தால் அதில் லட்சக்கணக்கான, நுண்ணிய மயிர்க் கால்கள் தெரியும். அவை பல்லியின் எடை யைத் தாங்குமளவுக்குச் சுவரில் ஒட்டிக் கொண்டாலும், பல்லி தன் கால்களை எளிதாக எடுத்து வைக்கவும் முடியும்.

தற்போது ஆய்வாளர்கள், விண்வெளி வீரர்கள், மலையேறிகள் போன்றவர்களின் காலணி களில் பல்லியின் பாதத்தைப் போன்ற அமைப் புகளைப் பொருத்த முயற்சி செய்து வருகிறார் கள். கையுறைகளில் அவற்றைப் பொருத் தினால் ஸ்பைடர்மான்போல சுவர்களில் தொற்றிக்கொண்டு ஏறி விடலாம்.

இவ்விடயங்களில் முக்கியமான அம்சம் என்ன வெனில், தனிப்பட்ட சிலந்தியிழையும் பல்லி யின்பாத இழையும் வலுவற்று எளிதில் உடை யும் தன்மைகள் கொண்டவையாயுள்ளன. ஆனால் அவை ஆயிரக்கணக்கில் அணி வகுத்திருக்கிறபோது அவற்றுக்கு அசாத்திய வலுவும் உறுதியும் ஸ்திரத்தன்மையும் உண்டாகி விடுகின்றன. பட்டுப்பூச்சிக் கூட்டின் இழையிலும் இதே விளைவு ஏற்படுகிறது.


நாம் சிறுவயதில் படித்த ஒரு கதையில் ஒரு தகப்பன் தன் மகன்மாருக்கு ஒற்றுமையின் பலத்தை விளக்குவதற்காக ஒரு விறகுக்கட்டை அவிழ்த்து ஒவ்வொரு விறகாக உடைக்கச் சொல்லுவார். அவர்கள் எளிதாக உடைத்து விடுவார்கள். பிறகு விறகுகளை ஒன்றாக சேர்த்துக் கட்டி அந்த விறகுக் கட்டை உடைக் கச் சொல்லுவார். அவர்களால் அது முடியாது போய்விடும்.

அதேபோல தனித்தனியாக வலுவற்ற துகள் கள் ஓர் ஒழுங்கான அமைப்பில் சேர்ந்து ஒரு பொருளாக உருப்பெறும்போது அந்தப்பொருள் மிகுந்த வலிமையுடையதாகி விடுகிறது. வைரம் போன்ற தாதுக்களிலும் கரிமப் படிகங்களிலும் இந்த விளைவைக் காணலாம். கனடாவிலுள்ள மாக்கில் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பற்களின் மேற்பரப்பிலுள்ள கடினமான எனாமலையும், சிப்பி ஓடுகளின் உட் பரப்பிலுள்ள படலத்தையும் ஆராய்ந்து அவற்றின் உறுதித் தன்மைக்கான கார ணத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

பல்லின் எனாமலில் ஏராளமான தண்டுகள் பல்லின் புறப்பரப்புக்கு லம்பமாகப் புரதங் களால் பிணைத்து வைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக உடலிலேயே உச்சபட்ச மான உறுதியுள்ளதாக எனாமல் அமைந்தி ருக்கிறது. அதேபோலச் சிப்பி ஓடுகளின் உட் பரப்பில் நுண்ணிய கல்சியச் சேர்ம வில்லை கள் புரதங்களாலும் பொலிசாக்கரை ஓடு களாலும் ஒன்றோடொன்று ஒட்டிவைக்கப் பட்டுள்ளன.

எனாமலிலோ, சிப்பி உட்பரப்பிலோ அழுத்த விசைகள் செலுத்தப்பட்டால் அந்தப் புரதப் பசைகள் நெகிழ்ந்து கொடுத்து அந்த விசை களைப் பரவலாக்கி நீர்த்துப் போகச் செய் கின்றன. அதன்மூலம் எனாமலும் சிப்பி ஓடும் உடையாமல் தப்பிக்கின்றன.

மாக்கில் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நுண் ணிய தண்டுகள் அற்ற செதில்களுடன் கூடிய கண்ணாடிகளை உருவாக்கியுள்ளனர். அவை அடிபட்டால் உடைந்து சிதறாது. அவற் றைச் சற்று வளைத்து நிமிர்த்தவும் முடியும். அத்தகைய கண்ணாடியாலான ஒரு பாத்திரம் கை தவறிக் கீழே விழுந்தால் கூட உடை யாமல் இலேசான நசுங்கலுடன் தப்பித்து விடும்.



---

மது



# திருமணம்: உண்மையான காதலின் சின்னமா?



ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடை யில் உள்ள உண்மையான அன்பை விட வேறு எதுவும் உணர்வு பூர்வமான தாக் கத்தை ஏற்படுத்துவதில்லை என்று அதை அனுபவிப்பவர்கள் சொல்வார்கள்.

எதிர்ப்பாலினத்தைச் சேர்ந்த ஒருவருடன் பெரும்பாலான நேரத்தைக் கழிப்பதோடு மட்டுமல்லாமல், உங்களுடைய நண்பர்கள் மற்றும் பிற உறவினர்களை விட அதிகமான பிணைப் புடனும் இருப்பீர்கள்.

காதல் அனைத்தையும் வென்று விடும், எதுவாக இருந்தாலும்! இந்த ஒரு வார்த்தை, பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. காதல் எப்போது பூக்கும், எதனால் வருகிறது என்று இங்கு பார்க்கலாம்.

ஆண் மற்றும் பெண்ணுக்கு இடையிலான அன்பு உடல் ரீதியான கவர்ச்சியாலும் வரும் என்றும் சொல்லலாம். ஏனெனில், ஆண் மற்றும் பெண் இருவருக்குமான உடலமைப்பு வெவ்வேறு விதமானது. இந்த உடல் ரீதியான மாற்றங்களால் ஈர்க்கப்படும் ஆணும் பெண் ணும் ஒன்றாகச் சேர்கின்றனர்.

ஓர் ஆணையோ அல்லது பெண்ணையோ உடல் ரீதியாக ஈர்க்கப்படுவதைக் காட்டிலும் மேலான உறவாக நட்பு உள்ளது. அந்த இரு வருக்கும் இடையில் சில பெரிய அளவிலான விருப்பங்களில் ஒருமித்த கருத்துக்கள் இருந் தால், காதல் மலரத் தொடங்கும். ஆண் மற்றும் பெண் இரண்டு பேரும் உடல் ரீதியாக ஈர்க் கப்பட்டும் அவர்களுக்கிடையில் பொதுவான விருப்பங்கள் இல்லாத போது அது காதலாக இருப்பதில்லை.

காதல் கொண்ட ஆணும் பெண்ணும் தங்களு டைய ஆன்மாவை உணர்வுபூர்வமாக ஒருமைப்படுத்த முயற்சி செய்வார்கள். ஆணும் பெண்ணும் எதிரெதிர் துருவங்களாக இருக்கும் பாலினத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்தப் பிணைப்பு மிகவும் பல மானதாக இருக்கும். இந்த உணர்வுபூர்வமான இணைப்பு மிகவும் பலமானதாக இருப்பதால் தான் மனிதர்களிடம் காதல் வாழ்கிறது.

பாரம்பரியமாகவே காதலிக்கும் நபர்களில் ஆண் மூத்தவராகவும், பெண் இரண்டு அல்லது அதிகமான வயது குறைந்தவரா கவோ இருப்பதாகவோ சொல்லப்பட்டு வந்தா லும், உண்மையான காதலுக்கு வயது இல்லை. உடல் மற்றும் நட்பு ரீதியில் இருவருக்கும் இடையில் பலமான உணர்வுபூர்வமான பிணைப்பு இருந்தால் போதும். உண்மை யில், மூத்த பெண்கள், வயது குறைந்த ஆண்களுடன் காதல் வயப்பட்டது தொடர்பாக நிறைய விடயங்கள் நிகழ்ந்துள்ளன.

பெரும்பாலும் உண்மையான காதலுக்கு ஏற் படும் இறுதித் தடையாக திருமணம் கருதப்படு கிறது. ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டால் அவர்களுடைய உணர் வுபூர்வமான பிணைப்பு பிரிக்க முடியாததாகி விடுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் யார் வேண்டுமானாலும், யாரை வேண்டு மானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். திருமணம் என்பது உண்மையான காதலின் அடையாளம் என்று சொல்லப்பட்டாலும் அதை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கில்லை.